சிவமயம்.

# சந்தானமணி.

இஃது

அச்சுவேலி தெற்கு: ரெகுநாதசோதிடரின்

புத்திரன்

**சபாபதிசோதிடர்**

அவர்களால்,

பல சோதிடநூல்களிலிருந்து திரட்டி

எவரும் இலகுவில்விளங்கக்கூடிய

உரையுடன்

பருத்தித்துறை

கலாநிதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

135016

யுவ௵ சித்திரைமீ.

1935.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

2
133.574

உ

சிவமயம்.

# நூன்முகம்.

கடல்புடைசூழ்ந்த புடவியிற் பொலிந்த சீவர்களெல்லாந் துன்பத்துக்காற்றாது இன்பத்தையே விரும்புவரென்பது எவருமொப்பமுடிவுசெய்வர்.

ஆறுவின்பதுன்பமானவை வினைக்கீடாகத் தொழிற்படுத்தலால் பிறப்பதென்பதனையுமெவரும் மறார்.

அங்ஙனந் தொழிற்படுத்துங்கால், குணகுணம் நிவிர்த்தி பிரவிர்த்தி, பொறிவழிச்சேறுமை, காலஅகால மென்றற்றொடக்கமான இலக்கணம் அமையவேண்டுவதில்லையென்பதனையும் ஒத்துக்கொள்ளார்.

இங்ஙனமாக, சிவனையும், வினையையும், செயலையும்பிரிவு காட்டிக் காலக்கிரமத்தோடு பண்படுமாறு செய்ய அறிவாகிய ஞானசத்தியை அதிகாரமுடையதாகத் தோற்றுவித்ததென்பதே முடிபு.

"உணர்வுருவாகியவுயிரொன்றல்லது
உடல்முதலனைத்துமுயிரல்பொருளே"

உயிருக்கு அறிவே ஸ்வரூபம்.

மெய்யறிவைத் தேடும்வழிநின்று தேடிப்பற்றினவர்க்குத் துன்பவழிசாராது எஞ்ஞான்றுமின்பவழி பொலிந்துமலிந்து விளங்கச் சிவாஞ்ஞை இடங்கொடுத்தபடியாம்.

திருவாதவூரடிகள் புராணம்.

மந்திரிச்சருக்கம் 4ம் பாட்டு.

அக்ககரின்மறையோரிலருள்புனைமாத்தியர்குலத்திற்
றன்னிகரில்லைசைவநெறித்தலைவனவன்றனித்தேவி
மின்னனையாடிருவயிற்றின்மென்கொடிபங்கினனருளாற்
றென்னவன்செங்கோன்முதல்வர்திருவவதாரஞ்செய்தார்.

என்னவே, தென்னவன்செங்கோன் முதல்வராகுந் திருவாதவூரடிகளைப் புத்திரராய்ப்பெற்றுக்கொள்வதற்குச் சம்புபாதாசிரயர் சில

ஞானவதியாராகும் பெற்றோர்க்கிருந்தசிறப்பு சைவநெறித்தலையன்பேயாமென்பது விளங்குதலானும், திருவவதாரத்திலேயே அரிமர்த்தனபாண்டியஅரசனின் செங்கோல்நடத்தும் முதன்மந்திரியாகும் பரிபக்குவம் நியதித்துள்ளவென்பது தெளிதலானும் பெற்றுக்கொள்பவரின் நன்னெறியாற்பிறப்பவரின் சிறப்புப்பிறத்தலானும், (சற்புத்திரர்) நற்பெற்றோர்மாட்டுரிமையாய்க் காலத்தை யதிஷ்டித்துத்தோன்றுமென்பதைக் கடைப்பிடித்து அரிய கல்விச்செல்வமானது நிரம்பப்பெறுதவறியேனை,

குடும்பசஞ்சீவியாய்க்குலவத் தனிமொழியாக இந்நூலை இயற்றி வெளியிடவேண்டுமெனப் பலர் கேட்டுக்கொண்டபடி எனது தாதை மூதாதை யெழுதிவைத்த சாஸ்திர ஏட்டுப்பிரதிகளிலும், ஏனைய அச்சுப்பிரதிகளிலுந் துறைதுறையாயிருந்தவைகளை யொருங்குசேர்த்துச் சந்தானமணியெனநாமமிட்டு, நல்லறமாகிய இல்லறச்செல்வசெல்விகள் இல்லறவிதிவிலக்குகளையிலகுவிலறிந்து துன்பவழியைத்தாக்கு இன்பத்தையும் தேகசௌக்கியத்தையும், தீர்க்காயுளையும், செல்வத்தையும், ஸாத்விகமயமான சற்புத்திரப்பேற்றையும் பெற்றுக்கொள்ளுதலாலேயே உலகங்கடைத்தேறுமென்னுஞ் சித்தாந்தத்தாலிதனை வெளியிடலானேன்.

ஆதலால் கல்விச்செல்வம்படைத்த வித்துவான்களாராய்ந்து இந்நூலின்கணுள்ள வழூஉக்களைத்திருத்தி இரண்டாம்பதிப்பிற்பதிக்குமாறுதந்து சிற்றறிவுடையேனினுழைப்பு ஈடு பெறுமாறு உதவிசெய்தும், மக்களுக்கு இதன்கண் விளங்கிக்காட்டும் காலஅகாலசுபாசுபங்களை எடுத்தோதி விளக்கியும், சைவநெறியாளர்களனைவருமிந்நூற்பயனைத் தம்மனவேட்டிலெழுதியொழுகின், பூமியில் பாவசம்பந்தமானவைகளெல்லாம் நசிக்கப்பட்டுப்புண்ணிய சம்பந்தமானவையாவும் விகசித்து மண்ணுலகம் பொன்னுலகம் போலச்சிறக்குமென்பது போதருதலாலுமென்க.

செ. ச.

உ

சிவமயம்.

# மதிப்புரை.

அச்சுவேலி

பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்.

அநாதிமலமுத்தராகியபரமசிவன் இப்பிரபஞ்சத்துட்பட்டுழலும் ஆன்மகோடிகளை அனுக்கிரகஞ்செய்யத் திருவுள்ளங்கொண்டு, பதினெட்டுவித்தைகளை வெளியிட்டருளினர். பதினெட்டு வித்தைகளாவன: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதம் நான்கும், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் அங்கம் ஆறும், புராணம், நியாயம், மீமாஞ்சை மிருதிஎன்னும் உபாங்கம் நான்கும், ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அருத்தவேதம் என்னும்இவைகளும் ஆம். இவற்றுள் வேதநான்கும் பிரமகாண்டமும் கருமகாண்டமும் உணர்த்துவனவாம். சிவாகமங்களும் பிரமகாண்டமாய்அடங்கும் என்ப.

இப்பதினெண் வித்தைகளுக்கும் சிவபெருமானே கருத்தா என்பது,

"சகல வித்தைகளுக்கும் கர்த்தா ஈசானர்"

எனச் சுருதியும்

"வேதநான்கும் பதினெட்டொடாறும் விரித்தார்க்கிடம்
பங்கமில் பதினெட்டொடு நான்குக் குணர்வுமா
யங்க மாறுஞ் சொன்ன ஒருமையாருடை யையனே"

எனத் தேவாரமும்,

"எக்கலைக்கும்பூதங்களெவற்றினுக்கும் பிரமனுக்குமீசனென்னத்
தக்கமுதல்பரப்பிரமஞ்சதாசிவனே மெனவேதஞ்சாற்றும்..."

எனப் புராணமுங் கூறுவதனால் உணரப்படும்.

வேதமாகிய புருஷனுக்கு சிக்ஷை மூக்கும், வியாகரணம் முகமும், கற்பம் கையும், நிருத்தம் காதும், சந்தோவிசிதி பாதமும், சோதிடம் கண்ணும் என்று சொல்லப்படும்.

“வசையில்புகழ் வயங்குவெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்” (பட்டினப்பாலை.)

“விளங்கும் வெள்ளி
சோதிக் கிறையயாபுறு மெல்லையிற் சூல்கொண் மேக
மூதக்க பாரிற் சொரிந்தென்ன”
(கந்தபுராணம்.)

“அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச் சங்களில்
பெருக்கவலி யுடனிற்கப் பேணியநல் லோரையெழத்
திருக்கிளரு மாதிரைகாட் டிசைவிளக்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க”
(பெரியபுராணம்.)

என்பன முதலியனவாகச் சங்கஇலக்கியம் புராணம், திருமுறை முதலியனவற்றிலெல்லாம் சோதிடப்பொருள்கள் வருகின்றன. இவற்றின் உண்மைப்பொருளை உணர்ந்துகோடற்குச் சோதிடஞானம் இன்றியமையாது வேண்டப்படும். இவைமுதலிய சிறப்புக்களினாலே, சோதிடக்கலையின் மாட்சி தெற்றெனப் புலப்படுகின்றது.

அரும்பொருட்கலையுணர்வும், திரம்பெறு புத்தியும் நிரம்பப்பெற்ற பெரியோர் பலர் பற்பல சோதிடநூல்களை ஆரியத்தினின்று செந்தமிழில் மொழிபெயர்த்துத் தந்தார்கள். அந்நூல்கள் சிலவற்றினின்றும் நூற்றின்மிக்க பாட்டுக்களை ஒருங்குதிரட்டி, சந்தானமணி எனப் பெயர்தந்து, ஓர் உரையோடு வெளியிட்டார் அச்சுவேலி ஸ்ரீமத். செ. சபாபதிச்சோதிடராவர். இந்நூலின்கண்ணே, பெண்கள் ருதுவாகுங்காலம், கருப்ப உற்பத்திக்காலம், பிரசவகாலம் முதலிய விஷயங்கள் எல்லாம் தெளிவாகக் காணப்படுகின்றன.

இந்தச்சிறந்த சந்தானமணி என்றும் நின்று நிலவும்வண்ணம் சிவபெருமான் திருவருள்புரிக.

## ஸ்ரீமத். வே. கணபதிப்பிள்ளை,

பண்டிதர்.

(அல்வாய், தற்காலம் அச்சுவேலிதெற்கு.)

கிண்ணகன் ஞாலத்துவைகும் மக்கள் தத்தம் வாழ்க்கைத்துணையாக மடவாரைமணந்து இல்லறம்பூண்டொழுகுவது நன்மக்களைப் பெற்றின்புறற்கேயாம். அங்ஙனம் நன்மக்களைப்பெறுதற்கு இல்லறநெறிநிற்குந் தலைமக்களது ஒழுகலாற்றின் சிரியவியல்பு இன்றியமையாததாகின்றது. அவ்வியல்புகளாவன: பூப்புக்காலத்துப் பெண்களைத்தீண்டாமை, விரதகாலத்திற் சேராமை, பகற்காலத்திற்சேராமை, நன்னாளு மோரையும் நோக்கிச் சேர்தல் முதலியனவாம்.

இவ்வியல்புகளையும் இவற்றிற்கின்றியமையாத பிறவியல்புகளையுஞ் செறித்துத் தான் இதுகாறும் நூல்களைக்கற்று, நுண்ணிதினாராய்ந்துணர்ந்து கொண்டதன்பயனாக சந்தானதர்ப்பணமெனத் தகுந்தஇந்நூலைச் சந்தானமணியென்னும் பெயருடன் கைமாறுகருதாது உலகுக்குவந்தளித்த இந்நூலாக்கியோனாகிய ஸ்ரீமத். செகநாதன் சபாபதிச்சோதிடனின் உணர்ச்சி மிகவும் பாராட்டப்படத்தக்கது. இவரின்றாதை, மூதாதை முதலியோருஞ் சோதிடவுணர்ச்சியிற் கைவந்தாரென்பதனை இவர்செய்த இந்நூலே தெள்ளிதிற் புலப்படுத்துகின்றது. இது ஆண்பெண்ணாகிய இருபாலார்க்கும் அவசியம் வேண்டற்பாலதொன்றாதலால், ஒவ்வொருவரில்லங்கட்கும் இன்றியமையாததாகின்றது. ஆதலால் குற்றங்கள் விரவியிருப்பினும் அன்னம் நீரைப்பிரித்துவிட்டுப் பாலையுட்கொண்டு களிக்குமாறுபோல, குற்றங்களைநீக்கிக் குணங்களைப்பாராட்டி ஏற்றுக்கொள்ளுதல் ஆன்றோர்கடனாம்.

# விஷய அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| காப்பு ... ... | க |
| பெண்கள் ருதுவாகுங்காலம் | எ |
| கருப்பஉற்பத்திகாலம் | எ |
| ஸ்திரீபுருஷசங்கமம் ... | அ |
| கர்ப்பசம்பவகாலம் ... | கூ |
| கர்ப்போற்பத்திமுதற் சென்ன மனவுமுண்டாகுமங்கம் | கஉ |
| ஆண்பெண் கிரகநிலை ... | கஉ |
| கர்ப்பச்சிதைவு ... | க௩ |
| கர்ப்பமுதல்மாதாதிபதி | க௪ |
| இரண்டுமூன்றும்மாதாதிபதி | க௫ |
| நாலைந்தாறும்மாதாதிபதி... | கஎ |
| ஏழாம்மாதாதிபதி ... | கஅ |
| எட்டாம்மாதாதிபதி ... | கஅ |
| ஒன்பதாம்பத்தாம்மாதாதிபதி | ககூ |
| கர்ப்பாரிட்டமும், சுகமும் | உ௦ |
| பிரசவகாலம் ... ... | உக |
| மாதாப்பிணி ... ... | உஉ |
| பிதாப்பிணி ... ... | உ௩ |
| அரிட்டங்கள் ... ... | உ௪ |
| சுகப்பிரசவம் ... ... | ௩௦ |
| ஆண்பெண் ... ... | ௩க |
| ஆண் உற்பவம் ... ... | ௩உ |
| பெண் உற்பவம் ... | ௩உ |
| இரட்டைச்சென்மம் ... | ௩௩ |
| பெண்சென்மம் ... | ௩௩ |
| ஆண்சென்மம் ... ... | ௩௩ |
| அலிசென்மம்... ... | ௩௪ |
| புத்திரதோஷம் ... | ௪௩ |
| முகூர்த்தசுபாசுபவிளக்கம் | ௬௪ |
| வர்ஷசுபாசுபம் ... | ௬௬ |
| முக்குணவேளை ... | எ௦ |
| நவகுணவேளை ... | எக |
| திதிவிளக்கம் ... | எ௩ |
| யோககரமங்கள் ... | எ௫ |
| கரணசுபாசுபம் ... | எ௬ |
| நட்சத்திரசுபாசுபம் ... | எ௪ |
| நாசயோகம் ... ... | எகூ |
| கிழமை பிறந்தநட்சத்திரம் | எகூ |
| மாததினம் ... ... | அ௦ |
| கர்ப்பாதானத்துக்கு நாள் | அக |
| அச்சுவினிமுதல் ஜனனநாளின் சுபாசுபநட்சத்திரங்கள் | அ௪ |
| தம்பதிகளுக்கன்யோன்யமான நட்சத்திரங்கள் ... | கூ௫ |
| கர்ப்பாதானத்துக்கு அத்திபாலசியகம் நீக்கவேண்டியன | கூ௫ |
| திவேஷகலக்கினமாதியன | கூகூ |
| கர்ப்பாதானசுபாசிகள் | கூஅ |
| சுபமுகூர்த்தகிரகநிலை | கூகூ |
| புட்கபாதம் ... ... | க௦௦ |
| மிருத்துமுகூர்த்தம் ... | க௦உ |
| கர்ப்பம்நிறைந்து பிறத்தல் | க௦௩ |




சிவமயம்.

# சந்தானமணி.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

வேத சிகையும் விரிகலையும் மெய்யன்பர்
போதமும்போய்த் தீண்டாத பூரணமே—பேதமற
வந்தென்னைக் கூடுங்கால் வாழுஞ்சந் தானமணி
சந்தமுறச் செந்தமிழ்நீ தா.

## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

### தாண்டகம்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங்கொள்ளுங்கிழமையாங்கோளேதானும், பருகாவமுதமாம்பாலின்நெய்யாம்பழத்திலிரதமாம் பாட்டிற்பண்ணாம், ஒருகாலுமையாளோர்பாகனுமாமுண்ணின்ற நாவிற்குரையாடியாம், கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்கண்ணாங்கருகாவுமெந்தைதானே,

## அகவற்பா.

மலர்தலை யுலகினில் மக்க ளனைவரும்
புலனெறிக் குணமாப் போதம தீதமாய்
பலதலை மாயா பாசமேய்ப் புணரிநீ
ரலையென மொத்துண் டவல மெய்தி
நிலவிடு சுகமென தன்னியங் குன்றி
மலமக லறிவெனு மாணொளி மங்கிப்
பலகலை யறிவுரை பசாச வுரையென
அலகிலாத் துன்பவித் தாசையென் றோரர்
சிலபக லீங்கு சீவிப்ப துணரா
முலைமட மாதர்தம் மொய்ம்புகண் டிடை இ
பலமுத் மறைமொழிப் பஞ்சாங்கம் பாரா

ஆலகத்தில் விதிவிலக் கொன்றையு மூணர்ச
சிலபாத ஞாகயங் கிழைத்தே புழைத்த
பாலர்கள் பிணியாய்ப் பஞ்சமாய் நெஞ்சிற்
சீலம தின்றிச் சிறவா து கல
காலமாம் மாயிற் கடுகஞ் சிட்டும்
வாலை மங்கையர் வற்றப் பிணியால்
சால வாடிச் சகிதி மரணாய்
மாலைவார் குழலி மடந்தைய ருலகிற்
சாலவும் வறிதாய்க் தரணிவாய்ப் பிணியாய்
நிலவுவ தென்னே கேடு புடைகு
மூலகினி லாஹோ ஆழகற் குபிரோர்
சலமெனச் சடமாக் தாழ்வினிற் பாயும்
பலதொழிற் பண்பின் பலிப்பே வினைப்பயன்
ஆகசெய் தக்க வல்ல செயக்கெடும்
ஆக செய்தக்க செய்யாமை யுக்கெடும்
ஆவ தழித லான்கால தத்துவன்
கால சுபாசுபங் கரைவால் பதியருள்
என்ப துழுத்த விதுநா வியாவர்க்கும்
பொன்பொரு ளாகப் போற்றுதல் கடனே.

---

உ

சிவமயம்.

ஆதார ஆதேய சங்கற்பமாய், தோன்றிமறையுஞ் சாய்கையாய், நிவிர்த்தி பிரவிர்த்தியென்னுங் கிரமமாய், கற்பிக்கப்படும் உலகில் மக்களுக்கு இம்மை மறுமை எழுமைக்கும் உறுதுணையாகிய அறிவே உருவமாகிய உயிரைச் சுவரூபமாய்ப் பரிணமிப்பித்துச் சுகசைதன்னியமாய், முத்திக்குவித்தாய், முதற்காரணமான கருவியாய், தக்ஷிணாமூர்த்தியாற் சனகாதி முனிந்திரர் நால்வருக்கு உபதேசிக்கப்பட்டதாயுள்ளது கல்வியே.

கல்விஞானம்—பரோக்ஷம் அபரோக்ஷம் என இருவகையாய்க் கூறப்பட்டுள்ளது. பரோக்ஷம் பாருடைய அறிவால் அறியப்படுவது. சிரவணஞானம் என்றுகூறுவது. அபரோக்ஷம் சிரவணஞானத்துக்கு மேற்பட்ட ஸ்வாநுபவஞானம். பரோக்ஷஞானத்தைப் பாஹியமென்றும் ஆப்யந்தரமென்றும் இருபாகமாக்கிக்கூறுவர். ஆப்யந்தரஞானமாவது பிரகிருதிபுருஷஞானம், பாஹியஞானம்: சிக்ஷா கல்பம் வியாகரணம் நிருத்தம் சந்தஸ் ஜ்யோதிஷம் என்ற ஆறு அங்கங்களோடுகூடின நான்கு வேதங்களும் புராணங்களும் நியாயமும் பூர்வமீமாஞ்சாவும் தர்மசாஸ்திரங்களும் ஏனையவுமாம்.



உ

சிவமயம்.

# சந்தானமணி.

உலகினில் வாழ்வு பூண்டுளோன் சகல செல்வமுந் தினி திருந் தாலும், இலகிய மகவை இனிதினீன் றுதா னிருமையும் பயன்பெறானதனால், பலதவஞ் செய்தும் மகப்பெறல் வேண்டும் பாவுகன் னியர்தமை வேட்டல், நிலவுசந் ததியின் பொருட்டன் றிக் காமப் பொருட்டல்ல வெனமறை நிகழ்த்தும்.

இதன்பொருள்: உலகினில் வாழ்வுபூண்டுளோன்—உலகத்தில் இல்லறத்திற் பிரவேசித்தவரும் பிரவேசிப்பவரும், சகலசெல்வமுந்தினி திருந்தாலும்—அறம்பொருளின்பமாகிய எல்லாச்செல்வங்களையும்பெற்று நல்வாழ்விலமைந்திருப்பினும், இலகிய மகவையினிதினீன்றுதான்—

"பெறுமவற்றுள்யாமறிவதில்லையறிவறிந்த
மக்கட்பேறல்லபிற"

"தோன்றிற்புகழொடுதோன்றுக அஃதிலார்
தோன்றலிற்றோன்றாமைநன்று"

"கொச்சைமக்களைப்பெறுதலினக்குடி
எச்சமற்றேமாந்திருக்கைநன்றே"

இங்ஙனமாகத் தனக்கும் பிறருக்கும் ஒளியைக்கொடுக்கின்ற மக்கட்பேற்றைப்பெறுதலன், இருமையும் பயன்பெறான்-இம்மை மறுமையாகிய ஈரிடத்துமுள்ள சிறந்தபிரயோசனத்தையடையான், அதனால் இன்றியமையாச் சிறப்புடைமையால், பலதவஞ்செய்தும் மகப்பெறல்வேண்டும்—பூர்வ புண்ணியபலன் இல்லாதகாலத்தினும் பலபடவேதங்களிலே விதிக்கப்பட்டசிவதருமங்களைச்செய்து புத்திரப்பேற்றையடையவேவேண்டும். பாவுகன்னியர் தமைவேட்டல்—சற்கரும மதிப்பும் துர்க்கரும அவமதிப்பும் அறிந்த சீருடையாரால் துதிக்கப்படும் கற்பிற்சிறந்தபெண்ணை வரித்து விவாகஞ்செய்தல், நிலவுசந்ததியின் பொருட்டன்றி—சோடசகலைகளைப் பொருந்தி—இருளைத்துரக்கு குளிர்ந்த ஒளியைக்கொடுக்கும் சந்திரனை நிகர்க்கும் பிள்ளைப்பேற்றிற்காகவேயல்லாமல், காமப்பொருட்டல்லவென மறைநிகழ்த்தும்—

"போதந்தனக்கல்விபொன்றவருங்காலத்து
மாதர்மேல்வைப்பர்மனம்".

விதிவிலக்குகளையுணராது காமவசப்பட்டு அவ்விச்சையைத் தீர்த்தற்கல்லவென வேதங்கள் கூறும்.

கர்மகாண்டம் ஞானகாண்டம் என இரண்டுபிரிவாய் எங்களுக்குப் போதிக்கும் வேதமாகலின் மறைநிகழ்த்துமென்றும், திருவருள் பொருந்த வருவினையகலும், எனவே பலதவஞ்செய்தும் மகப்பெறல் வேண்டுமென்றும், காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றும் காமங்கெடக்கெடுகோய் நிலவுசந்ததியின்பொருட்டன்றிக் காமப்பொருட்டல்லவென்றுங் கூறினர். (௧)

ஆதலால் அதினு மாண்பெற்ற விம்மை மறுமையிற் பலனினி தளிக்கும், காதல்கூர் கின்ற பெண்மக வாயி னிம்மையிற் பலனில்லைக் கருதின், நிகிலா விவாகஞ் செய்தளித் திடுகில் மறுமையிற் திகழ்பலன் சேரும், பேதையர் தம்மைப் பெற்றனமென்று பேதுறல் மிகுபெரும் பிழையே.

இ—ள்: ஆதலால்—கூன் குருடு செவிடு முடம் பேதை பிணி அனுமரணம் ஆயுட்குறைவு மயக்கம் சோம்பல் பொய்ம்மை சோரமையும் அழகு கல்வியறிவொழுக்கம் ஐம்பொறியடக்கம் ஈகை இன்சொல் சிவகாருண்ணியம் தானம் தருமம் சிவபக்தி தீர்க்காயு சுகம் செல்வம் நிறைந்த மக்களைப்பெறுதல்வேண்டியதாதலாலே, அதினு மாண்பெற்ற விம்மை மறுமையிற் பலனினி தளிக்கும்—அவற்றுள் ஆண் பெண் என்னுமிருபாலுள் ஆண்பிள்ளையைப்பெற்றுக்கொண்டால் இம்மையிற்புகழையும் மறுமையில் பரமுத்தியையும் பெற்றவர்களுக்குத் தவறாதுகொடுக்கும், காதல்கூர்கின்ற பெண்மகவாயின் இம்மையிற் பலனில்லை—விருப்பத்தைப் பலதுறையினுங் கொள்கின்ற பெண்பிள்ளையைப்பெற்றால் இவ்வுகத்திலே பெற்றவர்களுக்குப் பலனில்லையாம், விவாகஞ்செய்தளித்திடுகில் மறுமையிற் திகழ்பலன்சேரும்—மணஞ்செய்துவைத்தால் மறுமையிலின்பத்தையடையக்கூடிய புண்ணியம்வந்துபொருந்தும், பேதையர் தம்மைப்பெற்றனமென்று பேதுறல் மிகுபெரும் பிழையே—ஆண்மகவாற் பிரயோசனமும் பெண்மகவால் அஃதில்லாமையெனினும, அவன் அவள் அதுவாய்த்தோன்ற அநாதிசங்கற்பமிருத்தலால் பெண்மகவைப் பெற்றுக்கொண்டோமேயென்று பெற்றவர்கள் துன்பங்கொள்ளுவது மிகுதியுங்குற்றமாகும். (௨)

துக்கமுற் றந்தப் பெண்சிறுர் தமக்கும் சூழுமக் கெற்பங்கள் தனக்கும், விக்கினஞ் செய்பி னளப்பிலாக் காலம் வெய்யபாழ் நரகிடை விழுவர், தொக்கவிக் கதையாற் சோடச மான பெண்சிறுர் வந்துதோன் றுகினும், மிக்கான் மனதிற் களிப்புறல் வேண்டு மென்னகால் வேதமும் விளம்பும்.



இ—ள்: துக்கமுற்று அந்தப் பெண்சிறுர் தமக்கும்—காத்தன் முதலியவைகளினுல் துன்பமெய்திப் பெண்குழந்தைகளுக்கும், சூழுமக் கெற்பங்கள் தனக்கும்—அநுமானவளவையால் இக்கர்ப்பம் பெண்சிசுவென்றறிந்து அந்தக்கர்ப்பத்துக்கும், விக்கினஞ்செய்யின் அளப்பிலாக்காலம் வெய்யபாழ் நரகிடைவிழ்வர்—அழியக்கூடிய காரியத்தைச்செய்தவர்கள் அளவில்லாதகாலம் கொடியதுக்கசாகரமான நரகத்திலேவீழ்ந்துவருந்துவார்கள், தொக்கவிக்கதையால்—இங்ஙனங்கூறியநியாயத்தால், சோடசமான பெண்சிறுர் வந்து தோன்றுகினும்—பதினாறு என்னுங்கணக்கில் பெண்குழந்தைகள் வந்துபிறக்கினும், மிக்கான் மனத்திற் களிப்புறல் வேண்டும் என்னகால் வேதமும் விளம்பும்—அறிவுமிக்க நல்லமனதிலே களிப்புக்கொள்ளவேண்டுமென்று நாலுவேதங்களுங்கூறும். (௩)

இருதுவா மதற்கு முன்னரும் கெற்ப மெய்திய காலத்தும் சுதனைக், கருதியின் றெடுத்து மாதரு தகந்தான் கலந்திடா திருக்குமப் போதும், பெருவய தாகி மாதரு தகந்தான் பெட்புறு திருக்குமப் போதும், ருதுவிடை மாதர் தமையணைந் திடுகி லவிபுரு வெடுத்துழைந் துழல்வார்.

இ—ள்: இருதுவாமதற்குமுன்னரும்—மங்கைப்பருவமாகும் ருதுவாகாதபொழுதும், கெற்பமெய்தியகாலத்தும்—உதரத்தில்கெற்பம் நிறைந்தகாலத்தும், அதனைக்கருதியின்றெடுத்து மாதருதகந்தான் கலந்திடாதிருக்குமப்போதும்—பிள்ளையைப்பெற்றுப் பின்னரும் மாதவிடாயானது வருவதற்குமுன்னரும், பெருவயதாகி மாதருதகந்தான் பெட்புறுதிருக்குமப்போதும்—அதிகவயதாய்மாதவிடாய்வாராது விட்டகாலத்தும், ருதுவிடைமாதர்தமை—வீட்டுக்குவிலக்காய் இருக்குங்காலமும், அணைந்திடுகில் அவிபுருவெடுத்துழைந்துழல்வார்—இங்ஙனம் விலக்கப்பட்டபருவங்களில் ஸ்திரீசங்கமஞ்செய்தவர்கள் மறுபிறப்பில், அலியாய்ப்பிறந்தும் இப்பிறப்பில் சுகம் செல்வம் வெட்சுபீகரம் இவைகளையிழந்து வருந்துவார்கள்.

1. ஓராந்தன்மாதமதிலோங்காளமுண்டாகி
2. ஈராந்தன்மாதமியாவும்வருத்தமதாய்
3. மூவாந்தன்மாதமதில்முன்மயக்கமுண்டாகி
4. நாலாந்தன்மாதமதில்நாயகனைத்தான்வெறுத்து
5. ஐந்தாந்தன்மாதமடிவயிறுருளாகி
6. ஆறாந்தன்மாதம்அடிவயிறுதான்கனத்து

7. ஏழாந்தன்மாதமிடைபருத்துத்தொக்கியதாய்
8. எட்டாந்தன்மாதமிருந்தெழும்பமாட்டாமல்
9. ஒன்பதாம்மாதம்உடம்புறைந்துநோவாகி
10. பத்தாந்தன்மாதமதிற்பாலகனைப்பெற்றெடுத்து.

இங்ஙனமாகப் பிள்ளைத்தமிழிற் கூறியபடி நாலாந்தன்மாதமதில் நாயகனைத்தான்வெறுத்தெனவும், இங்ஙேகெற்பமெய்தியகாலந்தொட்டு மாதர் தமையணைந்திடுகினிலிபுருவெடுத்துரைத்திழல்வார் என்பதனாலும், மூன்றுமாதவளவையில் கர்ப்பம் சுருபமாகுமென்பதனாலும், நாலாம்மாதமுதலாகக் கருப்பவதியாகும் பெண்ணைச்சங்கமஞ்செய்தல் பிணி பாவம் கஷ்டம் நேரிடக்கூடியதாதல் அனுபவத்திலறியக்கிடந்த துணிபாம். (அ)

பாவையர் பூப்பி னிருபுன லாடு நான் முதற் பன்னிரு நாளுந். தானிலாக் கெர்ப உற்பத்தி யேகா தசிதிர யோதசி தொடார்தினமீரைந்தும், மேவிய விரவின் நன்முகூர்த் தத்தில் வியன்கருப் புகுந்திடு மளவும், நாவலோர் சொன்ன நாளதிற் கூடல் நரர்புரி கடனென நவில்வர்.

இ—ள்: பாவையர்பூப்பின் இருபுனலாடும் நான்முதற் பன்னிருநாளும்—பெண்கள்மாதவிடாயாகி ஸ்நானஞ்செய்யக் குறித்தநான்காம்நாள் முதல் பன்னிரண்டுநாளெல்லையாக, தானிலாக்கெர்ப உற்பத்தியாகும்—குற்றமில்லாத கர்ப்போதயகாலமாகும், பதினாறுதினத்தின்மேல் கர்ப்போற்பத்திக்குணமில்லையேயாகும். அதில்-நான்காம்நாள்முதற் பதினாறும் நாளெல்லையாகச்சொல்லிய பன்னிரண்டுதினத்துள், ஏகாதசி திரயோதசி தொடார்—மாதவிடாயானதினம்முதல் பதினோராம்நாள் பதின்மூன்றாம்நாள் நிந்திதமென்று விலக்குவர். (தினமீரைந்தும்) எஞ்சிய பத்துநாட்களில், மேவியவிரவில் நன்முகூர்த்தத்தில்-பொருந்திய இராக்காலத்து பிதாமாதாகுலமிவர்கட்கும் உதிக்கும் புத்திரருக்கும் துன்பமகன்று இன்பம்பயப்பதான சுபசோபனமுகூர்த்தகாலத்து, வியன்கருப்புகுந்திடுமளவும்-பெருமைபொருந்திய சற்புத்திரர் உற்பவிப்பதைநினைந்து, நாவலோர்சொன்ன நாளதிற்கூடல் நரர்புரிகடனென நவில்வார்-காவ புருஷனதுயிஸ்தத்தால் வருஞ்சுபாசுபங்களையறிந்த வித்துவான்கள் நிச்சயித்த நான்முகூர்த்தந்தையாராய்ந்தறிந்து தம்மனையாளோடு கிஷேகித்தல் மக்களின்கடமையாகும். (இ)

பூத்தநாள் தன்னிற் புணர்ந்திடிற் புருடன் றன்னுடன் பூவையும் பொற்பும், வாய்த்தபுத் திரரும் மரணமாய் நாசத் தெய்துவர் வதியும்பூப் புறுமதி தன்னை, ஆப்தசெய் காணக் கூடிட நிகழு மன்றியே சுக்கிரன் றன்னைப், பார்த்திடக் கூட வருவது மாகும் பாரினில் நிகழ்த்தினர் பலனே.



இ—ள்: பூத்தநாள் தன்னிற்புணர்ந்திடில்—வீட்டுக்குவிலக்காய்க் குறித்ததினங்களில் ஸ்திரீபுருஷசங்கமஞ்செயில், புருடன் தன்னுடன்மனைவியும் பொற்பும்வாய்த்த புத்திரரும் மரணமாய் நாசத்தெய்துவர்—அங்ஙனம்சேர்ந்தபதிசதியும் அக்காலத்துற்பவித்த குழந்தையும் சிறப்புகளையிழந்து மரணத்துக்காளாகி மறுமையிலும் நாசத்துன்பத்தையடைவர், வதியும்பூப்பு—உலகத்தில் பெண்கள் ருதுவாவது அன்றிச் ருதுகமாவது கருப்பாதானம் செய்வதால் உண்டாகும் சுகதுக்கங்களுக்கு ஆதாரமாயும் புத்திராகிய ஆதேயத்தைஅதிஷ்டித்தும்விடாயன்றித் தாகத்தைத்குறிக்கும் நிகழ்ச்சி, உறுமதிதன்னை—இரண்டேகால் நட்சத்திரத்துக்கொரு ராசியாய் இருந்தபெயருஞ்சந்திரனை, ஆப்தசெய்காணக்கூடிடநிகழும்—பிரவிடைக்கும் உற்பத்திக்கும் ஆதாரபூதமுள்ள செவ்வாய் பன்னிரண்டு ராசிகளிலும் சஞ்சரிக்குந்தோறும் தனது நோக்காகிய 1-4-7-8ல் மதிவரப்பார்க்க பெண்கள் பிரவிடையாவார்கள், அன்றி—அல்லாமல், சுக்கிரன்றன்னை பார்த்திடக்கூடவருவதுமாகும்—வெள்ளியைச் செவ்வாய் தன்பார்வையாகிய 4-7-8ல் வைத்துநோக்கினும் கூடினும் பெண்கள் பிரவிடையாவார்களென்றுங்கூறும், பாரினில்நிகழ்த்தினர்பலனே—அங்ஙனம் நிகழும் ருது ஆதாரமாக உற்பத்திகூட்டுங்காலமும் பிதாமாதாவும் முதற்காரணம் துணைக்காரணம நிமித்தகாரணமாகப் பலாபலனை நிச்சயித்துவிடுவர். (ஈ)

[விதானமாலையிற்கூறியபடி.]

பூத்தவக் நாண்முத லொன்றும் பொருந்தா புணரினிரை
பார்த்த புமான்பெண் மகவு குழனிசாம் பண்புடைத்தா
மார்த்தப நாண்முத லீரா று நன்றெனபா ரங்கவற்றில்
சேர்த்தகு நாட்செப் புவன்செய்ய தாமரைக் கட்டிருவே.

இ—ள்: இருதுவானநான்முதல் நான்குநாளுங்கெற்பாதானம்பண்ணலாகாது. பண்ணினால் முதலுட்புருஷனுக்கும் இரண்டாம்நாள் பாரிக்கும் மூன்றாம்நாட் கர்ப்பத்திற்கும் நாலாம்நாட் பிறந்தகுழந்தைக்கும் அரிட்டமுண்டாம். ஆகையால் அந்நான்குநாளுங் கர்ப்பாதானம் பண்ணலாகாது. ஸ்நாதிக்கத்தமான ஐந்தாம்நான்முதல் பன்னிரண்டு நாளளவும் கர்ப்பாதானம்பண்ணப்படும். அதற்காகியநாள் மேற்சொல்லுவன். (எ)

மன்னுருதகமா யெதிபுன லாடு நாண் முதற் பன்னிரு
நாளும், முன்னிய கருப்ப மெய்திடு மளவும் கன்னியைக் கூடா
திருப்பின், அன்னிய கருப்ப மதித்தலன் புகுத்தும் நரகுறும் ஒற்
றைநா ளணையிற், பெண்ணுறு மிரட்டை யானநா ளணையிற் பிறங்
குறப் பிறக்குமாண் பிள்ளையே.

இ—ள்: மன்னுருதகமாயெதிபுனலாடுநாள் முதற்பன்னிருநாளும்—ஜெனித்ததற்கேதுவாக நிலைபெற்றபூப்புண்டாகி ஸ்நானஞ்செய்யக்குறித்த ஐந்தாம்நாண்முதல் பன்னிரண்டுநாட்களில், முன்னியகருப்பமெய்திடும்—தமது கல்வியறிவு தெய்வபக்தி ஒழுக்கம் பொறுமை காரணகாரிய வேறுபாடுகளை உற்றுணருமுணர்வு, காலநிலை, பூர்வபுண்ணியம், இவைக்கேற்பத்தாம் உத்தேசித்தபிரகாரம் புத்திரோற்பத்திசம்பவிக்கும், அளவுங்கன்னியைக்கூடாதிருப்பின்—இல்வாழ்வான் சற்புத்திரோற்பத்திகாலத்தைபுணர்ந்து தனதுமனையாளைக்கூடாதொழியின் மறுமையில், அன்னிய கருப்பமதித்தலன் புகுத்தும் நரகுறும்—நன்னெறியினின்றும் நீங்கி இகழும் கல்வியினேர்மாதரவதாரத்துதித்து இச்சிசுவைச்சுமந்து வருந்தியிறந்து நரகத்தில்விழும், ஒற்றைநாளணையிற்பெண்ணுறும்—மேற்கூறியபடி 5-6-7-8-9-10-11-12-13-14-15-16-எனச் சொல்லப்பட்ட தினங்களில்-5-7-9-11-13-15 என்ற ஒற்றித்த நாட்களில் கர்ப்பாதானமென்னில், பெண்குழந்தையே தோன்றும்—இரட்டைநாளணையிற்பிறங்குறப்பிறக்குமாண்பிள்ளையே—6-8-10-12-14-16- என்னுமிரட்டித்தநாட்களில் கர்ப்போதயமாகில் ஆண்குழந்தை உதிக்கும்.

மன்னுருதகமாயெதிபுனலாடுகோன்முதற் பன்னிருநாள் என்பதற்கு:—பூப்படைத்தமாதர் ஸ்நானஞ்செய்தல் நாலாம்நாளென்றும் நாலாம்நாளை முதல்நாளாக கொள்ளவேண்டுமென்றும் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறுமிடத்து, பூத்ததினம்முதல் 16 தினம் கர்ப்பமாகுந்தினமென்றும்விதித்தால், இடைநின்றநாட்கள் பதின்மூன்றாகும்; ஆகவே-பன்னிருநாளென்னும்பாடம் கபாடபக்ஷமாகின்றது; பின்னையென்னையெனில் ஆசௌசவிதியில்,

செயிழை நாபிச் சேதனம் பண்ணிச் செழும்புனல் ஆட்டிதன் மூன்றும்
மாய்தரு பிரேதத் தீக்குளிப் பாட்டி வைத்தலக் கரிப்பதன் மூன்றும்
ஆயிழை மடவார் பூப்புறின் நாலு தினமகன் றிரும்புன லதனில்
தோய்ந்ததன் பின்னு முதிரர் படியும் சூதக மில்லையென் றுரைப்பாம்,

குறிப்பு: ஆயிழைமடவார் பூப்புறின் நாலுதினம்அகன்று இரும்புனலதனிற்தோய—ஒன்றிரண்டுமூன்று நாலுதினங்கழிந்து ஐந்தாந்தி



னமே ஸ்நானம்பண்ண விதித்திருப்பதால், மன்னுருதகமா யெதிபுனலாடும்நாளென்பதற்கு, பூப்பார்தினமுதல் ஸ்நானம்செய்யவிதித்த ஐந்தாம் நாள்முதலெனப் பொருள்கோடலே நற்றுணிபாமென்ப.

ஒற்றைநாளணையிற் பெண்ணுறும் இரட்டைநாளணையிற் பிறங்குறப் பிறக்குமாண்—என்றமைபானே இவ்வொருவிதிமாத்திரத்தானே பெண், ஆண், என்றநிச்சயமமையாமைக்கு வேறுவேறுவிதியும் மேற்கூறப்படுமென்பதை யறியவேண்டியது. (௮)

## பெண்கள்ருதுவாகுங்காலம்.

பாரதிற் கருப்பா தானம் பண்ணிடுங் காலத் தொன்றும்
நீரழுஞ் சுகதுக் கங்கள் சேடியர் தங்க ளுக்குத்
தாரமும் மாத மாதஞ் சுரோணிதந் தனக்கு நாதன்
ஆரலும் மதியைக் காண வரிவையு மிருது வாவாள்.

இ—ள்: சேடியர்தங்களுக்குப்பாரதில்—உலகத்திலுள்ள ஸ்திரீகள் யாவர்க்கும், கருப்பாதானம் பண்ணிடுங்காலத்தொன்றும் தாரமும் நீரமும் சுகதுக்கங்கள்—கருப்பாதானஞ்செய்வதினாலுண்டாகும் சுகதுக்கங்களுக்கு ருதுவாவது ஆதாரமாகிபதாம், மாதாமாதஞ் சுரோணிதத்தனக்குநாதன்மதி—மாதாமாதம் தோன்றும் பிரவிடைக்கு அதிபதி சந்திரன், ஆரலுங்காண அரிவையுமிருதுவாவாள்—செவ்வாய்ஒன்று நான்கு ஏழு எட்டு என்னுந்தானத்தில் மதியைவைத்துப்பார்க்கப் பெண்கள் பூப்படைவார்கள். இஃது முன்னூலுஞ்செய்யுளில் தெளிவாகக் காட்டியிருப்பதினாலுமுணர்க. (௯)

## கருப்பஉற்பத்திக்காலம்.

இருதிலாப் பெண்க ளுக்கு மியம்பிடு முதியோ ருக்கும்
அரிவையில் மலடி நீக்கி யழகுறு மங்கைக்கீ ராறும்
மறுசென்ம மிரண்டு நாலு மைந்துமே ழெட்டொன் பானில்
உடுமதி தன்னைச் சேர்க்க உற்பத்தி குறின் காலம்.

இ—ள்: இருதிலாப்பெண்களுக்கு மியம்பிடு முதியோருக்கும் அரிவையில் மலடிநீக்கி—ருதுவாகாதவர்கள் வயது முதிர்ந்தவர்கள்பெண் மலடு இவர்கள்நீங்கிய, அழகுறுமங்கைக்கு — மேற்கூறியசார்பில்லாத சிறந்த ஸ்திரீகளுக்கு, ஈராறும் சென்மம் இரண்டு நாலும் ஐந்துமேழும் எட்டு ஒன்பானில், உடுமதிதன்னை—அவ்வவரது பிறந்தநட்சத்திரஇராசிக்குப் பன்னிரண்டு ஒன்று இரண்டு நான்கு ஐந்து ஏழு எட்டு ஒன்பது

இத்தானமொன்றில் சந்திரன்வர, சேய்நோக்க—செவ்வாய்பார்க்க, உற்பத்திருவின்காலம்—கர்ப்பாதானம் நேரில் கருப்பௌற்பத்திக்கேதுவான காலம் என்று பாதராயண சாராவளியிற் கூறப்பட்டுள்ளது. செவ்வாய் அவ்வப்போதுநிற்கும் இராசியிலிருந்து நாலு ஏழு எட்டைப் பார்ப்பர் எனக்காண்க. (கo)

## ஸ்திரீபுருஷசங்கமம்.

காலத்திற் புருட னுக்கே கருதிடு முபஜெ யத்தில்
பாலொத்த நிலவே நிற்கப் பசும்பொன்னன் மதியைக் காணச்
சேலொத்த விழியாள் தானும் சேருவாள் புருடன் றன்னைத்
தாலத்தில் மாறு பட்டால் சம்போக மிருபேர்க் கில்லை.

இ—ள்: காலத்திற் புருடனுக்கே கருதிடு முபசெயத்தில் பாலொத்த நிலவேநிற்க—நிகழ்காலமொன்றிலே நாயகன் பிறந்த நட்சத்திர ராசிக்கு உபஜெயஸ்தானமென்னப்பட்ட மூன்று ஆறு பத்து பதினொன்றிற் சந்திரன்வர, மதியைப் பசும்பொன்னன் காண—சந்திரனை வியாழன் அவ்வப்போது நிற்கும் இராசியிலிருந்து தன்பார்வையாகிய ஐந்து ஒன்பதாமிடத்தேவைத்துப் பார்க்க, சேலொத்தவிழியாள்தானுஞ் சேருவாள் புருடன்றன்னை—இரண்டாஞ்செய்யுளுரையிற் கூறியபடியான குணசகிதமான பெண் பத்தாவோடு இன்புற்றுக் கூடுவாள், கூடுங்கால் புத்திரோற்பத்தி நிச்சயம், தாலத்தில் மாறுபட்டால் சம்போக மிருபேர்க் கில்லை—இங்ஙனம் கிரகநிலையில்லாதொழிந்தால் இஷ்டமான சங்கமமு மில்லை. புத்திரோற்பத்தியுமில்லையென்பதாம்.

ஆகவே, கெடுங்காலஞ் சந்தானச்சிறப்பில்லாது துக்கமுறும் இல்வாழ்வார், 2ம் 3ம் செய்யுள்விதியை அனுசரித்துநடப்பின் மகப்பேற்றைத் தவறாது பெறுவர்.

கிரகபார்வை: சூரியன்-சந்திரன்-புதன்-வெள்ளி- இவர்கள் பஞ்சாங்கப்படி அவ்வப்போதுநிற்கின்ற இராசியிலிருந்து ஏழாமிடத்தைப் பார்ப்பார்கள்—செவ்வாய் அவ்வப்போது நிற்கின்ற இராசியிலிருந்து நாலு ஏழு எட்டாமிடத்தையும், 4-7-8லிருந்தவரையும் பார்ப்பர். வியாழன் அவ்வப்போது நிற்கின்ற இராசியிலிருந்து ஏழு ஐந்தொன்பதாமிராசியையும், 5-7-9ல் இருப்பவரையும்பார்ப்பர். சனி அவ்வப்போது நிற்கின்ற இராசியிலிருந்து மூன்று ஏழு பத்தையும், 3-7-10 லிருந்தவரையும் பார்ப்பர். இராகுகேது அவ்வப்போது நிற்கின்ற இராசியிலிருந்து மூன்று ஏழு பதினொராமிடத்தையும், 3-7-11லிருப்பவரையும் பார்ப்பர்.



பார்ப்பரே மெல்லாரும் பங்கொருமூன் றாமிடம்பத்
தார்ப்புறு சேய் நாலெட் டாசானைந்—தோர்நவமும்
கேதுக் கிராகுவுக்கும் கேட்குமூன் றம்பன்னொன்
றேதமிலான் டென்றேகி யென்.

(தாற்பரியம்) பங்கு-சனி,சேய்-செவ்வாய்,ஆசான்-வியாழன்.

## கர்ப்பசம்பவகாலம்.

சேருமா தான காலந் திகழ்பிர சனைகா லத்தில்
கூருமா தவனுந் திங்கள் சுசனொடு புகரோன் றானும்
தேருதன் சுயந வாம்சஞ் சென்றிருப் பாரே யாகில்
சீருடன் கர்ப்போற் பத்தி செப்பிய காலந் தானே.

இ—ள்: சேருமாதான காலம்—கர்ப்பமானதுலபிக்கும் கலவியில், கூருமாதவனுந்திங்கள் சுசனொடு புகரோன்றானும்—சிவ அதிபதியாகிய சூரியனும் மனத்துக்கதிபதியாகிய சந்திரனும் சுக்கில சுரோணித காதனுகிய செவ்வாய் வெள்ளியும், தேருதன் சுயநவாம்சம் சென்றிருப்பாரேயாகில்—பஞ்சாங்கப்படி இராசிநிலையிலே ஆட்சியுச்சம்பெற்றும் நட்சத்திரபாதசீதியாய்த் தத்தம் உச்சாட்சியம்சத்திலுமிருந்தால், சீருடன் கர்ப்போற்பத்தி செப்பியகாலந்தானே—சற்புத்திரர் உற்பவிக்கும் கர்ப்போற்பத்திகாலமாகும், பிரசனைகாலத்தில் திகழ்—பிரசவகாலத்திலும் சூரியன் சந்திரன் செவ்வாய் வெள்ளி மேற்கூறியவிதம் நின்றாலும் சுகப்பிரசவமும் சுகபுத்திரருமாகும்.

ஆகவே சூரியன்: மேடம் சிங்கம் தனு மீனம் இவற்றொன்றில் நிற்பினும், அன்றி, மேட சிங்க தனு அம்சம்பெற்றாலும், எனவே சித்திரை ஆவணி மார்கழி பங்குனி உத்தராயண சூரியன் என்றபடி இரவிக்குச் சுபசங்கமம் கூறியபடியை தனித்துத்தெரிந்தும், அச்சுவினி முதல் 27 நட்சத்திரத்திலும் சூரியன் சஞ்சரிக்குந்தோறும் ஒவ்வொரு நட்சத்திரத்தின் முதற்காலிலும், அச்சுவினி பரணி கார்த்திகை என்றபடி நிருதிய நாளாக்க 27 நட்சத்திரத்தில் ஒன்பதுகூறுகும் ஒவ்வொரு மூன்று நட்சத்திரத்திலும் மூன்றாவது நட்சத்திரக் கடைக்காலிலும் சூரியன் சுபராசி சுபாம்சம் உச்சம் ஆட்சி நட்பு மூலத்திரிகோணபெலம் பெறுவர். அங்ஙனம் நிருதியகூறாக்கிய ஒவ்வொருகூற்றிலும் 2ம் நட்சத்திரத்து 3ம் 4ம் பாதத்திலும் 3ம் நட்சத்திரத்து 2ம் 3ம் பாதத்திலும் சூரியன் கடக்குங்காலம் மேற்கூறிய சுபநிலைக்குச் சமமான நன்பத்தை உண்டாக்கவதுவாவர். மற்றுள்ளவை சமம்.

சந்திரன்: இராசி ஒன்றுக்கு இரண்டேகால் நட்சத்திரமும், அதாவது அச்சுவினி பரணி கார்த்திகை முதற்கால் 9 பாதம் மேடத்திலும், மற்றொன்பதுகால் இடபத்திலும், இவ்விதமே 27 நட்சத்திரம் 108-க்கால் 12 இராசியிலும் அடைப்பர். அச்சுவினிமுதலான 27 நட்சத்திரங்களையும் மும்மூன்றாய் வகுக்க ஒவ்வொருகூற்றிலும் முதல் நட்சத்திரத்து 2ம் 4ம் பாதத்தில் சந்திரன்வர உச்சாட்சியம்சம் பெறுவர் என்பதை தெரிந்தும்,

செவ்வாய்: அச்சுவினிமுதல் 27 நட்சத்திரத்தை மும்மூன்றாய் வகுக்க 9 பாகமாகும். இந்த ஒவ்வொரு மூன்று நட்சத்திரத்திலும் முதல் நட்சத்திரத்து முதற்காலும் இரண்டாம் நட்சத்திரத்து நாலாங்காலும் மூன்றும் நட்சத்திரத்து இரண்டாங்காலும் ஆட்சியுச்சஅம்சம் பெறுவரென்பதையறிக. அன்றி, மேடம் விருச்சிகம் மகரம் இம்மூன்றிராசியும் செவ்வாய்க்கு ஆட்சியுச்சஸ்தானமில்லை மேற்கூறியபிரகாரம் பெலமில்லை. சுபமென்ப.

வெள்ளி: அச்சுவினிமுதல் 27 நட்சத்திரத்தையும் மும்மூன்றாய் வகுக்க 9 கூறாகும். இவற்றிலொவ்வொரு கூற்றிலும் முதல்நட்சத்திரத்து 2ம்பாதமும், இரண்டாம்நட்சத்திரத்து 3ம்பாதமும், மூன்றாம்நட்சத்திரத்து 4ம்பாதமும், ஆட்சியுச்ச அம்சம்பெறுவர். அன்றி, இடபம் துலாம் மீனம் இவற்றில் நிற்பினும் வெள்ளி ஆட்சியுச்சபலமாம். இவைகளைத் திட்பநுட்பமாயாராய்ந்தறிந்தும். (௧௨)

செப்பிடு மிரவி திங்கள் செய்புக ழிவர்க டாமும்
ஒப்பிடு சுயசு வாம்ச முற்றாலும் புருட னுக்குத்
தப்பிலா உபசெ யத்தில் தாணியும் வெள்ளி நின்றால்
இப்புவி மடவா ருக்கு எழில்கர்ப்போற் பத்தி தானே.

இ—ள்: செப்பிடு மிரவி திங்கள் செய்புக ழிவர்க டாமும் ஒப்பிடு சுயசுவாம்சமுற்றாலும்—மேலேகூறிய சூரியன் சந்திரன் செவ்வாய் வெள்ளி இவர்நால்வரும் சுயராசி சுயாம்சம் பெற்றிருப்பினும், அன்றி, புருடனுக்குத் தப்பிலாஉபசெயத்தில் தாணியும் வெள்ளிநின்றால்—நாயகனது ஜென்மஇராசிக்கு உபசெயமென்று சொல்லப்பட்ட மூன்று ஆறு பத்து பதினொராமிடத்தில் சூரியன் வெள்ளிஇருக்க சக்கமம்பிக்கிறின்—இப்புவி மடவாருக்கு எழில் கர்ப்போற்பத்திதானே இப்பூமியின்கண் பெண்களின்உதரத்தே கர்ப்பமமையும். உபசெயம் ஜாதகத்திற்குறித்தஇராசிக்கு 3-6-10-11, தாணி—சூரியன், உபஜெயம்—மேட இராசியிற் செவ்மமா



ளிவருக்கு மிதுனம் கன்னி மகரம் கும்பம் இவ்விதமே இடபத்துக்கு கடகம் துலாம் கும்பம் மீனமாகக்காண்க. (௧௩)

பத்தினி மடவா ருக்குப் பகருப செயத்திற் செவ்வாய்
சுத்தகன் மதியோன் றானும் சுயசுவாம் சையிலி ருக்க
வித்தகி ரூனுங் கொள்வாள் வேந்தனைக் கொன்பா னேற
அத்தினக் கர்ப மாவா ளறிந்திடா யவனி மீதே.

இ—ள்: பத்தினி மடவாருக்கு—என்ற முதலிரண்டுவரியினுரை பெண்ணினது ஜாதகப்படியான ஜென்மராசிக்கு மூன்று ஆறு பத்து பதினொன்று என்ற உபசெயஸ்தானத்தில் செவ்வாய் சந்திரனிருந்து சுவாம்சநிலையில் செவ்வாய் சந்திரன் உச்சாட்சிஅம்சத்தே இருப்பாராகுல், வித்தகிருலுங்கொள்வாள்—ஸ்திரீகர்ப்பமாவாள், வேந்தனைக்கொன்பானேற— அல்லாமலும் ஜாதகியின் ஜென்மராசிக்கு ஒன்பதில் வியாழன் கோசரத்தில் வந்திருக்க. அத்தினக்கர்ப்பமாவாள்—அக்காலங்களிலும் கருப்பவுற்பத்தியாகும், அறிந்திடாயவனிமீதே—நான்ஙிரப்பிரமாணத்தை அனுபவித்தல் நீ உலகில்கண்டறிகுதி.

இப்படியேசொல்லப்பட்ட கருப்பசம்பவயோகத்திற்குவிரியவினமான ஸ்திரீபுருஷர்களுக்குத் தொழிற்படுத்தல் இல்பொருளானமையால் கருப்பம் உண்டாதல் கூடாதெனவறிக. புருஷரிடத்து ஐம்பத்தாறு காலுக்குமேல் தங்கிப் பக்குவமடைந்த விந்தே வித்தாந்தன்மையுடையதெனச் சிலர்சொல்லுகையாகும். (௧௪)

வெய்யோன் மதிசேய் புகர்தத்தம் காலின் விளம்பிதிற்க
வையமுயிர்க்கைந்தி னென்பதிற் சேவ னமர்ந்து நிற்பப்
பெய்த கருப்பம் வளருதன் றுண்பிள்ளை பகமலைய ற்
பைபார வல்குல்நல் லாய்பலி யாதெனப் பன்னினரே.

இ—ள்: சூரியனும் சந்திரனும் செவ்வாயும் வெள்ளியும் தத்தமம்சம் அதாவது சிங்கமேடம் கர்க்கடகஇடபம்மேடவிருச்சிகமகரம் இடபதுலாமீனமென்ற இராசியம்சம்பெறக் கர்ப்பாதான இலக்கினத்திற்கு ஐந்தொன்பதாமிடத்தே வியாழனிருக்க, கர்ப்பாதானம்பண்ணினால் அக்கர்ப்பம் பூரணமாகவளர்ந்து ஆண்பிள்ளையாகத்தோன்றும். இந்த யோகம் மலடியானவள்திரீயிடத்தும் பயன்படாது. (௧௫)

## கர்ப்போற்பத்தி முதற் செனனமளவுமுண்டாகுமங்கம்.

செறிவுறுசீ சாற்திரளு முளைபெறு மென்புசேருங்
குறியுறு தோளை மயிருதிக் குங்கூறு மார்வமுட
னறிவுறுக் தாக மசையு மவனி யிடைப்பிறக்கும்
செறிபுறு மாத நிரையறி நல்ல திரைவளையே.

இ—ள்: கர்ப்பமானது—முதல்மாதம் தாமரையிற்பட்ட நீர்போலிருக்கும். இரண்டாம்மாதமொருகட்டியாம். மூன்றும்மாதம் அங்கங்கள் முளைக்கும். நாலாம்மாதம் அத்திபற்றும். ஐந்தாம்மாதந் தோல்பற்றும். ஆறும்மாதம் ரோமம்முளைக்கும். ஏழாம்மாதமறிவுண்டாம். எட்டாம்மாதம் பசிதாகமுண்டாம். ஒன்பதாம்மாதம் அசைத்து பெயர்த்து கிலேசமுண்டாம். பத்தாம்மாதம் பூமியிற்பிறக்கும் எ—று. (௧௬)

திங்கட் கொருவர் புகர்குசன் சீவன் செழுங்கதிரோ
னங்கண் மதிசனி மாலுக யாதிப ரம்புவியும்
வெங்கட் சுடரு முறையினிற் காப்பரென் மிக்கதீக்கோள்
பங்கப் படுமுயி ரால்வருங் காலம் பயமென்பரே.

இ—ள்: முன்புசொன்னமாதங்களுக்கு வெள்ளி செவ்வாய்வியாழன் ஆதித்தியன் சந்திரன் சனி புதன் கர்ப்பாதானஇலக்கினாதிபதி சந்திரன் சூரியன் அடைவே மாதாதிபர்களாய் அந்தக்கர்ப்பத்தை யிரட்சிப்பார்கள். இவர்கள் யாராவது ஒருபாபக்கிரகத்தால் பீடைப்படும்போது கர்ப்பமும் பீடைப்படும். (௧௭)

## ஆண் பெண் கிரகநிலை.

ஒற்றை யிராசியி லாணாங் சகமுத யக்கதிர்பொன்
பெற்ற மதியுறி லாண்சம வோரையிற் பெண்ணக்கசத்
துற்றிவர் நின்றிடில் பெண்சனி யெட்டியிற் கொற்றையின்றி
னிற்புற லாண்பெண் சமத்திற் புகர்மதி சேய்நிற்கிலே.

இ—ள்: புருஷராசியாகிய மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனுக் கும்பமென்ற இராசியிலும் இவ்விராசி யம்சத்திலும் சூரியன் வியாழன் சந்திரன்முதலியோர் நிற்க கர்ப்பாதானமாயின் அக்கர்ப்பம் ஆண்பிள்ளையாம். இப்படிச்சொல்லிய கிரகங்கள்பெண்இராசியான இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மீனமென்ற இராசியிலும் இவ்விராசியம்சத்திலும்



நின்றால், கர்ப்பாதானமாயினக்கர்ப்பம் பெண்பிள்ளையாகும். உதயத்துக் கொற்றித்தவிராசியிற் சனிநின்றலாண்கர்ப்பம். இரட்டைராசியிற் சனி நிற்கிற் பெண்ணும். உதயத்துக்கு இரண்டு நாலு என்ற எண்ணின்படி இரட்டித்ததானங்களில் வெள்ளி சந்திரன் செவ்வாய் நிற்கிற் பெண்ணும். ஒன்று மூன்றென்ற எண்ணின்படி ஒற்றித்தவிராசியில் இவர்கள் நிற்கிலாணாகும். (௧௮)

## கர்ப்பச்சிதைவு.

சொல்லுயிர்க் கைந்தின் மதிசுட ரேழினிற் சுங்கன்மூன்றி
னல்கிற் கருப்ப மிலைமதி நட்புச்ச மெய்தினன்றாய்
சில்கினஞ் சென்று கெடும்பகை நீசஞ் சிதைக்குமெகெடும்
வல்லுட னாட்சி வயிற்றி னெடுங்காலம் வாழ்வுறுமே.

இ—ள்: கர்ப்பாதானலக்னத்துக்கு ஐந்தாமிடஞ் சந்திரனும் ஏழாமிடம் சூரியனும் மூன்றாமிடஞ் சுக்கிரனும் நிற்பில் கர்ப்பந்தங்காது. சந்திரன் பெலவானாய் நட்புச்சம்பெற்றுநிற்கில் கர்ப்பமொருகுறைவின்றியேவளரும். சந்திரன் பெலவீனனாய்ச் சமகேந்திரத்துநின்றால் கர்ப்பமுருபிகரித்து சிலநாளிலேகெடும். சந்திரன் நீசத்துநின்றால் கர்ப்பநாசம். சந்திரன் பெலமாயாட்சியில் நின்றால் உதரத்தில் நெடுங்காலமிருக்கும். (௧௯)

குறைமதி தன்னாளிற் சேய்சனி கூடி யுதயமுறில்
பொறைதரு பிள்ளை பிறக்குமுன் னனைசாம் பொற்கதிரோ
னுறைதரு நாளி லவனோடை யுற்றிட வுள்ளதிக்கோள்
கறைகொண்டு நோக்கிடிற் தந்தை முன் சாமென் கனங்குழையே.

இ—ள்: அபரபக்கத்துச்சந்திரனுடைய அம்சத்துச் செவ்வாய் சனியுடன்கூடியதுவே யிலக்கினமாகித் பிள்ளைபிறப்பதன்முன் மாதாமரிக்கும். ஆதித்தியாம்சத்துச் சிங்கவிலக்னம் கர்ப்பாதான இலக்னமாகச் செவ்வாய் சனி ராகு கேது கூடினும் நோக்கினும் பிள்ளைபிறப்பதன்முன்னே பிதாமரிக்கும். (௨௦)

தற்காலத்தி திருஷ்டிப்பிரமாணமாயறியக்கூடாத அதிரிசியமான காரியங்களை அநுமானப்பிரமாணத்தாலறிய வல்லுனராகிய மேல்நாட்டு வைத்தியநிபுணர்களின் சம்மதம் சம்யோகசமயத்திலிருந்து கர்ப்போத்பத்தியாவதற்கு ஒன்றுமுதல் ஐந்துதினங்கள்வரையிற் செல்லும். ஐந்துதினத்திற்குள்ளதுவோ ஒருகாலத்தில் கர்ப்பந்தரிக்கக்கூடும். மாதவிடாய்காலத்திற்குமுன் ஐந்துதினங்களும் மாதவிடாயாதி ஸ்நானத்

செய்து சுத்தமானதுமுதல் ஐந்துதினங்கள்வரையிலும் பெண்களுக்குக் கர்ப்பாதானமுண்டென்பதும் அவர்கள் கொள்கையாகும். கர்ப்ப ஆரம்பமுதல் ஜனனம்வரையில் (273) தினங்களாகும். சந்திரன் பன்னிருராசி மண்டலத்தை ஒருதரஞ் சுற்றிவருவதற்கு 27·32 தினங்களாகின்றது. ஆதலால் 27·32×10=273·20 நாட்களாகும். இதற்குச் சாதாரண கர்ப்பகாலமென்று பெயர்.

இதனைத் தாஜிகபத்ம கோசார்தர்கதமநுஷ்யஜாதகம் ஐந்தாவது நிஷேகாதிகாரம் இரண்டாவதுசுலோகத்தில் குணதாரகாணி என்றுகூறப்பட்டுள்ளது. தாரகை 27, குணம் மூன்று. ஆகவே 273 நாட்களென்பதுபொருள். எல்லாஜனனங்களும் இருநூற்றெழுபத்துமூன்றுநாட்களில் உண்டாகின்றதென்று சொல்லமுடியாது. மேல்நாட்டு வைத்தியநிபுணர்கள் பலதரம் பரிசோதித்ததில் 252 தினங்களில் 100 க்கு 3 ஜனனங்களும், 273 தினங்களில் 100 க்கு 29 ஜனனங்களும், 280 தினங்களில் 100 க்கு 19 ஜனனங்களும், 301 தினங்களில் 100 க்கு 3 ஜனனங்களும் உலகத்திலுண்டாவதாக உறுதிப்படுத்திக் கூறுகிறார்கள். இது சாஸ்திரசம்மதமாகவேயிருக்கிறது. இதனை முன்சொன்ன மநுஷ்யஜாதகத்தில் ஜனனகால சந்திரஸ்புடமானது ஜனனகால இலக்னஸ்புடத்துக்குச்சரியாயிருந்தால் 273 தினங்களிலும், ஏழாம்பாவகஸ்புடத்துக்குச்சரியாயிருந்தால் 258 தினங்களிலும், எட்டு ஒன்பதாம்பாவஸ்புடத்துக்குச் சரியாயிருந்தால் 288 தினங்களிலும் பிரசவமாகுமென்று சொல்லப்பட்டிருப்பதால் ஜனனத்தின் பின்னும் நன்கறியலாம். 245 தினங்களுக்கு மேல் 301 தினங்கள்வரையில் மக்கள் தாயின்கர்ப்பத்தில் இருப்பார்களென்பது வைத்தியர்களின் தேர்ந்தகொள்கை. அஷ்டாங்கஹிருதயம் முதலாவதத்தியாயத்தில் எட்டாவதுமாதம் முடிந்து ஒருநாள்கழிந்தபோதிலும், அதன்பின் எந்தத்தினமும் பிரசவத்திற்கு ஏற்றதாகவே கருதப்படும். எட்டாவதுமாதங் கழிந்ததும் 9-10-11-12. இவற்றுள் எதுவும் பிரசவகாலமேயாம்.

பொழிப்புரை:- அஷ்டாங்கஹிருதயம் முதலாவதத்தியாயம் எட்டாஞ்சூத்திரம். சந்திரன் வளர்கலையுடன் பூமிக்கு அதாவது: கர்ப்பாதான ஜெனனலக்கினத்திற்கு மேல்புறத்தில் அதாவது, ஊர்த்துவகபாலமென்ற 12-11-10-9-8-7 லிருந்தாலும் அல்லது சந்திரன் குறைந்தகலையுடன் பூமிக்கு அதாவது, கர்ப்பாதான ஜென்மலக்கினத்திற்குக்கீழ்ப்புறம் அதக்ஷகபாலமென்ற 1-2-3-4-5-6 லிருந்தாலும் கர்ப்பவாசதினங்கள் 273 க்குக்குறைவாகும். இம்முறைக்குமாறாக அதாவது, சந்திரன் வளர்கலையுடன் பூமிக்கு கர்ப்பாதான ஜெனனலக்கினத்துக்குக் கீழ்ப்



புறத்தில் அதக்ஷகபாலமென்ற1-2-3-4-5-6 லிருந்தாலும் அல்லது குறைந்தகலையுடன் பூமிக்கு அதாவது, கர்ப்பாதான ஜென்மலக்கினத்திற்கு மேல்புறத்தில் ஊர்த்துவகபாலமென்ற 7-8-9-10-11-12 லிருந்தாலும் கர்ப்பவாசதினங்கள் 273 க்கு அதிகமாகும். மேற்படிசூத்திரம் விருத்தி பூமியல்லது இலக்கினத்துக்குமேற்புறம் ஊர்த்துவகபாலமென்றும் கீழ்ப்புறம் அதக்ஷகபாலம் என்றும் சொல்லப்படும். ஊர்த்துவகபாலந்திருசியம் எனவும் அதக்ஷகபாலம் அதிருசியமெனவும் வழங்கப்படும். திருசியம் அறியக்கூடியது அதிருசியம் அறியக்கூடாதது. திருசியா அதிருசியமாவது: இராசியுதயத்தினால் இதனை நிச்சயித்தல்வேண்டும். இராசியுதயமென்பது இராசியே உதயமாவதாகும். அதாவது, சித்திரைமாதம்முதல் தேதி எந்த ஊரிலும் மேடஇராசிமுதல் முதல் உதிக்கும் மேடத்துக்குரிய அவ்வத்தேச இராசிப்பிரமாண நாழிகை விநாடிகழிய இடபமுதிக்கும். இடபத்துக்குரிய அவ்வத்தேச இராசிநாழிகை விநாடிசெல்லமிதுனமுதிக்கும். இம்முறையே மற்றைய இராசிகளுமுதயமாகும். ஆகவே மேடவிராசி யுதித்தபொழுது இடபராசி உதயாத்பூர்வமாயிருக்கின்றதென்பதும் உதித்தானராசி மீனமென்பதும் நன்குவிளங்கும். ஆதலால் மேடம் உதித்தபோது உதித்தான ராசிகளான மீனம் கும்பம் மகரம் தனு விருச்சிகம் துலாம் ஆகிய இத்தராசிகள் திருசியராசிகளெனப்படும். மேடம் உதித்தபோது இனி உதிக்கவேண்டிய ராசிகளான இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னியாகிய இத்தராசிகள் அதிருசியராசிகளெனப்படும். ஆகவே, உதித்தான இராசிகள் திருசியராசிகளெனவும் இனி உதிக்கவேண்டியராசிகள் அதிருசிய இராசிகளெனவும் அறிக. இலக்கினஸ்புட பாகைமுதல் இலக்னம் 12-11-10-9-8 ஏழாம்பாவஸ்புட பாகைவரையிலும் திருசியராசிகளென்றும் ஏழாம் பாவஸ்புடபாகைமுதல் ஏழாமிடம் 6-5-4-3-2 இலக்னஸ்புடபாகைவரையிலும் அதிருசியராசிகளென்றும் தெளிவாக அறிந்துகொள்ளலாம். யவனசாஸ்திரிகள் இலக்கினத்தை அஸன்டெண்டு என்றும் ஏழாம் பாவத்தை டிஸன்டெண்டு என்றுங்கூறுவர். கீழ்க்ஷிதிசம் இலக்கினமும் மேல் க்ஷிதிசம் சப்தமம். அதாவது, ஏழாவது பாவகமுமாம். (1) சந்திரன் விருத்திகலையுடன் பூமியின் மேற்புறமான ஊர்த்துவ கபாலத்தில் ( திருசியத்தில் ) இருந்தால், கர்ப்பகாலம் 273 நாட்களுக்குக் குறைவாகஇருக்கும். (2) சந்திரன் விருத்திகலையுடன் பூமியின்கீழ்ப்புறமான அதக்ஷகபாலத்தில் (அதிருசியத்தில்) இருந்தால் கர்ப்பகாலம் 273 நாட்களுக்கு அதிகமாகஇருக்கும். (3) சந்திரன் க்ஷயகலையுடனதாவது குறைந்தகலையுடன் பூமியில் மேற்புறமான ஊர்த்துவகபாலத்தில் திருசியத்திலிருந்தால் கர்ப்பகாலம் 273 நாட்களுக்கு அதிகமாகஇருக்கும். (4) சந்திரன் குறைந்தகலையுடன்

பூமியின் கீழ்ப்புறமான அதலகபாலத்தில் அதிருசியத்திலிருந்தால் கர்ப்ப
காலம் 273 நாட்களுக்குக் குறைவாக இருக்கும். இவைகளால் இறந்தகா
லத்தாலெதிர்காலத்தையும் நிகழ்காலத்தாலிறந்தகாலத்தையுமறிவதாகும்.
ஆதானகாலத்தில் கிரகங்கள் இருந்த நிலையைக்கொண்டு ஜாதகபலன்கள்
யாவையும் சொல்லவேண்டியதேயறிவுடையவர்களின் கடமையாகும்.
எனவே கர்ப்பாதான முகூர்த்தசுபமே சுபமென்பதை யாவருமறிந்துகொ
ள்க.

## கருப்ப முதல்மாதாதிபதி.

என்னவே கர்ப்ப மானு லிசைந்து மாதத் திற்கும்
மன்னிய வெழுகோள் தானும் மாசத் துக் கதிபனவார்
உன்னித காத விந்து ஒருமித்தோர் மாதத் திற்கே
துன்னிய புகரோன் றானுஞ் சுயவதி பதியே யாகும்.

இ—ள்: என்னவே கர்ப்பமானுல்—மேற்கூறியபடி கிரகசம்பவ
மும், பதிசதிசங்கமமும் நன்றுபட்டபொழுது மங்கையருதரத்தே கர்ப்
பமங்குபொருந்தும். ஈரைந்துமாதத்திற்கும்—கருப்பத்தில்வளரும் சிசு
வின்காலமாகிய பத்துமாதமும், மன்னியவெழுகோள்தானும்—முறை
யேநிலைபெற்ற வெள்ளி செவ்வாய் வியாழன் சூரியன் சந்திரன் சனி
புதன் கர்ப்பாதான முகூர்த்தஇலக்கின அதிபதியெயரோ அவர் சந்திரன்
சூரியன் என்றகிரமமாய் மாசத்துக்கதிபனுவர். ஓராம்மாதமுதல் பத்து
மாதம்வரை அதிஷ்டித்து வளர்ப்பார்கள். ஆதலால், உன்னிதகாதவிந்து
ஒருமித்த நூர்மாதத்திற்கே—உருவமும் உயிருந்தோன்றுவதற்கு இன்றி
யமையாத உயர்ச்சிபொருந்திய சுக்கில சுரோணிதம் பனித்துளிபோல
மாத்ருபண்டியில்மற்று கலந்ததான முதல்மாதத்தில், துன்னிய புக
ரோன்றானுஞ் சுயவதிபதியேயாகும்—கருப்பத்தங்கியிருப்பதற்கு சுக்கிர
னே அதிபதியாவானென்பதாம். ஆகவே.

அந்நாட்களில் வெள்ளி பகைநீசமஸ்தமயனம் இராகு கேது சனி
சம்பந்தந்திருஷ்டிபெறாது சுபருணபலமாய் இருப்பின் உத்தமகருப்ப
மெனப. (உக)

## இரண்டு மூன்றும் மாதாதிபதி.

ஆகிய விரண்டாந் திங்கள் அரிவையின் கர்ப்பத் துள்ளாய்
வாகுடன் றடித்து மாம்சம் வளர்பிண்ட நாதன் செவ்வாய்
ஏகிய மூன்றாந்திங்க ளிவைகளு முருவமாகும்
ஆகிய வதற்கு நாத னந்தன னுவான் காணே.



இ—ள்: ஆகிய விரண்டாந் திங்கள் — மேற்கூறியவண்ணமே
வெள்ளியதிபதியாயிருந்து ஓராமாதம்முடிந்து இரண்டாவதுமாதத்தில்,
அரிவையின் கர்ப்பத்துள்ளாய் வாகுடன் றடித்து மாம்சம்—சுக்கிலசுரோ
ணிதம் வளருமியல்பிற் றடித்து மாமிசமாகி, வளர்பிண்ட நாதன் செவ்
வாய்—வளர்வதற்கு அதிபதி செவ்வாயாகும், ஆகவே, அக்காலத்திற்
செவ்வாய் பகை நீசம் மூடம் சனி ராகு கேது சம்பந்தந் திருஷ்டியில்லா
திருப்பின் கருப்பமும் மாதாவுஞ் சிறப்புறும், ஏகிய மூன்றாந் திங்க
ளிவைகளு முருவமாகும்—மேற்கூறியவண்ணமே இரண்டாம்மாதம்
முடிந்து மூன்றாவதுமாதத்திற்றடித்தமாம்சந் திரண்டு கைகால் சிரசுமுத
லாகிய அவயவங்கள் முனைப்படையும், ஆகிய வதற்குநாத னந்தன னு
வான் காணே—அவ்வகை வளர்ச்சியாம் அம்மாதத்துக்கதிபதி வியாழனு
கும். ஆகவே, அக்காலத்தில் வியாழன் பகை நீசம் அஸ்தமயனம், சனி
ராகு கேது சம்பந்தந் திருஷ்டியில்லாதிருப்பின் கருப்பமும் மாதாவுஞ்
சிறந்துவிளங்கும். (உஉ)

## நாலைந்தாறும்மாதாதிபதி.

காணவே நாலாந் திங்கள் கடினமா மெலும்பு தோன்றும்
பூணவே யதற்கு நாதன் புகலும்பால் கரனே யாவன்
ஊணவே யைந்திற் றோலு முதிப்பதற் கதிபன் ஆலோன்
தோணுமே யாறில் ரோமந் தோன்றிட வதிபன் நீலன்.

இ—ள்: காணவே நாலாந் திங்கள் கடினமா மெலும்பு தோன்
றும்—அங்ஙனம் மூன்றாவதுமாதம் முடிந்து நான்காம்மாதத்தில் மாம்சம்
தடித்து அவயவக்குறியானபின் எலும்புஉண்டாகும், பூணவே யதற்கு
நாதன் புகலும்பால் கரனே யாவன்—அந்த நாலாவதுமாதத்துக் கதிபதி
சூரியனாகும். அக்காலத்திற் சூரியன் உச்சாட்சிமூலத்திரிகோண பலமு
டையராய்ச் சுபராகிய சந்திரன் புதன் வியாழன் வெள்ளி சம்பந்தந்திருஷ்
டியாய்ச் செவ்வாய் சனி ராகு கேது சம்பந்தந்திருஷ்டியில்லாதிருப்பின்
கர்ப்பமும் மாதாவுஞ் சிறந்துவிளங்கும், ஊணவே யைந்திற் றோலு முதிப்
பதற் கதிபன் ஆலோன்—அவ்வாறே நாலாம்மாதம் முடிந்து ஐந்தாம்மா
தத்தில் தோலுண்டாகும், சந்திரன் அம்மாதத்துக்கதிபதியாகும். ஆகவே
அக்காலம் சந்திரன் சனி ராகு கேது சம்பந்தந்திருஷ்டியின்றிப் பூரண
மதியாயிருப்பின் கருப்பமானது ஒளிபொருந்தி மாதாவும் சிறந்து விளங்
கும். தோணுமே யாறில்ரோமந் தோன்றிட வதிபன்நீலன்— அங்ஙனம்
ஐந்தாம்மாதம் முடிந்து ஆறாம்மாதத்தில் மேற்படி தோலுண்டாகிய

உருவத்தில் உரோமம் உற்பத்தியாகும் அந்த ஆறும்மாதத்துக்கதிபதி சனியாகும். அக்காலத்தில் சனியவன் உச்சாட்சிகட்டு பெலமுடையனும் சுபர்சோக்சம்பெற்றிருப்பின் மகவும் மாதாவும்சிறக்கும். (௨௧)

## ஏழாம்மாதாதிபதி.

தோன்றிய வேழாம் மாதம் தோத்திரம் தொக்கு சட்சுத்
தோன்றுசிங் குவையி னோடு முகமுள்ள வாக்கி ராணம்
தோன்றிடு மிதனை முன்னோர் தொகுப்பது ஞானேந் திரியம்
தோன்றிடச் செய்பு நாதன் தா துவ னவா னென்னே.

இ—ள்: அவ்வாறே உபாங்கம்யாவும்நிரம்பிய ஆறும் மாதம்முடிந்து தோன்றிய ஏழாம்மாதம்—வந்தவேழாம்மாதத்தில், தோத்திரம்தொக்கு சட்சு தோன்றுசிங்குவையினோடு முகமுள்ளவாக்கிராணம் தோன்றிடும்—மெய்வாய் கண் மூக்கு காது என்றுகூறப்படும் இவை உதிக்கும், இதனை முன்னோர்தொகுப்பது ஞானேந்திரியம்—இவைகளை ஆன்றோர்கள் ஞானேந்திரியம் என்று சொல்லுவார்கள், தோன்றிடச்செய்புநாதன் தாதுவனவானென்னே—இவைகளுக்கதிபதி புதன் ஆகும்.

ஆகவே அக்காலத்தில் புதன் பாவர்திருஷ்டிபாவர்சகிதம் பகை நீசம் மூடமின்றி சுபர்சம்பந்தம் சுபர்திருஷ்டி உச்சாட்சிராட்புப்பெற நின்றால் கருப்பமும் மாதாவும் சிறந்துவிளங்கும். (௨௨)

## எட்டாம்மாதாதிபதி.

எட்டெனுந் திங்க டன்னில் எழிலுறு கருப்பந் தங்கும்
சட்டமாஞ் சிசுவுங் கொண்ட தாயவ ளுண்ணு கின்ற
மட்டிலாப் பலவாம் சத்தை மகவது சுகமா யுண்ணும்
இட்டமாங் கர்ப்பா தான இலக்கின னதற்கு நாதன்.

இ—ள்: எட்டெனுந் திங்கடன்னில்—அவ்வாறே ஏழாம்மாதம் முடிந்து எட்டாம்மாதம் வந்தபொழுது, எழிலுறு கருப்பந்தங்கும் சட்டமாஞ்சிசு — உத்தமமான சுபமுகூர்த்தத்திற்பவித்திரம் சுபகுண கிரகங்களால் காக்கப்பட்டும் அங்கம் பிரத்தியங்கம் என்றுசொல்லப்பட்டவை குறைவின்றித்தோன்றுவதாலழகுபொருந்தியகருவின் கண்ணிருந்த உருவமாகிய பிள்ளை, கொண்டதாயவளுண்ணுகின்ற மட்டிலாப்பலவாம்சத்தை—புண்ணியமேலீட்டினாலே விதிவிலக்குகளையாராய்ந்தறிந்து விதித்தவைகளைச்செய்து சற்புத்திரோற்பத்தியைத்தாங்கிய மாதாவானவருண்ணுவதாகிய உணவிலுறுமமுதத்தை, மகவதுசுகமாயுண்ணும்—அக்கர்ப்பச் சிசுவானது நாபிக்கொடிவழியாய்வர உண்டுதிருப்தியடையும். இட்டமாங்கர்ப்பாதான இலக்கினன் அதற்குநாதன்—பிதா மாதாவின் அறிவின்சிரத்தைக்கும் பொறுமைக்கும் நம்பிக்கைக்கும் பக்தி ஒழுக்கத்திற்குமேற்றவாறு கர்ப்பாதானத்தமைந்த முகூர்த்தாதிபதி எக்கிரகமோ அவரே எட்டாம்மாதத்திற்கதிபதியாகும். ஆகவே அக்காலத்தில் அந்தக்கிரகத்தின் சுபநிலை மிகவும் நன்மை. (௨௩)



## ஒன்பது பத்தாம்மாதாதிபதி.

ஒன்பதா மாதத் திற்கு வுடுபதி யதிப னாகும்
இன்புறு பத்தா மாதி யெல்லவ னாற்பிர சூதி
அன்பொடு சுபாசு பங்க ளாதவன் பத்தா மாதி
தென்பொடு விருப்பா னாகிற் சேய்சுக முடனு திக்கும்.

இ—ள்: ஒன்பதாமாதத்திற்கு உடுபதியதிபனாகும்—அங்ஙனமாக எட்டாவதுமாதம்முடிந்து ஒன்பதாம் மாதத்துக்கு அதிபதிசந்திரன், இவ்வேளை சந்திரன் பாபக்கிரகசம்பந்தம் திருஷ்டியில்லாதிருப்பின் கர்ப்பச்சிசுவானது பூரணப்படலாகும், மாதாவும் சுகம்பெறுவர். செவ்வாய் சனி இராகு கேதுவோடு சம்பந்த மாயன்றித் திருஷ்டியாய்வரின், பிணி மெலிவுதோன்றும், அப்படியாகமதியைப்பாவர்பார்ப்பினுங் கூடினும் அத்தினங்களில் எண்ணெய்முழுக்கு மருந்துகவீனபோசனம் இவைகளை நீக்க வேண்டியது, இன்புறுபத்தாமாதியெல்லோனாற் பிரசூதி—அதுபொழுது ஆட்சியுச்சம் நட்புமூலத்திரிகோணம் சுபர்சம்பந்தம் சுபர்திருஷ்டியடைந்து பெலகுணமடைந்த சூரியன் பத்தாம்மாதத்திற்கு அதிபதியாகச் சுகப்பிரசவத்தைக்குறிக்கும், அன்பொடு சுபாசுபங்களாதவன் பத்தாமாதன் தென்பொடுமிருப்பானாகில் சேய்சுகமுடனுதிக்கும்—பிரசவித்தல் பிரசவமானகாலம் இன்பமும் சுகமும் பத்தாமாதவதிபதியாகிய சூரியனும் பத்தாமதிபதியும் சோதிடநுணுகுவரிதியில் சுபகுணமாயிருப்பின் சுகப்பிரசவமாய் நிகழும். சூரியனும் பத்தாமதிபதியும் நீசம்பகையாயும் செவ்வாய் சனிராகுகேதுவாற் பீடிக்கப்பட்டிருப்ப சுபர்சம்பந்தந்திருஷ்டியில்லா தொழியிற் கஷ்டப்பிரசவகாலம், இன்புறுபத்தாமாதியெல்லோனாற்பிரசூதி—அன்பொடு சுபாசுபங்கள் ஆதானன் பத்தாமாதன் தென்பொடும் இருப்பானாகிற்சேய்சுகமுடனுதிக்கும். உலகில் சகலசிருஷ்டிகளுக்கும் இன்பத்தையும் விழிப்பையுங் கொடுக்கின்ற சிவசூரியன்பத்தாம்மாதத்திற்கதிபதியாய்ச்சூரியனாலே பிரசவம்நிகழும். கர்ப்பாதானலக்னத்துக்குப் பத்தாதிபதியும் பத்தாம்மாதாதிபதியுமாகிய சூரியனும் மேலேகூறியபடி

சுபநிலையில் உற்பத்தி பிரசவகாலத்தே நின்றால் குழந்தை சுகப்பிரசவமாம். மாறிநிற்கில் பிரசவம் கஷ்டமாய்த் தோன்றும். (௨௬)

## கர்ப்பாரிட்டமும் சுகமும்.

சுகமுள வெழுகோ டாளும் துயரா வதனைச் சேர்ந்து
மிகவலி குறைந்திட் டாலே வியுமா மம்மா தத்தின்
பகலவ னாதி யோரும் பகரும்நிர் மலராய் நின்றால்
சகமதில் புஷ்டி யோடு தாயிட மிருந்து திக்கும்.

இ—ள்: சுகமுள வெழுகோ டாளும் துயரா வதனைச் சேர்ந்தும் மிகவலி குறைந்திட் டாலே வியுமா மம்மா தத்தில்—கருப்பாதானமாதமுதல் பிரசவமாதமான பத்தாம்மாதம்வரையிலுள்ள மாதாதிபதிகள் ஏழுபேருள் இராகு கேதுவினால் ஆர்பீடிக்கப்பட்டார்களோ அவராதிபதியான மாதத்தில் கருப்பத்திற்குப் பின்னமுண்டாகும், பகலவனாதியோரும் பகரும்நிர்மலராய்நின்றால்— சூரியன்முதலாகச்சொல்லப்பட்ட மாதாதிபதிகளேழுபேரும் இராகுகேதுவால் பீடிக்கப்படாமலும் விதந்துகூறத்தகுந்த பாவவிமோசனராய்த்தோன்றினால், சகமதில்புஷ்டியோடு தாயிடமிருந்துதிக்கும்—அந்தக்கருப்பச்சிசு உருவச்செழிப்போடு மாதாவின் உதரத்திலின்றும் பூமியிற்பிறக்கும். கர்ப்பாதானமான ஓராம்மாதம் வெள்ளியும், இரண்டாம்மாதம் செவ்வாயும், மூன்றாமாதம் வியாழனும் நான்காம்மாதம் சூரியனும், ஐந்தாம்மாதம் சந்திரனும், ஆறாம்மாதம் சனியும், ஏழாம்மாதம் புதனும், எட்டாம்மாதம் கர்ப்பாதான இலக்கின ஆட்சிநாதன்யாரோ அவரும், ஒன்பதாம்மாதம் சந்திரனும், பத்தாமாதம் சூரியனுமாம். (௨௭)

தோன்றிய சென்மந்தன்னை சுதாகரன் றன்னைத் தானும்
சான்றவ னென்னும் பானு சநிதனை யலசென் மத்தை
ஊன்றியே நோக்குங் காலி லுயர்கருப் புஷ்டி யோடு
தோன்றிடு மவனி மீதில் சுகமுள மகவுந் தானே.

இ—ள். சான்றவ னென்னும்பானு தோன்றிய சென்மந்தன்னை சுதாகரன் றன்னைத்தானும் சநிதனை யலசென் மத்தை யூன்றியே நோக்குங்காலில்—பத்தாமாதவதிபதியாகும் சுபகுணநிலைச்சூரியன் கர்ப்பாதான இலக்கினத்தை யன்றி கர்ப்பாதான இலக்கினாதிபதியை அல்லது சந்திரனை யன்றி சந்திரலக்கினாதிபதியை இராசிநிலை நவாம்சநிலையென்ற இரண்டுசக்கரநிலையில் ஒன்றில் தமதுபார்வையாகிய 7 வதுபார்வையாய்ப் பார்க்குங்காலம், உயர்கருப் புஷ்டி யோடு அவனிமீதில் தோன்றிடும்—



உயர்ச்சிபொருந்திய கர்ப்பச்சிசுவானது செழிப்புள்ளதாய பூமியிற்பிறக்கும், சுகமுள மகவுந்தானே—மிகுதியும் சுகங்களோடுகூடிய புத்திரருமாகும். (௨௮)

மதியவ னோடு கல்லோர் மருவிட வுதயந் தன்னில்
ஆகிபெறுஞ் சுபர்கள் வந்த சுகம்பத்தி ரண்டு மேழாம்
பதிதனிற் கோணம் நிற்ப பகர்லாபம் மூன்றிற் றீயர்
கதிரவ னுதய மிந்தைக் கண்டிடச் சுகமாய்த் தோன்றும்.

இ—ள்: மதியவ னோடு கல்லோர் மருவிட—கர்ப்பவதி பிரசவிப்பதும் சிசுப்பிரசவமாவதுமாகியகாலத்தில், சந்திரனோடு சுபர்களாகிய புதன் குரு வெள்ளி கூடியிருந்தாலும், வந்த சுகம் உதயந் தன்னில் பத்திரண்டு மேழாம் பதிதனில் கோணம் ஆதிபெறுஞ் சுபர்கள் நிற்ப—கர்ப்பாதான இலக்கினம் சென்மமாம் லக்கினம் பத்தாமிடம் இரண்டாமிடம் ஏழாமிடம் ஒன்றைந்தொன்பதான திரிகோணம், இவ்விடங்களில் சுபகரமான கிரகங்கள் நிற்பினும் நோக்கினும், பகர்லாபம் மூன்றிற் றீயர் ஆறுபதினொன்று மூன்று என்ற உபசெயஸ்தானத்தில் பாவராகிய சூரியன் செவ்வாய் சனி ராகு கேது நிற்ப, கதிரவன் உதயமிந்தைக் கண்டிட சுகமாய்த் தோன்றும்—சூரியன் இலக்கினத்தை அல்லது சந்திரனைப்பார்க்க மாதாவும் சுகமே பிரசவிப்பர். குழந்தையும் சுகமே பிறக்கும். (௨௯)

## பிரசவகாலம்.

பேசிய கருப்பா தானம் பிரச்னை காலந் தன்னில்
மாசிலா துவாத சாம்சம் மதிதனைக் கூடி நிற்க
தேசுரு மதிச மான சேருமி ராசி முந்நாள்
நேசமாம் பத்தா மாத நேரிழை பிரச விப்பாள்.

இ—ள்: பேசியகருப்பாதானம் பிரச்னைகாலந்தன்னில் மாசிலா துவாதசாம்சம்—கருப்பாதான முகூர்த்தத்திலே கர்ப்போற்பத்தியாகும் லக்கினபாகத்தினது துவாதசாம்சம், மதிதனைக்கூடிநிற்க தேசுறுமதி சமான சேருமிராசிமுந்நாள்—சந்திரனைக்கூடியிருக்குமோ அந்தவிராசிதசமராசியின்முதலில், நேசமாம் பத்தாம்மாதம் நேரிழை பிரசவிப்பாள்—பத்துமாதமாகும் கர்ப்பவதி அம்மாதத்திற் பிரசவிப்பாள். (௩௰)

விதமது கருப்பா தானம் வெண்மதி யுறைந்த வோரை
பதிபதின் துவாத சாம்சம் பற்றிட வமிசை யாதி

அதினுறு மபிசை போல வம்புளி யடைந்தி ருக்கச்
சுதனது பிரச வந்தான் சுகமுட னென்றே தே.

இ—ள்: விதமது கருப்பா தானம் வெண்மதி யுறைந்த வோரைப் பதிபதின் துவாதசாம்சம் பற்றிட—கருப்பாதான பிரஸ்னகாலத்தில் சந்திரன்நின்ற இராசிவர்க்கத்தில் அடைந்ததுவாதசாம்சத்தில் சந்திரன் வருங்காலமும், நட்சத்திரபாத அம்சாதிபதி கர்ப்போற்பத்திகாலத்து உற்ற அம்சம்போலவும் சந்திரன் வருங்காலமும், சுதனது பிரசவந்தான் சுகமுட னென்றே தே—கர்ப்பக்குழந்தை பிரசவமாகும் சுகப்பிரசவமுமாகும். (௬௧)

ஓதிய பகலி ராவி லுறுகடி கைகளைப் போலும்
மாதவள் பிரச விப்பாள் வருஞ்சிர வுதய ராசி
நீதறு பிரஸ்ன மானால் செப்பிய பகலே சென்மம்
காதலாம் பிருட்ட மாகில் கங்குலில் பிரச வந்தான்.

இ—ள்: நீதறுபிரஸ்னம் வருஞ் சிரவுதயராசியானால் செப்பியபகலேசென்மம்—குற்றமில்லாத கர்ப்பாதானலக்கினம் மிதுனம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம் ஆன சிரவுதயஇராசிகளிலொன்றானால் பகற்பொழுதில் பிரசவம், காதலாம்பிருட்டமாகில் கங்குலில் பிரசவந்தான்—மேடம் இடபம் கர்க்கடகம் தனு மகரமென்ற பிருட்டோதய இராசிகளிலொன்று கர்ப்போற்பத்தி லக்கினமானால் இராவில் பிரசவம், சிரபிருட்டோதய இராசியாகிய மீனம் கர்ப்பாதானலக்கினமானால் சந்திகாலங்களில் பிரசவம், ஓதியபகலிராவி லுறுகடிகைகளைப்போலும்மாதவள் பிரசவிப்பாள்—கர்ப்பாதானமாம் இராகாழிகையெத்தனையோ அந்தநாழிகை பகற்பிரவேசமென்னில் பகலிற்செல்லப்பிரசவம் இராப்பிரவேசமென்னில் இரவிற் செல்லப்பிரவேசம். (௬௨)

## மாதாப்பிணி.

சுகமுள வாதா னத்தின் அயலக் னத்தை நல்லோர்
இகமதிற் பார்வை யற்றே யிருந்திட வாதா னத்தை
அகமுள தீயர் காணி லழகுறுங் கர்ப்ப மாதா
செகமதில் மரண மாவார் செப்பிய பலனி தாமே.

இ—ள்: சுகமுள வாதானத்தின் அயலக் னத்தை நல்லோர் இகமதிற் பார்வை யற்றே யிருந்திட—சுகசைதன்னியத்துக்கேதுவான கர்ப்போற்பத்திலக்கினத்தைச் சுபாவசுபராகிய வளர்சந்திரன் புதன் குரு



புகர் உதயமர்காமையும் பாராமலும்விட, ஆதானத்தை அகமுள தீயர் காணில்—கர்ப்பாதானலக்கினத்தைச் சுபாவபாவராகிய சூரியன் செவ்வாய் சனி ராகு கேது பார்ப்பினும் இருப்பினும், அழகுறுங் கர்ப்ப மாதர் செகமதில் மரண மாவார்—கர்ப்பம் பிறந்தநற்இடமாயழகுறிசம்புங் கர்ப்பஸ்திரீகளரிட்டமடைய கேரிடும், செப்பிய பலனி தாமே—சுபகர்மத்தாற் சுகமும், துர்க்கர்மத்தாற் துன்பமும் சேரும் நியமத்தின்படி கூறத்தக்க பலனிதுவாம். (௬௩)

## பிதாப்பிணி.

அறியுமா தான காலம் அலரிக்கு சப்த மத்தில்
வருதிங்க ளிரண்டா மாதி வக்கிர னிருக்க வல்லால்
கரியவன் மாத மாறுக் கதிபனு மவரே நிற்கில்
உறுபிணி மாத மாறீ ருண்டாகும் புருஷ னுக்கே.

இ—ள்: அறியுமா தான காலம் அலரிக்கு சப்த மத்தில் வருதிங்க ளிரண்டா மாதி வக்கிர னிருக்க—நாயகன் நாயகிபறியவேண்டிய கர்ப்பாதானமாம்பொழுது சூரியனுக்கு ஏழாமிடத்தில்கர்ப்பத்தின் இரண்டாம்மாதாதிபதியாகிய செவ்வாய் நிற்பினும், அல்லால் கரியவன் மாத மாறுக் கதிபனும் அவரே நிற்கில்—கர்ப்பத்தின் ஆறும்மாதத்துக்கதிபதி சனி சூரியனுக்கு ஏழில்நிற்பினும், புருஷ னுக்கே உறுபிணி மாத மாறீ ருண்டாகும்—நாயகனுக்கு மனைவியாள் கர்ப்பமான 2ம் மாதம் 6ம் மாதத்திற் பிணிதோன்றும். (௬௪)

## மாதாப்பிணி.

புருட னுக் குரைத்த வண்ணம் பூவைக்கா தான காலம்
வருமதி தனக்கே யேழில் வக்கிர னலது நீலன்
மருவிட விரண்டாம் மாத மல்லது வாறும் மாதம்
உருபிணி யடைவா ரென்று முரைத்தது கதிபி தாமே.

இ—ள்: புருடனுக்குரைத்த வண்ணம் பூவைக்கு—மேலே சூரியனைவித்த செவ்வாய் சனியால் பிதாவுக்குவருந்துன்பமும் காலமும் கூறினேம் பெண்ணுக்கு வரும் பிணிக்காலத்தைக் காரணத்தைக் கூறுவேம், ஆதானகாலம்—கர்ப்பாதானவேளையில், வருமதி தனக்கேயேழில் வக்கிரனலதுநீலன்மருவிட—சந்திரன்நின்ற இராசிக்கு ஏழாம்இராசியில் செவ்வாய்அன்றிச் சனிநிற்பாரேல், இரண்டாம்மாதமல்லது ஆறும்மாதம்—கர்ப்போற்பத்தியான இரண்டாவது மாதத்திலும் ஆறுவதுமாதத்திலும், உருபிணியடைவரென்று முரைத்தது—தேகத்தில் பிணிகொ

ள்ளுவனென்று சோதிடசுருதிசொல்லியன, கதியிதாமே—இவை கிரகங்களது வன்மை மென்மையாலுங் குணகுணங்கியாலும் சேவர்களது அபுத்திபூருவமாய்ச் சேரவேண்டிய மாயாகதியாகும். (கரு)

## மாதாப்பிணி.

கதிரவற் கிரண்ட ராறில் காரியல் லதுசேய் நிற்க
அதிவலி யுள்ள கோட்கு அமைத்திடு மாதந் தன்னில்
சதியெனும் கோய்தான் கண்டு தானுய ரடைந்து சூலி
விதிபது முடிந்த தென்றே விண்ணுல கடைவாள் தானே.

இ—ள்: கதிரவற் கிரண்டராறில்—கர்ப்பாதானகாலத்தின் போது சூரியன் நின்றஇராசிக்கு முன்னும் பின்னுமாகிய இரண்டு பன்னிரண்டாமிராசியில், காரியல்லது சேய்நிற்க—சனிசெவ்வாய் வந்திருந்தால், அதிவலியுள்ளகோட்கு அமைத்திடுமாதந்தன்னில்—அதுபொழுது அவ்விருவரில் மிகுதியும் வலிபெற்றது செவ்வாயெனில் இரண்டாம்மாதத்திலும் சனியெனில் ஆறும்மாதத்திலும், சதியெனும் கோய்தான்கண்டு தான்துயரடைந்துசூலி விதிபது முடிந்ததென்றே விண்ணுலகடைவாள் தானே—கருப்ப ஸ்திரீ தப்புதல்கூடாத பிணிகொண்டுத் துன்பத்தழுந்திக்கண்டோர் விதிமுடிந்ததென்றுகூற அரிட்டமுறுவர். காரியல்லதுசேய் நிற்க—என்னவேறொருவர்நிற்பினுமன்றி அதிவலியுள்ளகோட்கு இருவரும் நிற்பினுமென்பது பெறப்படும். (கசு)

## மாதாவரிட்டம்.

தானவற் கிரண்டு வியம் தரைமகன் சனியோன் தங்க
ஆனவிக் கிரகந் தன்னி லதிவலி யுற்றூர் மாதம்
மானிகர் விழியா ளுந்தான் வல்பிணி யதனுல் வாடி
வானவ ருலகு செல்வாள் வரும்பல னிதுதா னென்னே.

இ—ள்: தானவற் கிரண்டு வியம் தரைமகன் சனியோன் தங்க—கர்ப்பாதானகாலத்தின்போது சந்திரன் நின்றஇராசிக்கு முன்னும் பின்னுமாகிய இரண்டுபன்னிரண்டிலே செவ்வாய்சனிஇருக்க கர்ப்பசம்பவமாயின், ஆன விக்கிரகந் தன்னி லதிவலியுற்றூர் மாதம்—இந்த இருவரிலதுபொழுது மிகுதியும் வலிபெற்றுநின்றவருக்குச் சொல்லப்பட்ட இரண்டாம் ஆறும் மாதத்தில், மானிகர் விழியாளுந்தான் வல்பிணி யதனுல் வாடி வானவருலகு செல்வாள்—மான்நிகர்த்த கண்ணையுடைய கர்ப்பஸ்திரீ அரிட்டமுறுவர், வரும்பல னிதுதா னென்னே—



சந்திரனைப் பாவர்நெருக்குவதால், களையின்கண் நெருக்குமுற்று சாகின்ற நெற்பயிர்போல கர்ப்பந்தரித்தமாதாவுக்கு இது பலன்வரும். ()

## பிதாவரிட்டம்.

என்னுமா பிரவிதானு மெழில்சனி யலசெவ் வாயை
மன்னியே கூடும் போதில் மங்கல னலது நீலன்
உன்னித கதிரை நோக்க உற்றிட வலிதான் னோர்க்கு
சொன்னமா தந்தி லன்னேன் சோர்வுடன் சாவான் காணே.

இ—ள்: என்னுமா பிரவிதானும்—கர்ப்பகாரணனும் பிதாவும், ஆன்மாவுமென்று கூறத்தகுந்த சூரியன், எழில்சனி யலசெவ் வாயை மன்னியே கூடும் போதில்—கர்ப்பாதானகாலத்தின்போது சிறந்த சனியையன்றி செவ்வாயைக் கூடியிருக்க, மங்கல னலது நீலன் உன்னித கதிரை நோக்க உற்றிட—சூரியனை செய்கூடச்சனிபார்க்க அன்றி சனிகூட செய்பார்க்க, வலிதான் னோர்க்கு சொன்னமா தந்தி லன்னேன் சோர்வுடன் சாவான் காணே—அந்தச்செவ்வாய் சனியிலதுபொழுது வன்மையெவருக்கதிகமுள்ளதோ அவரின்மாதத்திலதாவது இரண்டாம்மாதம் ஆறும்மாதம் கர்ப்பத்தின் தந்தைக்கரிட்டம் காணே—இச்சைதை யனுபவ அளவைவினாலறிக. செவ்வாய்க்குப்பார்வை 7-4-8. சனிக்குப்பார்வை 3-7-10. (கஅ)

## மாதாவரிட்டம்.

காணவே மதியோன் ருனுங் காரியை யலசெவ் வாயை
ஆணவ முடனே சேர வல்லது சனிசேய் நோக்கத்
தோணிடு மிவர்க டம்மில் தொடர்வலி பெற்ற பேர்க்கு
ஊனுமா தங்கள் தன்னி லொண்டொடி சாவாள் நாட்டில்.

இ—ள்: காணவே மதியோன் ருனும்—கர்ப்பகாரியமும் மாதாவும் மனதுமென்றுகூறத்தகுந்த சந்திரன், காரியையல செவ்வாயை ஆணவ முடனே சேர—சனியையன்றி செவ்வாயைக்கூட, அல்லது சனிசேய் நோக்க—அங்ஙனமன்றிச் சந்திரனைச் சனிகூட செய்பார்க்க அல்லது செவ்வாய்கூட சனிபார்க்க அதுபொழுது கர்ப்பம் லபித்தால், தோணிடு மிவர்க டம்மிற் தொடர்வலி பெற்ற பேர்க்கு ஊனு மாதங்கள் தன்னில்—கூடிப்பார்த்துத்தோன்றிய செவ்வாய் சனியில் எவர் வலியேறியிருந்தாரோ அவரதிபதியாகிய 2ம் 6ம் மாதங்களில், ஒண்டொடி சாவாள் நாட்டில்—மாதாவுக்கு அரிட்டமாம். (க௯)

## மாதாவரிட்டம்.

சாற்றிய வாதானத்தைச் சவுமியர் நோக்க மற்றும்
வற்றச ராதிற்பாவ ரிருக்கக் கர்ப் பிணியும் சாவாள்
மாற்றிடா திரண்டில் தீயர் மருவிடக் கர்ப்ப மாது
கூற்றுவ னுலகு சேர்வன் குறிப்பது வுணர்ந்தி டாயே.

இ—ள்: சாற்றிய வாதானத்தைச் சவுமியர் நோக்க மற்றும்—கர்ப்பாதான இலக்கினத்தைச் சுபக்கிரகம் பார்க்காமல், வற்றச ராதிற் பாவ ரிருக்க—கண்டலக்னத்திற்குப் பன்னிரண்டிற் பாவக்கிரகம் நிற்க, கர்ப் பிணியும் சாவாள்—கர்ப்பஸ்திரீக்கரிட்டமாகும், மாற்றிடா திரண்டிற் றீயர் மருவிடக் கர்ப்ப மாது கூற்றுவ னுலகு சேர்வான்—கர்ப்பாதான முகூர்த்தத்திற்கு 2ம் இடத்தே பாபர்நிற்பினுங் கர்ப்பமானமாதருக்கரிட்டம், குறிப்பது வுணர்ந்தி டாயே—ஆனால் சொல்லப்பட்ட லக்னத்திற் சுபரிருந்தாலும் பார்த்தாலும் பிணிதோன்றுமேயல்லாது அரிட்டமில்லை. சுபர் பூரணமதி புதன் குரு வெள்ளி (பாவர்) இரவி செய் சனி ராகு கேது. (௪௦)

## மாதாவரிட்டம்.

ஆய்ந்தகல் லுதயந் தன்னி லடைந்திடு நீலன் றன்னைத்
தேய்மதி நோக்கி னாலுஞ் சேயவன் கண்ணுற் றாலும்
தூய்தரு புவியி லுள்ள சுகமுள்ள கருப்ப மாது
சேய்வயி றிருக்கும் போதே செல்லுவா ளேம னாடு.

இ—ள்: ஆய்ந்தகல் லுதயந் தன்னி லடைந்திடு நீலன் றன்னை—கர்ப்பாதான லக்கினத்திற் சனியிருந்தால் அச்சனியை, தேய்மதி நோக்கி னாலுஞ் சேயவன் கண்ணுற் றாலும்—கலைகுறைந்த மதி பார்த்தாலுஞ் செவ்வாய்பார்த்தாலும், தூய்தரு புவியி லுள்ள சுகமுள்ள கருப்ப மாது—பரிபக்குவத்தையடைந்து பெறத்தகுதியாகிய பூமியின்கண் சுகத்தை விரும்பிய கர்ப்பஸ்திரீ, சேய்வயிற் றிருக்கும் போதே செல்லுவா ளேம னாடு—கர்ப்பமான சிசுப்பிறக்குமுன் அரிட்டமடைவர்.

தேய்மதி நோக்கி னாலும்-சந்திரன் சனியை 7ம் பார்வையாய்ப் பார்த்தாலும், அன்றிச் சனி சந்திரனை 3-7-10ல் வைத்துப் பார்த்தாலும், செவ்வாய் 4-7-8ற் பார்ப்பினுமாம். (௪௧)

## மாதாவரிட்டம்.

நாடிய கருப்பா தான நல்லலக் னத்திற் றிங்கள்
கூடியே யிருக்கும் போது குணமிலார் வியயிரண்டு



வீடதி லிருக்க நல்லோர் மேவுதல் நோக்கு மற்றால்
சேடியாங் கர்ப்ப மாதர் செல்லுவாள் வான லோகம்.

இ—ள்: நாடியகருப்பாதான நல்லலக்கினத்திற்றிங்கள் கூடியே யிருக்கும்போது—கருப்பாதானலக்கினத்திலே சந்திரன் இருக்க, குணமிலார் வியயிரண்டு வீட்டிலிருக்க—சுபாவபாவராகிய சூரியன் செவ்வாய் சனி ராகு கேது கர்ப்பஉதய லக்கினத்திற்கும் சந்திரனுக்கும் பன்னிரண்டிலும் இரண்டிலும்இருக்க, நல்லோர்மேவுதல் நோக்கமற்றால்—சுபாவ சுபராகிய புதன் குரு வெள்ளி அந்தலக்கினத்தை மதியை இரண்டுபன்னிரண்டிலிருந்த பாவரைப் பாராமலும் கூடாமலும் விட்டால், சேடியாங் கர்ப்பமாது செல்லுவாளேமனாடு—கர்ப்பமாகும் ஸ்திரீகளரிட்டமுறுவர்.

## மாதாவரிட்டம்.

செல்லுமா தான மொன்றாய்த் திங்களா ரிடமு மொன்றாய்
சொல்லுமில் விரண்டோ டைக்கும் தோயுமீ ராறி ரண்டில்
அல்லலுற் றிடுதீ யோர்க ளமர்ந்திடச் சுபர்நோக் கற்றால்
நல்லவள் கர்ப்ப மாது நமனுல கத்திற் சேர்வாள்.

இ—ள்: செல்லுமா தான மொன்றாய்—மேற்கூறியபடி கர்ப்பாதான இலக்கினம் சந்திரலக்கினம் ஒன்றாய்இல்லாமல், கர்ப்பாதானஇலக்கினமொன்றாயும், திங்களா ரிடமு மொன்றாய்—சந்திரன்நிற்பதான சந்திரலக்கினம் வேறொன்றாக, சொல்லுமில் விரண்டோ டைக்கும்—இலக்கினம் இராசியென்று சொல்லப்படும் இரண்டிடத்துக்கும், தோயுமீ ராறிரண்டில்—முன்னும்பின்னுமாய் 2-12ம் இடத்தில் அதாவது இராசியில், அல்லலுற் றிடுதீ யோர்க ளமர்ந்திட—துன்பத்துக்கேதுவாகிய பாவர் இரவி செவ்வாய் சனி ராகு கேது இவர்களிருக்க, சுபர்நோக் கற்றால்—சுபராகும் பூரணமதி புதன் குரு வெள்ளி கூடுதல் நோக்குதலில்லையாயின், நல்லவள் கர்ப்பமாது நமனுலகத்திற் சேர்வாள்—மக்களைப் பெற்றுவளர்ப்பதற்கு நல்லவளாகியஸ்திரீ கர்ப்பமானால் அரிட்டத்துக்காளாவர். (௪௨)

## மாதாவரிட்டம்.

கதிபெறு முதயத் திற்குக் களங்கனு மூன்றில் நிற்க
நிதியுறு மிரண்டு நாலும் நிகழுமீ ராறு தன்னில்
சதியுறு தீயர் நிற்க சௌமியர் கண்ப டாக்கால்
மதியுள கருப்ப மங்கை மரணமு மாவா ளென்னே.

இ—ள்: கதிபெறுமுதயத்திற்கு களங்கனும்மூன்றில்நிற்க—கர்ப்பாதானநியமமுகூர்த்தத்துக்கு மூன்றாமிடத்தில் சந்திரனிருக்க, நிதியுறு

125016

மிரண்டோறு நிகழுமீராறு தன்னில் சநியுறநிற்கிற்க—இரண்டு நான்கு பன்னிரண்டாமிடத்திலே பாபக்கிரகங்கள்நிற்ப, சௌமியர் கண்படாக்கால்—சுபக்கிரகம்இலக்கினத்தைச்சந்திரனைப்பாவையைப்பாராதொழியின், மதியுளகர்ப்பமங்கை மரணமுமாவாளென்னே—கர்ப்பமாகும்மாது அரிட்டமுறுவர். சென்னமானகுழந்தையின் இலக்கினத்துக்கு இவ்விதமிருக்கினும் மாதாவுக்கு மாரகமென்பர். (சச)

## மாதாவரிட்டம்.

என்னுமிவ் விதவிர் யாண மேற்றகோன் தனிவே மிக்க
மன்னிய பலவா னுக்கு வகுத்திட்ட மாதந் தன்னில்
நன்னய மொழியாள் கர்ப்ப நாரிக்கே யரிட்ட மென்று
இன்னிலத் துறையும் பேருக் கியம்பிடும் வழியி தாமே.

இ—ள்: என்னுமிவ்விதவிர்யாண மேற்றகோன்தனிவேமிக்கமன்னிய பலவானுக்கு வகுத்திட்டமாதந்தன்னில்—மேற்கூறியவிதிகளால் நிகழ அனுபவிக்கின்ற கர்ப்பஸ்திரிகளின் மாரகமானது; நிமையைச்செய்வதற்கு நிமித்தமாய்நின்றகிரகங்களில் வலிமைகூடியவருக்கு உடன்பட்ட கர்ப்பமாதத்தில், நன்னயமொழியாள் கர்ப்பநாரிக்கேயரிட்டமென்று—இன்பத்தைப்பயப்பதான நயவசனத்தைப்பேசும் கர்ப்பஸ்திரீக்கு அரிட்டபயமுண்டாகும், இன்னிலத்துறையும் பேருக்கியம்பிடும்வழியிதாமே—இந்நிலவுலகத்திலேவசிக்கும் மக்களுக்கு நல்வாறுல் அநுக்கிரகித்து முன்னாக அறிவித்த கண்ணெனும் சோதிடவியாயமிது. (சரு)

இயம்பிடு முதயத் திற்கு மெழில்மதி தனக்கி ரண்டின்
வியமெனு மீராறு தன்னில் விளக்கமாய்ப் பாவர் தங்க
நயந்தரு சுபக்கோ ளானோர் நாளர சனைசென் மத்தை
முயன்றுகண் ணோக்க முற்றால் மொய்குழல் பிணியாவாளே.

இ—ள்: இயம்பிடு முதயத்துக்கு மெழில்மதி தனக்கிரண்டில் வியமெனு மீராறு தன்னில் விளக்கமாய்ப் பாவர் தங்க—கர்ப்பாதான (முகூர்த்தம்) இலக்கினத்துக்கும் அதுபொழுது சந்திரன்நின்ற இராசிக்கும் இரண்டு பன்னிரண்டிற் பாவராகிய சூரியன் செவ்வாய் சனி ராகு கேது இவர்கள் இருக்க, நயந்தரு சுபக்கோள் தானும் நாளரசனைசென்மத்தை முயன்றுகண் ணோக்க முற்றால்—இருளை நீக்குகின்ற வெளிச்சத்தைப்போலத் துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுக்கின்ற சுபராகிய புதன் வியாழன் வெள்ளியாமிவர்கள் சந்திரனையும் கர்ப்பாதான இலக்கினத்தையும் பார்த்தால், மொய்குழல் பிணியாவாளே—கர்ப்பமான மாதருக்குப் பிணிதோன்றித் தீரும். (சசு)



கூறிய மதிக்கு நாலில் குணமிலாத் தீக்கோள் நிற்க
ஆறலும் எட்டில் நின்றால் அரிவைகர்ப் பிணியும் சாவாள்
தேறிய சென்மத் துக்குத் திகழ்சுகம் அதிலோர் தீக்கோள்
சேறுரச் செவ்வாய் எட்டில் நிற்கக்கர்ப் பிணியும் சாவாள்.

இ—ள்: கூறியமதிக்குநாலில் குணமிலாத்தீக்கோள் நிற்க—கர்ப்பாதானத்தின்போது சந்திரன்நின்றஇராசிக்கு நாலாமிடத்தில் பாபர்களிருக்க, ஆறலும் எட்டில்நின்றால் அரிவைகர்ப்பிணியும்சாவாள்—செவ்வாய் எட்டாம்இடத்தில்இருக்க கர்ப்பமானமாது அரிட்டமாகுவர். அல்லாமல், தேறியசென்மத்துக்குத்திகழ்சுகமதிலோர்தீக்கோள் சேறுர செவ்வாய்எட்டில்நிற்கக் கர்ப்பிணியும்சாவாள்—கர்ப்பாதானலக்கினத்துக்கு நாலாம்இடத்தில் பாபர்இருக்க செவ்வாய் எட்டில்இருக்கக் கர்ப்பமான மாது அரிட்டமடைகுவர்.

அதாவது சந்திரன்இருந்தராசிக்கு நாலிற் பாபரும் எட்டில் செவ்வாயும் இருந்தாலும் ஆதானலக்கினத்துக்கு 4ல் பாபரும் 8ல் செவ்வாயும் இருப்பினும் அரிட்டமென்ப. (சஎ)

தானமாங் கற்பம் தன்னில் தரைமகன் இருக்கும் போது
வானுறை கதிரோன் எழில் வலிதுட னிருந்தா னாகில்
கானமா னனைய குலாள் கத்தியா யுதங்க ளாலே
நீணில மதனிற் சாவாள் நிச்சயங் காண வென்னே.

இ—ள்: தானமாங் கற்பம் தன்னில் தரைமகன் இருக்கும் போது—கருப்பாதான லக்கினத்தில் செவ்வாயிருக்க, வானுறைகதிரோன் எழில் வலிதுடனிருந்தானாகில்—சூரியன் ஏழாம் இடத்தில் வலிபெற்று இருக்க, கானமானனையகுலாள்—காட்டிலே வசிக்கின்ற மானை நிகர்த்தபெண் கருப்பமானால், அவள் கத்தியாயுதங்களாலே நீணிலமதனிற் சாவாள் நிச்சயங்காண்—கத்திமுதலிய ஆயுதவகைகளினால் அரிட்டமாகுவர் இது உண்மை அநுபவத்திற்காணுக. (சஅ)

என்னவே பவும றுதி யிகலுற்று ஐயம்பெற் றாலும்
பன்னக மதனைச் சேர்க்கும் பகல்மதி தன்னையே பாம்பு
நன்னிட வாதா னத்தின் நவின்றிடு மாதா திக்கே
சொன்னதான் தனிலே மாது துயருறும் பலனை தாமே.

இ—ள்: என்னவே பவுமறுதியிகலுற்று ஐயம்பெற்றாலும்—செவ்வாய்முதலிய கிரகங்கள் ஒருராசி ஒருநட்சத்திரம் நட்சத்திரபாதம்

இவைகளிற் சேருதலால் உண்டாகும் யுத்தமானாலும் யுத்தமாகி ஒருவரை ஒருவர் ஜெயித்தாலும், பன்னகமதனைச் சேர்ந்தும்—ராகுகேது உடனே கூடினாலும், பகல்மதிதனையே பாம்புகண்ணிட—சூரியனை அல்லது சந்திரனை ராகுகேது கூடியிருந்தாலும் கிரகணமானாலும், ஆதானத்தின் கவின்றிடு மாதாதிக்கே சொன்ன காள்தனிலே மாது தியருறும்— கர்ப்பாதான சம்பவத்தில் பத்து மாதங்களுக்கும் அதிபதிகளாய்க் கூறிய ஏழுபேருள் ராகு கேதுவைக்கூடி யுத்தத்தில் அபஜெயம் பெற்றவர் எவரோ அவருக்குச் சொல்லப்பட்ட மாதத்தில் கர்ப்பவதி கஷ்டத்தோடு பிரசவிப்பள். ()

## சுகப்பிரசவம்.

மதியவ னோடு நல்லோர் மருவிட வுதயந் தன்னில்
மதிபெறும் சுபக்கி ரகங்கள் சுகம்பத் திரண்டு வேழாம்
பதிதனிற் கோணம் நல்லோர் பகர்லாபம் மூன்றிற் றீயர்
கதிரவ னுதய பிர்கைதக் கண்டிடச் சுகமாய்த் தோன்றும்.

இ—ள்: மதியவனோடு நல்லோர்மருவிட—சந்திரனுடனே சுபக்கிரகங்கள் கூடியிருக்க, உதயந்தன்னில் சுகம்பத்து இரண்டு ஏழாம்பதிதனில்கோணம் மதிபெறும் சுபக்கிரகங்கள்—கர்ப்பாதான லக்கினத்திலும் நாலிலும் பத்திலும் இரண்டிலும் ஏழிலும் ஐந்தொன்பதிலும் சுபாபசுபராகிய புதன் குரு வெள்ளியிருக்க, பகர்லாபம்மூன்றில் தியர்—ஆறுபதினொன்று மூன்று என்ற உபஜயஸ்தானங்களில் பாபக்கிரகங்களிருக்க, கதிரவன் உதயம் இர்கைதக்கண்டிட சுபமாய்த்தோன்றும்—சூரியன் கர்ப்பாதானலக்கினத்தை சந்திரனைப்பார்க்கச் சுகப்பிரசவமாகும். இங்ஙனமாக எம்மனோர் எல்லோரும் இதனை உற்றுணர்ந்து வினை இடம் காலம் என்ற கர்மாரம்ப லக்கினத்திற்கு அமையக் கர்ப்பாதான் முகூர்த்தத்தை நன்றாய் ஆராய்ந்து நடந்து சுகம்பெறுதல்நலமாகும். ()

தோன்றிய சென்மந் தன்னைச் சுதாகரன் றன்னைத் தானும்
சான்றவ ரென்னும் பானு சசிதனை யவசென் மத்தை
யான்றியே நோக்கும் காலை லுயர்கரு புத்தி யோடு
தோன்றிடு மவனி மீதில் சுகமுள மகவுந் தானே.

இ—ள்: (வெளிப்பொருள்) கர்ப்பாதானலக்கினத்தை அல்லது சந்திரனைப் பிரசவகாலலக்கினத்தை அல்லது சந்திரனை சூரியன்பார்த்தால் கருப்பச்சிசுவானது செழிப்போடுபிறக்கும் சுகபுத்திரருமாகும். ()



## ஆண்பெண்.

சுகமுள மதிபொன் பானு ஆழும்ரா சிகளுஞ் சன்மம்
பகருமாண் ராசி யம்சம் பற்றிட வாண்பி றக்கும்
மிகசம ராசி யம்சம் வெண்மதி ரவிபொன் சென்மம்
தருமேதல் மடவார் சென்மம் சாற்றுவ தோரை யாலே.

இ—ள்: பூரணசந்திரன் குரு சூரியன் புருஷராசியாகிய மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இவைகளிலிருக்கக் கர்ப்பாதான லக்கினமுமவ்விராசிகளில் ஒன்றாக இருக்க மேற்கூறியபடி இரட்டித்தானிற் சங்கமித்தால் ஆண்குழந்தையே செனிக்கும். இன்றும் நவாம்சத்திலும் லக்கினம் சந்திரன் சூரியன் குரு இவர்கள் மேற்கூறிய புருஷராசி அம்சம் அடைந்தாலும் ஆண்புத்திரனே செனிக்கும். மேற்கூறிய இவர்கள் ஸ்திரிராசியாகிய இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவ்விராசிகளில் நிற்கினும், லக்கினமாகவும் இவ்விராசி அம்சம்பெறினும் பெண்குழந்தையே செனிக்கும். (௩௨)

சாற்றிடு கோள்கள் தாமும் சமவிய ராசி நிற்க
ஏற்றிடு மதிக மாக விருக்திடு ராசி தன்னில்
தோற்றிடு மாண்பெண் ணென்று சொல்வது மிரண்டி ராசி
மாற்றிடு மொன்ற தாகில் மருவுகோள் வலிபோ லாமே.

இ—ள்: சாற்றிடு கோள்கள் தாமும்—பூரணசந்திரன் குரு சூரியன், சமவியராசி நிற்க—ஆண்இராசியாகிய மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இவைகளிலும் பெண்ராசியாகிய இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவைகளிலும் கலந்துநிற்பினும், ஏற்றிடுமதிகமாக விருந்திடுராசிதன்னில் தோற்றிடுமாண் பெண்ணென்று சொல்வதும்—பெண்ணிராசியிலிருப்பவரினும் ஆண்ராசியிலிருப்பவர், வலிபெறில் ஆண் என்றும் ஆண்ராசியில் இருப்பவரினும் பெண்ராசியிலிருப்பவர் வலிபெறில் பெண்ணென்றும், இரண்டிராசிமாற்றிடு மொன்றாகில் மருவுகோள் வலிபோலாமே—சகலகிரகங்களும் ஆண்ராசியில்நின்றாலும் அதுபொழுது உச்சாட்சி லக்கினசந்திரதிருஷ்டியாய்ப் பெண்கிரகமாகிய அபரபக்கச் சந்திரன் புதன் வெள்ளி இருப்பின் பெண்சிசுவென்றும் சகலகிரகங்களும் பெண்ராசிகளில் நின்றாலும் அதுபொழுது உச்சாட்சிபெற்று லக்கினத்தையும் சந்திரனையும் பார்த்து ஆண்கிரகமாகிய செவ்வாய் சூரியன் வியாழன்நின்றால் ஆண்சிசுவே தோன்றுமென்ப. இன்றும் ஆண்ராசி புருஷராசி ஆண்ராசி ஸ்திரிராசியெனப் பொதுப்படக்கூறினும் இவ்வொவ்வொருராசியும் ஆண் பெண், பெண் ஆணென்ற இருகூறு

டையனவாய்ச் சூரியசெலவு சந்திரசெலவு என்னவிற்கும் இவற்றையும் தனித்தறிவதகடன். (௩௬)

## ஆண் உற்பவம்.

வலிவுறு மிரவி பொன்னன் மருவிட வொற்றை ராசி
நலமுட னெந்த வோரை நவாங்கிச மெதினுற் றூனும்
பலனுறு புருஷ சென்மம் பாரினி லுதிக்கு மென்று
தலமதி லுடைய பேர்க்குத் தானுரைத் திடுவதாகும்.

இ—ள்: கற்பாதானகாலம் வலிவுறமிரவிபொன்னன் மருவிடவொற்றைராசி—சிறந்தபெலத்தோடு சூரியன் வியாழன் புருஷராசியாகிய மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பமென்ற இராசிகளில் நின்றும், நலமுடனெந்தவோரை நவாம்சமுற்றாலும்—நவாம்சத்திலே இவர்கள் ஸ்திரிராசி யம்சம்பெற்றிருப்பினும், பலனுறு புருஷசென்மம் பாரினிலுதிக்கும்—தப்பாது ஆண்குழந்தையே உற்பவிக்கும். (௩௭)

## பெண் உற்பவம்.

ஆகிய புகரோன் புந்தி யம்புலி இந்த மூவர்
வாகுடன் வலியுள் ளோராய் மகிழ்சம ராசி நிற்க
ஏகிய நவாம்சந் தானெதுவாக இருந்திட் டாலும்
தோகையாள் கருப்பி ணிக்குத் தோன்றிடும் புவியில் பெண்ணே.

இ—ள்: ஆகிய புகரோன்புந்தி யம்புலியிந்தமூவர் வாகுடன் வலியுள்ளோராய் மகிழ்சமராசிநிற்க—பெண்கிரகமாகிய வெள்ளி புதன் அபரபக்கசந்திரன் வலிமையுள்ளவராய் பெண்ராசியாகிய இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவைகளில் நின்று, ஏகிய நவாம்சந்தானெதுவாக இருந்திட்டாலும் தோகையாள் கருப்பிணிக்கு தோன்றிடும் புவியில்பெண்—மேற்கூறியஇவர்கள் நவாம்சத்தில் எவ்வித அம்சமடைந்திருந்தாலும் கற்பமாதானமாயின் அம்மாதர் உதரத்தே பெண்குழந்தையே உற்பவிக்கும், ஆகியபுகரோன் செவ்வாயம்புலி யெனப்பாடமும் வெள்ளி செவ்வாய் சந்திரன் எனக்கூறுவாருமுளராகுவல் செவ்வாய் புருஷக்கிரகமானமையால் அதுபொருந்தா.

சந்திரனைப் பூர்வசந்திரன் அபரசந்திரன் என அமாவாசைகழித்த முதல் பூரணசந்திரனென்றும் பௌர்ணமைகழித்தமுதல் குறைந்தசந்திரனென்றுங் கூறுவது உலகில் கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழக்கமாகின்றது.



காலாமிர்தத்திற்கூறியபடி:

சந்திரனுடைய பூர்ணத்துவ க்ஷீணத்துவங்களும் இவற்றின்பலனும் சந்திரன் பூர்வபக்க அட்டமிமுதல் அபரபக்க அட்டமிவரையும் பூரணனும் அபரபக்க அட்டமிமுதல் பூர்வபக்க அட்டமிவரையும் க்ஷீணனும் பூரணசந்திரன் சுபகரனும் க்ஷீணசந்திரன் அசுபகரனுமாம். மேலும் பூர்வபக்ஷ ஏகாதசிமுதல் அபரபக்ஷ அதாவது கிருஷ்ணபக்ஷப்பஞ்சமிவரையில் பூரணசந்திரசுபகரனென்றும் பூர்வபக்ஷ ஷஷ்டிமுதல் தசமியந்தம்வரையும் அபரபக்க ஷஷ்டிமுதல் தசமியந்தம்வரைக்கும் மத்திமசந்திரனதலால் அல்ப்பபலப்பிரதனென்றும் அபரபக்கஏகாதசிமுதல் பூர்வபக்ஷப் பஞ்சமிவரையில் மிகவும் க்ஷீணசந்திரனுகையால் அசுபகரனென்றும் தாத்பரியம். ஆகவே இங்கேகூறியபடி சந்திரன் உத்தமன் மத்திமன் அதமனென மூவ்விபாகப்பட்டு உத்தமசுபன் மத்திமசுபன் பாவியெனப்படும்.

## இரட்டைச்சென்மம்.

புவிதனில் தகரும் வீணை புகன்றிடு மங்கி சத்தில்
தவமுள பொன்மால் நிற்கச் சாமன்னில் யாழை நோக்கக்
குவலய மதிலாண் பெண்ணும் கூடியே கருவி ருந்து
அவனியிற் றோன்று மென்றே யறிந்திடாய் கோன்தன் னூலே.

கற்பாதானமாம்போது.

இ—ள்: சூரியனும் குருவும் மிதுன நவாங்கிசம் அல்லது தனுநவாங்கிசத்திலிருக்க இவர்களைப் புதன்பார்க்க ஆணும் பெண்ணுமாகக் கூடியஇரட்டைப்பிள்ளை பிறக்குமென்பதாம். (௩௮)

## பெண்சென்மம்.

அரிவையு மாமிலே யோரை யதினவாங் கிசையி லொன்றில்
குருதிபு மலவன் சுங்கன் குணமுட னிருக்கும் போது
அதினுறு மிவரை நோக்க வமுகுறு மடவா ராக
விரிபுவி யதிலு திக்கும் விபரங்க ளிதுதான் காணே.

கற்பாதானமாம்போது.

இ—ள்: கன்னி மீனராசி நவாங்கிசத்தில் செவ்வாய் சந்திரன் சுக்கிரன் இவர்களிருக்க, புதன் இவர்களைப்பார்க்கப் பெண்குழந்தை பிறக்கும். உதாரணம் வருசாதகம் சொல்லப்பட்டிருக்கிறதென்பதாம். ( )

## ஆண்சென்மம்.

பாவிய சனிய வன்றன் பற்றுமா தானஞ் சென்மம்
வருமது தன்னை விட்டே மன்னிடப் புருஷ ராசி

திரிதிய மைந்தே மொன்பான் செய்பனா பங்க டன்னில்
கிரியவ னிருக்க வாண்சேய் காசினி யதினு திக்கும்.

கற்பாதானகாலம்.

இ—ள்: சனி கற்பாதானலக்கினத்தைவிட்டுப் புருஷராசியிலிருந்தும் லக்கினத்துக்கு மூன்று ஐந்து ஏழு ஒன்பது பதினொன்று இத்தஸ்தானங்களில் ஒன்றாக சனியிருக்க ஆண்குழந்தைபிறக்குமென்பதாம்.

## அலிசென்மம்.

உற்றசன் மதியோன் றானு மயுக்ம ராசி தன்னிற்
பற்றிட வாத வன்றான் பகர்விய ராசி யேறி
நிற்றலான் மதியைப் பார்த்து சேர்பெற நோக்கும் போது
பெற்றசே யலியா மென்று பேசுவா யுலகிற் றேனே.

கற்பாதானகாலம்.

இ—ள்: சந்திரன் இரட்டைராசியாகிய இடபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இந்தராசிகளிலிருக்க சூரியன் மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இந்தராசிகளில் எதிலாகிலுமிருந்து சந்திரனைப்பார்க்கப் பிறக்கிற சிசு அலியாகுமென்பதாம். (௫௯)

உலகத்திற் புருஷ ராசி யுற்றிடு மாலோன் றன்னை
நலமுறு மிரட்டை ராசி நண்ணிய சனியன் நோக்கக்
குலவுமிப் புவியு தித்த குழந்தையு மலிய தென்றே
சலனம தற்றே கூறு தாரணி மானி டர்க்கே.

இ—ள்: மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இந்தராசிகளிலிருக்கிற புதனை இடபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவைகளிலிருந்து சனி புதனைப்பார்க்கத் தோன்றும் சிசு அலியாகுமென்பதாம். (௬௦)

தாரணி சுதனுஞ் செவ்வாய் தங்கிடப் புருஷ ராசி
சூரனு மிரட்டை ராசி சுகமுட னிருக்க விக்கோள்
சேரதா யொருவ னைத்தான் செறியுட னோக்கும் போது
பாரதி லலிய தாகப் பாவைபெற் றெடுப்பாள் மானே.

கற்பாதானகாலம்.

இ—ள்: செவ்வாய் மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இந்தப் புருஷராசிகளிலிருக்கச் சூரியன் இடபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இந்த ஸ்திரீராசிகளிலிருந்து செவ்வாயைப் பார்க்க அல்லது செவ்வாய் சூரியனைப்பார்க்க அலிசெனனமென்பதாம். (௬௧)



நானவன் செனன மொற்றை தானுறச் சேய்வன் றன்னி
னினமி ரிரட்டை ராசி யிருந்துமே மதிசென் மத்தைத்
தானுமே நோக்கும் போது சாற்றிடு மலிய தாக
ஞானிக ளறியத் தோன்றும் நற்பலன் கூறு நான்கே.

கற்பாதானகாலம்.

இ—ள்: சந்திரனிருந்த இராசியும் சென்மலக்கினமும் புருஷஇராசியாகி செவ்வாய் ஸ்திரீ இராசியிலிருந்து சந்திரனையாவது சென்மலக்கினத்தையாவது பார்க்க காலாவது அலிசெனனம் பிறக்குமென்பதாம். (௬௨)

கூறிய மதிபெண் ராசி குலவுமா லாணி ராசி
சேரவே இருக்கும் போது சிறப்புறு மிவர்க ளைத்தான்
ஆரலே கண்ணுற் றக்கா லவனியி லுதித்த பாலன்
நேரதா மலிய தென்றே நிச்சய பலன்கூ றைந்தே.

கற்பாதானகாலம்

இ—ள்: புதன் புருஷ இராசியிலும் சந்திரன் ஸ்திரீ இராசியிலுமிருக்க இவர்களைச் செவ்வாய் எந்தராசியிலிருந்தாவது பார்க்க இந்தாவது அலிசென்மம் பிறக்குமென்பதாம். (௬௩)

பலனுறு மதிஜன் பங்கள் பனிங்கலை னெங்குற் றாலும்
நலமுறு புருஷ ராசி நவாம்சிகை தனிலி ருக்கத்
தலமதில் மகவு திக்கால் தப்பாது அலிய தென்று
பெலமுட னுலகோ ருக்குப் பேசுநன் முறையிம் மாதே.

கற்பாதானகாலம்.

இ—ள்: சந்திரனும் லக்கினமும் சுக்கிரனும் இராசியில் எதிலிருந்தாலும் அம்சையில் புருஷராசியாயிருக்க இவர்கள் அதில் வலிதுடனிருக்க ஆனாலது அலிசென்மம் பிறக்குமென்பதாம். (௬௪)

முறையுட னிலவும் வெள்ளி மொய்குழ லிராசி நிற்கச்
சாகுரு மால்சேய் சென்மம் அயவானா ராசி யாகில்
பாவிய கோள்க டங்கும் பற்றது மிதுனம் போலத்
திருமுடன் பெண்ணு மாணும் சேர்ந்துமே பிறக்கும் செப்பே.

கற்பாதானகாலம்.

இ—ள்: சந்திரன் சுக்கிரன் இருவரும் இரட்டை இராசியிலிருக்கக் குரு புதன் செவ்வாய் சென்மலக்கினம் இந்த நாலும் ஒற்றையிலே

சியாயிருக்க இப்படிக் கிரகம் ஸ்திரீராசியிலும் புருஷராசியிலுமிருப்பதால் இந்த விதமாக மிதுனத்தைப்போல ஸ்திரீகுழந்தையும் புருஷக்குழந்தையும் ஜெனனமாகுமென்பதாம். (௬௫)

செப்பிய ஜென்ம லக்னஞ் செழுமதி யுதைய மில்லம்
ஒப்பிய சமமே வாசையா யுயர்புரு ஷக்கோள் தானும்
தப்புறு மதியை யல்லால் தாயஜென் மத்தைப் பார்க்க
இப்புவி யதிலாண் பெண்ணு மிரட்டையாய்ச் ஜெனிக்கு மாமே.

கர்ப்பாதானகாலம்.

இ—ள்: ஜென்மலக்கினமும் சந்திரனிருந்த வீடும் இரட்டையிராசியாயிருக்கப் புருஷகிரகங்களாகிய செவ்வாய் சூரியன் குரு இவர்களில் யாராவது ஜென்மலக்கினத்தையாவது மதியையாவது பார்க்க ஆண்குழந்தையும் பெண்குழந்தையுமாகக் கூடி இரட்டைப்பிள்ளையாகப் பிறக்குமென்பதாம். (௬௬)

இரட்டைரா சியதே ஜென்ம பிரணியன் செவ்வாய் புந்தி
இரட்டைரா சியிலே மிக்க வெழில்பெல வானைப் பிறக்க
இரட்டையாய்ப் பெண்ணு மாணு மேந்திழை பெறுவா ளென்று
இரட்டைஜென் மங்கள் தன்னை யியம்பினை னவனி யோர்க்கே.

கர்ப்பாதானகாலம்.

இ—ள்: ஜென்மலக்கினம் குரு செவ்வாய் புதன் இவர்கள் ஸ்திரீராசியாக அவர்களுமந்தராசியில் பலவானுயிருக்கக் கர்ப்பிணி ஆணும் பெண்ணுமாக இரட்டைப்பிள்ளைகளைப் பெறுவாளென்று இந்தவிதமாக இரட்டைச்ஜென்மங்கள் சொல்லப்பட்டிருக்கிறதென்பதாம். (௬௭)

இயம்பிடு யாழ்ந வாம்ச மிருந்திடு புலவன் றன்னை
நயமுறு முபய ராசி நவாம்சி மிருந்த கோள்கள்
சுயமொடு நோக்குங் காலிற் றோன்றிடு புருஷ ஜென்மம்
மயிலெனப் பெண்ணி ரண்டை மங்கைபெற் றெடுப்பா ளாமே.

கர்ப்பாதானகாலம்.

இ—ள்: மிதுன நவாம்சத்திலிருந்தபுதனை உபயராசியாகிய கன்னி தனு மீனத்திலிருந்தகிரகம் புதனைப்பார்க்க ஆண்குழந்தை ஒன்றும் பெண்குழந்தை இரண்டுமாக மூன்றுசிசுவைப் பெற்றெடுப்பாளென்பதாம். (௬௮)



மங்கைதன் நவாம்சை யுற்ற மால்தனை யுபய ராசி
தங்கிய கிரகம் நோக்கத் தையலி ரண்டா ளொன்றாக
இங்கிதத் துடனே மூன்று விளவலை பெறுவா ளென்று
சங்கைய தளவு ரைத்தோம் தாரணி யுறுமார் தர்க்கே.

இ—ள்: கன்னிராசி நவாம்சையிலிருந்த புதனை மற்ற உபயராசிகளிலிருந்த கிரகங்கள் பார்க்கப் பெண்குழந்தை இரண்டும் ஆண்குழந்தை ஒன்றும் ஆக மூன்றுசிசுக்களைப் பெறுவாளென்பதாம். (௬௯)

உறுமியாழ் நவாங்கி சத்தி லுறைதந்தபண் டிதனைத் தானும்
தாரகம்மில் லதனி லுற்ற தாயகோ ளெவர்க ளேனும்
மருவிட லது நோக்க மங்கையுஞ் சிசுக்கள் மூன்றைப்
பெருமையா யாண தாகப் பெறுவள்பே ருலகிற் றானே.

இ—ள்: மிதுன நவாங்கிசத்திலிருந்த புதனைத் தனு மீன மிருந்த கிரகம் நோக்கினாலும் அல்லது மிதுனராசியிற்றானே யாராவது கூடியிருந்தாலும் அப்போது மூன்று ஆண்சிசுக்களைப் பெறுவாளென்பதாம். (௭௦)

பேர்பெருங் கன்னி ராசி பெருநவாங் கிசையி லுற்ற
சீர்பெரும் மாலோன் றன்னைத் திகழ்கயல் செடி யம்ச
மார்கிர கங்கள் தாமும் மங்கையா மிராசி தன்னைப்
பார்தனி லேக்கப் பெண்சேய் பகர்வது மூன்று திக்கும்.

இ—ள்: கன்னியாராசி நவாம்சையிலிருந்த புதனை யாராவது கூடினின்றாலும் அல்லது மீனநவாங்கிசையிலிருந்த கிரகம் யாராவதுநோக்கினாலும் மூன்று பெண் சிசுக்களைப் பெறுவாள். (௭௧)

உதயமு மைந்தொன் பானி லுயர்புல வனுமே நிற்க
மதியொடு மற்ற வைவர் மாலுக்கு வலிவு குன்றின்
அதிகமும் வயிறு கைகா லங்கமும் விருத்தி யாகிப்
பதியதி லுதிப்பா னென்று பகருவாய் பலனைத் தானே.

இ—ள்: ஜென்மலக்கினம் ஐந்தாமிடம் ஒன்பதாமிடங்களிற் புதன் சொந்த ஆட்சி உச்சமூலத்திரிகோணம் என்னுமிடத்தில் வலி நடனிருக்க மற்றக்கிரகங்கள் புதனைப்பார்க்கிலும் வலிகுறைந்திருக்க அதிக அங்கமாம். அதெப்படியென்றால் கால் கை வயிறு முதலானவிடங்களாகும். காலில் விரலதிகமாயும், கையில் விரலதிகமாயும் அல்லது கட்டிச் சதைவளர்ச்சி முதலான தாமாகுமென்பதாம். (௭௨)

தானவன் விடையி னிற்கச் சலசர னண்டு தேனி
லானவந் தியசு வாங்கிச மடைந்திடு பாபக் கோளால்
ஊனவாக் குடையோ னுக வுற்பவக் கற்பச் சேயன்
மானிலந் தனிலு திப்பான் மகவிதன் பலனைக் கூறே.

இ—ள்: சந்திரன் இடபராசியிலிருக்கக் கடகம் மீனம் விருச்சி கத்தின் கடைசி நவாங்கிசத்திற் பாபர்களிருக்தாராகில் அவராமல ஊமை யனுகப் பிறப்பன். (௭௩)

கூறுமென் னிலவை நல்லோர் குறிப்புட னோக்கில் வாக்கும்
தேறியே வசனிப் பானும் பெரும் சுபர்தன் னோக்கம்
சேரிடில் சுபர்வ னுத்தால் நிலமதில் சின்னாள் வாக்கு
சாருமாம் வலிதாய்த் தியர் தானோக்க வூமை சொல்லே.

இ—ள்: முன்கவியில் சொல்லியபிரகாரம் கிரகமிருந்து அந்த இடபசந்திரனைச் சுபர்கள்நோக்க ஊமையல்ல நன்றாய்ப்பேசுவானும் சுப ரும்பாபரும்பார்க்கச் சிலநாட்சென்றுபேசுவான். பாவர்கள்நோக்க ஊமை யெனப்படும். (௭௪)

அரும்பிய மிதுனங் கன்னியிற் புந்தி யங்கிசத் தனிற்செவ் வாய் காரி, யிருந்துகா னுதயஞ் செய்திடப் பிறந்தோ லக்கண மின்றியே படிக்காய்த், திருந்திய வாயிற் பல்லுடன் பிறக்குஞ் சேய்சனி யுச்சமே யாகிற், பெரும்பல்ல தாக நிரம்பிய வாயாய்ப் பிறந்திடும் பேடின மயிலே.

இ—ள்: மிதுனகன்னியில் புதன் இருக்க—மிதுனகன்னி நவாம் சத்தில், செவ்வாய் சனியிருக்க ஜெனித்த கருப்பசிசுவுக்குச் சிறப் பில்லாதபல்லுகள் தோன்றிப் பிறக்கும். செவ்வாய் சனி உச்சம்பெற்று மிதுனகன்னியிலிருந்த புதனைப்பார்க்கப் பெரியபல்லுகள் நிரம்பவுடை யனவாய்ப் பிறக்கும். (௭௫)

கலைமதி தன்னைச்சே யெதிர் பார்க்கக் கடகந்தா னிலக்கின மாகக், குலவிடப் பிறந்தோன் கூனனே யாவன் குறித்திடு மதி செவ்வாய் சனிய, னலைவிலா மீனந்தன்னையே நோக்க வாங்கமே துதயமாய்ப் பிறந்தோன், சிலைகவர் நுதலாய் கூனனு மென னச் செப்பினர் கணிதநூ லவரே.



இ—ள்: சந்திரனைச் செவ்வாய்பார்க்க, கற்பாதான லக்கினம் ஜென்மலக்கினம் கர்க்கடகமாக உற்பவமானசிசு கூன்உருவமாம். அல் லாமல் சந்திரன் செவ்வாய் சனி மீனராசியைப்பார்க்க அந்தமீனம் கற் பாதான லக்கினம் ஜென்மலக்கினமாய்வர, குழந்தை கூனனுய்ச்ஜெனிக் கும். (௭௬)

மீனத்தேன் கடகம் வந்ததின் மதிதான் மிருபாவர் தன்னு டன் நிற்க, தானம்ஃ துதய மாகவே பிறந்தோன் தரணியிற் செவி டனே யாவன், வானுறு கதிரோன் மதிசனி பார்க்க மகரலக் னந் தனிற் பிறந்தால், நானில மீதிற் குறளனுய்ப் பிறப்பன் நறை கமழ் கமலயின் னரசே.

இ—ள்: மீனகடகவிருச்சிகத்தில் சந்திரன் பாவராகிய இரவி சேய் சனி ராகு கேதுவுடன்இருக்க, மீனகடகவிருச்சிகம் ஆதான ஜென் மலக்கினமாய்வரத் தோன்றினும் பிறக்கினும் செவிடனுகும், சூரியனைச் சந்திரனைச் சனிபார்க்க மகரலக்கினம் ஆதானஜென்மமாகத் தோன்றி னும் பிறக்கினும் குறள்ருபமாகும். (௭௭)

ஆமக ரத்திற் பிறந்திடச் சனிய னருக்கனும் நோக்கிடிற் றுடைக்கீ, ழேமிகக் குறைவாம் மதிசனி கதிரு மெதிருற நோக் கிடிற் றுனே, கோமள மான வவயவங் களிலே குறைவுண்டா மிவர்களை பெலக்கிற், றுமிவர் பெலமே யில்லையே யாயிற் சங்கம் வங் கெய்திடு மென்பார்.

இ—ள்: மகரம் ஆதானஜென்மலக்கினமாக-மகரத்தைச்சூரியன் சனி பார்க்க, துடையின்கீட்பாதம் சோம்பச்ஜெனித்துப்பிறக்கும். சந் திரன் சூரியன் சனி ஒருவரையொருவர் பார்த்திருந்தால் சிரசு நெஞ்சு முகம் பாதம் இன்னோரன்ன அவயவக்குறைவுடன் ஜெனித்தும்பிறக்கும். சந்திரன் சூரியன் சனி இவர்கள் பெலஹீனமாய் நின்றொருவரையொரு வர்பார்த்தால் கர்ப்பச்சிசுவிற்குறையின்றியும் பின்வாழுங்காலத்திலவ யவஹீனம்உடனதாகும். (௭௮)

ஜென்றலைக் தாமி ராசித் திரிகோண மூன்றிற் பாவர்
நின்றிடிற் கால்கை யூனம் நிகரொன்பான் மூன்றிற் பாவர்
ஒன்றிற்கால் குறைந்தி ருக்கும் உதயத்தின் மூன்றிற் பாவர்
ஒன்றிடிற் கலைசி துக்கு மொளிமதி முகத்தி னளே.

இ—ள்: ஜென்றலைக்தாமிராசித் திரிகோணமூன்றிற் பாவர் நின்றிடில்—பன்னிரண்டுராசிகள் சரம் திரம் உபயமென முன்னிபாகப்

படும் மேடம் கர்க்கடகம் துலாம் மகரம் சரராசியும், இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் திரராசியும், மிதுனம் கன்னி தனு மீனம் உபயராசியும் எனப்படும். சரராசிகளை ஆதானசென்மலக்கினமாய்க்கொண்ணும் இடத்து அவ்விலக்கினபாகை முப்பதுள் முதற்பத்துள் இலக்கினமே திரேக்காணம் இரண்டாம்இருபதுள் ஐந்தாம்ராசியே திரேக்காணம் மூன்றாம்முப்பதுள் ஒன்பதாம்ராசியே திரேக்காணம்.

திரராசிகளை யாதானசென்மலக்கினமாய்க் கொள்ளுமிடத்து, அவ்விலக்கினபாகை முப்பதுள் முதற்பத்துப்பாகைக்குள் ஒன்பதாவதான ராசியே முதற்றிரேக்காணம். இரண்டாம்இருபதுள் உதயலக்கின ராசியே இரண்டாந்திரேக்காணம். மூன்றாம்முப்பதுள் ஐந்தாவதான ராசியே மூன்றாந்திரேக்காணம்.

உபயராசிகளை ஆதானசென்மலக்கினமாய்க் கொள்ளுமிடத்து, அவ்விலக்கினபாகைமுப்பதுள் முதற்பத்துப்பாகைக்குள் ஐந்தாவதான ராசியே முதற்றிரேக்காணம். இரண்டாம்இருபதுள் ஒன்பதாவதான ராசியே இரண்டாந்திரேக்காணம். மூன்றாம்முப்பதுள் உதயலக்கின ராசியே மூன்றாந்திரேக்காணம். இம்முறைகண்ட லக்கினம் சரம் திரம் உபயமென்ற விகற்பங்களைஉணர்ந்தும் நிகழ்காலம் கொள்ளும் இலக்கினத்தின் முற்பாகமோ நடுப்பாகமோ கடைப்பாகமோவென்பதை லக்கினப்புடத்தாலும் ராசிநாழிகைப்பாகத்தாலும் தெரிந்தும் பின்னர் ஆதானசென்மலக்கினம் ஐந்தாந்திரேக்காணமாயிருக்க, ஐந்திற்குமூன்றிலும் கொள்ளும் லக்கினத்துக்கு ஏழிலும், பாவராகிய சூரியன் செவ்வாய் சனி இராகு கேது இருக்க, கால்கையூனம்—கால்கைகளிலூனமும், நிகரொன்பான்மூன்றிற் பாவர் ஒன்றிற் கால்குறைந்திருக்கும் ஆதானசென்மலக்கினம் ஒன்பதாந்திரேக்காணமாயிருக்க, ஒன்பதுக்கு மூன்றிலும் கொள்ளும்லக்கினத்துக்குப் பதினொன்றிலும் மேற்கூறிய பாவர் இருக்க, கூனங்காலாகச்செனிக்கும், உதயத்தின்மூன்றிற் பாவரொன்றிடிற் தலைசிறுக்கும்—கர்ப்பாதானசென்மலக்கினம் உதயதிரேக்காணமாயிருக்க உதயராசிக்கு மூன்றிலே மேற்கூறிய பாவர்இருக்கத் தலைசிறுத்துச் செனிக்கும்.

திரேக்காணஉதிப்பைச் சரதிரஉபய பாகுபாடின்றி நேரே முதற்பத்துப்பாகைக்குள் உதயதிரேக்காணமென்றும், இருபதுபாகைக்குள் ஐந்தாந்திரேக்காணமென்றும், முப்பதுபாகைக்குள் ஒன்பதாந்திரேக்காணமென்றும், யாதும் ஆதாரமில்லாதமுறையில் சொன்பவர் சிலருளர். மேலேகூறப்பட்டுள்ளவிதி ஜாதகசிந்தாமணியி லுதாரணத்தோடு பரக்



க்காணலாம். அதாவது ஆளப்படுமலக்கினத்துக்குரிய நட்சத்திரபாதங்கள் ஒன்பதுள் மும்மூன்றுபாதம ஒவ்வொருதிரேக்காணம். சொன்னப்பட்ட இராசிலக்கினத்துக்குரிய நட்சத்திரஆரம்பபாதம் எந்தஅமசத்துக்குரியதாகுமோ அதுவே முதற்றிரேக்காணமாயிருக்கும். ஆகவே சரராசிகள் ஒன்றைத்தொன்பது. திரராசி ஒன்பதொன்றைந்து. உபயராசி ஐந்தொன்பதொன்றாய் ஆரம்பித்து முடியுமென்க. சோதிடகிரகசிந்தாமணியில் திரேக்காணலக்கினமுறையைக் காண்க. மும்மூன்றுணபாதத்துள் முதல்மூன்றின் முதற்பாதாம்சஆரம்பம். இரண்டாம் மூன்றின் இரண்டாம்பாதாம்சதிரேக்காணம். மூன்றும் மூன்றின் மூன்றும்பாதாம்ச சராசி திரேக்காணம். (௭௯)

என்னவே யொன்றைந் தொன்பா னிராசிகள் மூன்றி லுந்தான்
உன்னுதி ரேக்கா ண மிரண்டி லுதிர னுமிருந்த போது
சுன்மதி பகல வன்றன் றொடர்ந்துமே நோக்க முற்றால்
தன்னது பாத வினைத் தனையனுற் பத்தி யாவான்.

இ—ள்: ஒன்றைந்தொன்பானுக ஒன்பதொன்றைந்தாக ஐந்தொன்பதொன்றாகக் கொள்ளுந்திரேக்காண இராசிகளுள் இரண்டாந்திரேக்காணத்திருந்த செவ்வாயைச் சூரியசந்திரன் சனி இவர்கள்நோக்கப் பாதவினைமாணபிள்ளை செனிக்குமென்ப. (௮௦)

உதயத்திற் காரி பாம்பு உற்றிடப் பெரிய நாபி
சிதைவிலாச் சனிமால் கூடிச் சென்மத்தில் நிற்கிற் கூனும்
இதையராச் சேயுங் கூட விராகுவுஞ் சனியுங் கூடச்
சுதைபதி முகத்தா யோரைத் தோன்றுஞ்சேய் பிணிய தாமே.

இ—ள்: கர்ப்பாதான சென்மலக்கினத்தில் சனிராகு இருக்க நாபி பருத்தும், மேலேகூறிய லக்கினங்களில் சனி புதன் இருந்தால் கூனும், மேலேகூறிய லக்கினங்களில் செவ்வாய் இராகு கூடியிருந்தாலும் இராகு சனி கூடியிருந்தாலும் பிணியுமாகத்தோன்றும். (௮௧)

வாக்கினிற் செவ்வா யாதின் மதிநிற்கி லிடக்க ணூனம்
வீக்கிய வெட்டிற் பானு வியத்தினிற் சனிதான் நிற்கப்
போக்கிடும் வலக்கண் டன்னைப் புகழ்மதி யிரவி தானும்
தாக்கிட வினி நிற்கிற் குனிரு கண்போ மென்பார்.

இ—ள்:கர்ப்பாதான சென்மலக்கினத்துக்கு இரண்டாமிடஞ்செவ்வாய்நிற்க ஆறும் இடம் சந்திரனிருந்தால் இடக்கண்கேடு. மேற்படி லக்கி

ளங்களுக்கு எட்டில் சூரியன் பன்னிரண்டிற்சனி இருந்தால் வலக்கண் கெடு. சூரிய சந்திரன்சேர்ந்து ஆறெட்டிலிருக்கச் செவ்வாய்சனிஇரண்டு பன்னிரண்டில் நின்றால் இருகண்ணும் போகும். (௮௨)

பகருமா தான லக்னம் பற்றிடு மிரவி யாட்சி
பகலவ னுடனே திங்கள் பரிவுடன் கூடிநிற்கப்
பகலவன் சுதனும் சேயும் பாக்குட னுதயம் நோக்கப்
பகரிரு விழியி லானுப் பாபதி னுதிக்கும் சேயே

இ—ள்: கற்பாதானலக்கினம் சிங்கமாக அதில் சூரிய சந்திரன் இருக்க சனி செவ்வாயுதயத்தைப்பார்க்க, கர்ப்பமாம் சிசுபார்வையின்றிப் பிறக்குமென்ப. (௮௩)

உதயமா தான சிங்க மோனிகதி ராட்சி சென்மப்
பதியதைச் சனிசேய் நோக்கப் பாலர்க்கு வலக்க ணூனம்
மதியவன் சீயம் நிற்க மங்கலன் சனிநோக் காகில்
விதிபெறு மிடக்க ணூனம் விளக்கமாய் வந்த சேயே.

இ—ள்: கர்ப்பாதானம் சென்மலக்கினம் சிங்கமாக சூரியன் ஆட்சியாய்ச் சிங்கத்திநிற்ப சனி செவ்வாய் சூரியனை உதயத்தைப்பார்க்கத் தோன்றுஞ் சிசுவலக்கணூனம். அன்றி சந்திரன் சிங்கத்தேநிற்கச் சிங்கமாதானசென்மலக்கினமாகச்செவ்வாய் சனியுதயத்தைமதியைப்பார்க்க உதிக்கும் சேய்க்கு இடக்கண் ஊனம். (௮௪)

அற்புத லக்ன மைந்தி லொன்பதிற்
பொற்புள புந்தி பொருந்துற் நிற்றனர்
துர்ப்பல மாயிடிற் றோற்றுங்கை கால்களின்
கற்பி லதிக விரல்களைக் காட்டுமே.

இ—ள்: கர்ப்பாதான சென்மலக்கினத்துக்கு உதயம் ஐந்தொன்பதாமிடத்தில் புதன் பகைநீசம் அஸ்தமயனமாய்ப்பாவரால் நோக்குற்று சுபர்நோக்கற்று நின்றால், கைகாலில்ஐந்துக்குமேற்பட்ட விரல்கள் உண்டாகும். இங்ஙனம் இவர்கள் நிற்றலாலும் நோக்கலாலும் மேற்கூறியபடி சுகதுக்கங்கள் சம்பவிக்குமாகக் கூறியும் இதன்பின்னுமோர் சமாதானமும் சொல்லப்படும். (௮௫)

காணுந்திக் கோள்கள் கூட நண்ணிய சுபர்நோக்காமேல்
சூழுமிப் படிப்ப லிக்குஞ் சொலுந்தியோர் பலமே குன்றி



வீழுற நற்கோள் பார்க்கின் விளங்கிய மகவங் கத்தில்
கோளுறு வியாதி தன்னைக் குறிப்பறிந் துரைக்க லாமே.

இ—ள்: மேற்கூறியவிதிகளின்படி சூரிய சந்திரனையும் கர்ப்பாதான சென்னலக்கினத்தையும் ராசியையும் சுபாசுபாவராகிய செவ்வாய் சனி ராகு கேது இவர்கள் கூடியிருப்பினும் நோக்கினும் மேலேகூறிய சூரிய சந்திரனை இலக்கின ராசியை அப்பாவரைச் சுபாவசுபராகிய புதன் வியாழன் வெள்ளி கூடாமலும் பாராமலுமிருந்தால் அவ்வப்பலன் நிராகரிக்கப்படாது சம்பவிக்கும். பிரமாதாக் கர்ப்பம்சிசு இவர்களுக்கு விருத்தியு முதலியதுன்பங்களை உண்டாக்கக் காரணராகும் செவ்வாய் சனி ராகு கேது பெலக்குறைந்திருக்கச் சுபர்கள்பார்த்தால்அவ்வப்பலன் நிராகரிக்கப்பட்டுப் பிணியச்சந்தோன்றித்திரும். (௮௬)

தூயசந்தான தீபிகை யதனிற் சொல்லிய தீப்பலன் யாவும்
ஆயபொன் வெள்ளி வளர்பிறைத் திங்க ளளவுற நோக்கிடிற் றீரும்,
காய்சினக் களிற்றின் கோடுபோல் திமிர்ந்து கற்புடைச்
செப்பெனப் பணைத்து, மேயதெள் ளமுதக் கலசத்தை வென்று
விளங்கிய கொங்கையின் னரசே.

இ—ள்: தூயசந்தான தீபிகையதனிற் சொல்லிய தீப்பலன்யாவும்—சோதிடாருதிகள் பலவற்றுள் கூறிய கூறியபடி தவறுத பலாபலன் திகழும் விதிகளை அனுபவத்தர் அங்கீகரித்த சத்தம்பொருந்திய சந்தான தீபிகைப்பெயர் நூலில் சொல்லப்பட்ட, தீயனகாம்பலன், ஆயபொன் வெள்ளி வளர்பிறைத் திங்களளவுற நோக்கிடிற்றீரும்—வியாழன் வெள்ளி பூரணசந்திரன் இவர்கள் தீமையாகிய பலனைஎயும் விளைக்கிகாரிய பாவரையும் இலக்கின ராசியையும் நோக்கியும் கூடியும் பெலம் பெற்றிருந்தால் தோஷநிவாரணமென்பர். (௮௭)

## புத்திரதோஷம்.

கடலான கலைக்ஞான தேசிகனுங் கயமுகனைக் குகனைக் காண்கும், மடலாருங் குவவுறுபூந் தாமரையிற் பதிந்தருளும் வாணிமானை, அடலாரு மொன்பதுகோ ளாகியவா னவர்தம்மை யடியார் நெஞ்சத், திடரான தைத்துரப்பீர் அருள்சுரப்பீ ருரைப்பான் இறைஞ்சு வேனே. (௮௮)

செல்வ மைந்தரில் லாததுஞ், சேர்வதும்
புல்லு மைந்தப் புதல்வர் கிடைப்பதும்

மல்கு புத்திரர் சேதமும் மைந்தர்கள்
நல்ல வாண்பெண் பருவ வரவையும். (௮௯)

நீதி வித்தகர் சொற்றிடு நீள்பொருள்
ஆத லாற்கற் றமைந்த புலமையோர்
தீதி லாத்தள்ளி நன்கொளல் போலெனச்சொற்
கோதி லாத்தள்ளிக் கொள்வர் பொருளையே. (௯௦)

அடையு மோனையொ டைந்திலுக் கேழிலுக்
குடையர் பொன்வலி குன்ற வுதித்துளார்
மடந லைப்புதல் வர்பெறு மாண்பிலார்
தொடைதொ டுத்துச் சுருங்குங் குழலியே.

இ—ள்: பிதா மாதாவின் சாதகத்தில் ஐந்தேழுக்கதிபதிகளும் புத்திரகாரகன் வியாழனும் பெலவீனமான 6 8 12ல் பகை நீசமாய்ப்பாவருடன் கூடியும் அவர்களின் பார்வைபெற்றும் நிற்பின் சந்தானத்தைப் பெற்றுமகிழும் கதியில்லாதவர் தோன்றியழிந்துவிடும். ஆனமையால் கற்பாதான முகூர்த்தத்து மேற்கூறிய ஸ்தானாதிபதிகளும் வியாழனும் பெலம் பெறுதலிதன் சாந்தி. (௯௧)

அஞ்சிற் றிய குறவதற் காதிபன்
எஞ்சல் நீசத்தி லெய்த இவர்களை
வஞ்சக் கிர்சுபர் நோக்கற வந்துளார்
கொஞ்சு மின்சொற் குமாரன்சி றந்தவர்.

இ—ள்: சாதகப்படி ஐந்தாமிடத்தே இரவிசேய் சனி ராகு கேது வென்றபாவியர் இருக்க ஐந்தாம்வீட்டுக்குடையன் பகை நீசாஸ்தமயனமாக அவரையுமைந்தையும் சுபர்கள் பாராதொழியின் கொஞ்சுங்குழலியினின் சொற்சிறப்பிலாதவராவார். (௯௨)

வில்லின் மீனின் வியன்மதி சோதரப்
புல்லுமைந்தினிற் பாவர் பொலிவுற
நல்லர் நோக்க நணுகற நண்ணினேற்
கில்லை யில்லை யெழில்கெழு மைந்தரே.

இ—ள்: ஜாதகத்தில் தனு மீனத்தில் சந்திரன் இருக்க ஐந்தாம்தானத்தில் பாவர்பொருந்தச் சுபக்கிரகங்கள் சந்திரனையும் ஐந்தையும் பாராமலும் கூடாமலுமிருப்பின் சந்ததியில்லவாகும். (௯௩)



எய்ந்த மைந்தி லிசைந்த அதிபதி
மைந்து பாவர் நடுவினில் நண்ணிடிப
உந்து மாதிரன் டாறெட் டிறச்சுபர்
வந்து பார்ப்ப தேன்மல டாவனே.

இ—ள்: ஜாதகத்திலே ஐந்தாம்வீட்டுக்குடையன் பெண்களுக்கு ஏழாம்வீட்டுக்குடையவன் பகைநீசம்பெற்றுப் பாவரால் நெருக்கமுற்றுப் பன்னிரண்டாறெட்டு என்ற பாவஸ்தானத்திலிருப்ப சுபர் பார்ப்பினும் பாராதொழியினும் மகப்பேறில்லாதவராகும். (௯௪)

வெய்யர் கூடவைந் தாதிபன் மேவிட
ஐயந்திர விவனையு மைந்தையும்
கொய்ய தியவர் நோக்கிடத் தோன்றினேன்
உய்யச் செய்யும் மதலையி னின்மையே.

இ—ள்: ஜென்னஜாதகத்தில் புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் வீட்டுக்குடையன் சூரியன் செவ்வாய் சனி ராகு கேதுவென்ற பாவரோடு கூடவும் ஐந்தாமிடத்தையும் ஐந்தாம்வீட்டுக்குடையவனையும் மேற்கூறியபாவர்பார்க்கப்பிறந்த ஜாதகர்க்குப் புத்திர தோஷம் உள்ளன. (௯௫)

அட்ட மாதிப னைந்துற வைந்தானோன்
எட்டி லெய்த இவர்களை நல்லதாக்
திட்டி வெய்ப்பறத் தோன்றிய செம்மலுக்
கிட்ட மாய்மைந்தர் தோன்றி யிறப்பரே.

இ—ள்: ஜென்மஜாதகத்தில் உதயத்துக் கெட்டாம்வீட்டுக்குடையவன் ஐந்தாம்வீட்டிலும் ஐந்தாம்வீட்டுடையோன் எட்டிலும் மாறிநிற்க, இந்த இரண்டிடத்தையும் நிர்மலராகிய புதன் வியாழன் வெள்ளி பூரணசந்திரன் பாராதொழியின் அவருக்குப் புத்திரர்தோன்றிக் கர்ப்பத்திலும், பிறந்து இளமையிலும் இறந்துவிடும். இத்தோஷத்தைக் கர்ப்பாதான சுபமுகூர்த்தம் தீர்க்கும். (௯௬)

வேந்தன் றியர் நடுவினில் மேவிட
வாய்ந்த வைந்திற் கதிபன் வலிகெடச்
சார்ந்த நோக்சமும் சார்தலு மின்றெனின்
மாந்த ரீனும் மகவும் மரிக்குமே.

இ—ள்: ஜென்னஜாதகத்தில் புத்திரகாரகனாகிய வியாழன் பாவரோடும் அன்றி முன்னிராசி பின்னிராசிகளிற் பாவர்இருப்ப நடுவேனும் இருக்க, உதயத்துக்கு ஐந்தாமதிபதியாகும் கிரகம் பகை நீசாஸ்தமயனம்

ஆறெட்டுப் பன்னிரண்டாக்கானமுறுதல், பாவரோடுசேர்தல் ஆதியவற்றால் வலிமைகுன்றச் சுபாவசுபாய்ப் பெலமடைந்த குரு மதி வெள்ளி புதன் இவர்களும் உதயலக்கினதிபதியும் ஐந்தாம்வீட்டுக்குடையவனை ஐந்தாமிடத்தைப் பாராமலுங் கூடாமலுமிருப்பின் அங்ஙனமான பெற்றோர் பெறுகின்ற குழந்தைகளரிட்டமடையும். (௯௭)

பகைநீச மைந்தா திபன்சேர்வ னேனும் பாடெய்தி னும்பன்னிரண்டாறி லெட்டுத், தகைபாக வுடையோ ருடன்கூடி னாலும் தநுமைந்தா திபன்றன்னைகன்கி லுள்ளோர், வகையான விழிவைத் திடாரேனும் ஐந்தாய மகரத்தின் மீனத்தின் வன்சிவன் மேவ, மிகையா ராத குருத்துயர் பாராது வந்தோன் மிகமைந்த ருயிர்மாய மெலிவெய்து வாரே.

இ—ள்: ஐந்தாதிபன் பகைநீசம் சேர்வனேனும் பாடெய்தினும் பன்னிரண்டாறெட்டுத் தகையாவுடையோருடன் கூடினாலும்—சென்மஜாதகத்தில் புத்திரஸ்தானாதிபதியாகிய ஐந்தாம்இராசிக்கதிபதி எவரோ அவர் பகைநீசமஸ்தமயனமாய்ப் பன்னிரண்டுஆறுஎட்டாம் இராசிக்குரியரெவரோ அவர்களுடன் கூடியிருந்தாலும், தநுமைந்தாதிபன்றன்னை கன்கிலுள்ளோர் வகையானவிழிவைத்திடாரேனும்— ஐந்தாம் வீட்டுக்குரியவரை சுபர்கள்பாராது கூடாதும் விடினும், ஐந்தாயமகரத்தின் மீனத்தின் வன்சிவன்மேவ—ஜாதகர்கன்னி விருச்சிகமுதலிய லக்கினமாக ஐந்தாமிடம் மகரம் மீனமாகும் அவ்வாறே மகரம் மீனம் புத்திரஸ்தானமாய்வர அதில் வியாழனிருக்க, மிகையாராதகுருத் துயர் பாராது வந்தோன் மிகமைந்தருயிர்மாய மெலிவெய்துவாரே— நீசாஸ்தமயனம் பகைபாவர் சமாகமம் முதலிய குற்றமில்லாத சுபக்கிரகங்களால் அவ்வியாழன் பார்க்கப்படாமலுமிருந்தால் இங்ஙனமமைந்த ஜாதகசென்மிகளுக்குப் பாலர்களரிட்டமாவார்கள். (௯௮)

வருபுத்தி ரத்தானம் வரிவில்ல தாக மகிழ்பொன் புருத்தர்த்த மனையுற் றிருக்க, திருவுற்ற தற்கால வோரைதன்னை வெய்யோர் திகழ்நோக்கச் செகத்தே யுதித்தோன், இருபுத்திரர் ஒருபுத்திரர் புவிபெற்று வாழ்வ னிளமைந்தர் பலபேரை யினத் தகாதான், ஒருசித்திர உருவத்தைநிகருற்ற குயிலே உணர்வுற்ற பெரியாரா லுரைத்திட்ட விதியே.

இ—ள்: வருபுத்திரத்தானம் வரிவில்லதாக மகிழ்பொன்புருத்தர்த்த மனையுற்றிருக்க—ஜாதகர் சென்மலக்கினம் சிங்கமாக ஐந்தாமிடம் தனுவாகுமங்ஙனமாக தனுவில் வியாழனிருக்க, திருவுற்றதற்காலவோரைதனை வெய்யோர்நோக்க செகத்தேயுதித்தோன்—சென்மமாகிய சிங்கத்தைப் பாவக்கிரகங்கள்பார்க்க, இருபுத்திரரொருபுத்திரர் புவிபெற்று வாழ்வன் இளமைந்தர்பலபேரை யினத்தகாதான்—புத்திரன் என்னும் முற்றுச்சிறப்பினையுடைய ஆண்ஒன்றிரண்டேபெற்றெடுக்கும் இயல்பினர் அதிகம்பிள்ளைப்பேற்றை யடையமாட்டார். இஃதுஇங்ஙனமாக மிதுநியும்மகப்பேற்றிற்குரியதானலக்னாதிபதி சூரியன் சந்திரலக்கினாதிபதியெவரோ அவர் எழாமொன்பதாமதிபதி இவர்களின்சுபவிலை திருஷ்டிசம்பந்தங்களால் மிகுதியும் புத்திரப்பேற்றிற்குரியவிதி மலிந்திருக்குமாயின் ஆண் புத்திரர் மேற்கூறியபடியும் பெண்குழந்தைகளதிகமும் பிறக்கும். (௯௯)



ஐந்தான அதிலாதி பதிகளே சாலம்புவி தன்னைச்சுங் கன்னக்கூடியடைவே, வந்தான கேந்திர முறப்பொன் னவன்தான் வருபாவரைக்கூட வன்பாவ ரஞ்சில், சிந்தா குலப்பார்வை செய்யுமையத் தே செகமீ துதிக்க திறற்புருட னினும், சந்தான மதுவான தாண்மகவு குன்றித் தருகின்ற பெண்மகவு தன்னையெய்தி யிடுமே.

இ—ள்: ஜாதகத்தில் ஐந்தாம்வீட்டுக்குரிய கிரகம் சந்திரனையல்லது வெள்ளியைக்கூடியும் கேந்திரஸ்தானமாகிய ஒன்று நான் கேழு பத்தில் வியாழன் பாவரோடு செறிந்துற ஐந்தாம்வீட்டைப் பாவர்பார்க்க இங்ஙனமாகப் பிறந்தவர் பெறுகின்ற ஆண்குழந்தைகளரிட்டமாகும். பெண்பிள்ளைகள் சிறப்படையும். (௧௦௦)

சாமனுடனேயகிய மைந்திலதி பதியை தானனுகி கன்கேந்திரத்தினிடை வைக, சோமனுடனேபவ னிருஞ்சனி யிராகு துலங்கிவரு மைந்தில் விழிவைக்கவரு தோன்றல், நேமிபுடை சூழுலகி லேபெறு மகாரின் நீதியுறு மாண்மகவு நீடுயிர் வாழும், காமனடி பேணவரும் காமர்மட மாதே காதலுறு பெண்மகவு காசினி யிராதே.

இ—ள்: ஜாதகத்தில் புதன் வியாழன் இருவரும் ஐந்தாமிராசியதிபதியைக்கூடிக் கேந்திரஸ்தானமென்ற ஒன்று நாலு ஏழு பத்திலே இருக்க, சந்திரனுடன் சூரியன் சனி இராகு கூடி ஐந்தாமிடத்தைப் பார்க்க, பிறந்தவர்களுக்கு ஆண்குழந்தை தீர்க்கம், பெண்குழந்தையரிட்டம். (௧௦௧)

இயலக்கு புதன்வீடு சனிவீட தாக இதில்மைந்த னானவு மி வன்னடைந்த னேனும், சுயமேற நின்றாலும் சுபனஞ்செய் தாலும் தனிலஞ்சில் வலிகுன்றி தனில்நல்ல தங்கப், பயிலக்கி னதிபன் றனைத்தூய ராஜேர் பாராமல் விடவும் படிக்கே பிறக்கும், செயலொன்று புருடன் சிறுமைப்பெருமை திகழ்ந்தெந்த புத்திரர் சிறப்பெய்து வாரே.

இ—ள்: ஜாதகத்தில் ஐந்தாம்வீடு புதன்வீடு சனிவீடாக அதாவது மிதுனகன்னியாக மகரகும்பமாக இவ்விராசியில் சனி அல்லது குளிகன் இருக்கினுமன்றிப் பார்க்கினும் ஐந்தாமிடத்தில் ஆட்சிவலிமையடைந்திருந்த ஐந்தாமதிபதியை மற்றையசுபர்கள் பாராதொழியினும் பிறந்தவர்கள் பிள்ளைப்பேற்றையடையமாட்டார் வேறுமாரும் பெற்ற பிள்ளையைத் தனதாகப்பெற்று வளப்பர். (௧௦௨)

குளிர்பாலகத் தனமொண்பொன்னுறினும் குறையாமல்வளர் சந்திரன்வந்தடுகினும், ஒளிர்பாலகத்தானமதனிற்பொன்வெள்ளி யுற்றுரிமை யுறினும்சங்கீனந்துறினத், தெளிவார்கலைச்சந்திரன் கூடிநட்பாய்த்திகள்காணியாயுச்சமாய்ச்சேர்வனெனினும், தனி யார்கடற்பூவினிடமேபிறந்தோன்கவில்பெண்சிறார்தப் பைஙனிகல்கி விடுமே.

இ—ள்: ஜெனன ஜாதகத்தில் புத்திரஸ்தானமென்ற ஐந்தாமிடத்தே வியாழன் இருந்தாலும் ஐந்தாம் இடத்தே பூரணசந்திரன் இருந்தாலும் ஐந்தாம் இடத்தே வியாழனும்வெள்ளியுங்கூடிமித்திரமாயிருந்தாலும் ஐந்தாம் இடத்தே வெள்ளி சந்திரன் கூடியிருந்தாலும் அன்றி இத்திலொருவரிருக்க அதற்கேழில் மற்றவரிருப்பினும் ஆட்சியுச்சம்பெற்றாலும் இங்ஙனம் பொருந்தப் பிறந்தவர் பூமியில் பெண்பிள்ளைகளையே மிகவும் பெறுவர். (௧௦௩)

ஆடாதல்லேதடாதலைக்கான தானமாகப் புதன்வெள்ளியமரேசரரசன், வாடாமலதிலுற்றிருந்தாலும்நோக்கம்வைத்தாலும்இக் காதிவள்துன்றியெய்த, பிடாருமோசனுங்கூடிநிற்கபிறங்கைந்தினைப்பாவர்பாராமல்விடவும், வீடார்புவியிற்பிறந்தோனறக் கேர்வெகுபுத்திரர்பெற்றுமிகவாழ்குவானே.

ஜெனனஜாதகத்தில்,

இ—ள்: மேடம் விருச்சிகம் ஐந்தாம் வீடாக அதில் புதன் வெள்ளி வியாழன் இலக்கினாதிபதி இருப்பினும் பார்ப்பினும் ஐந்தாமதிபதிபெலமுடனிருக்க அவரோடு இலக்கினாதிபதி கூடியிருக்க, ஐந்தாம் இராசியைச் சுபாவபாவத்தானாதிபத்தியபாவர் கூடாமலும் பாராமலுமிருப்பினும் பூமியிலே பிறந்தவர்க்குப் பூர்வபுண்ணியவசத்தால் பிள்ளைப்பாக்கியம் சிறக்கவாழுவார். (௧௦௪)

மீனம் விருச்சிகம் விறற்சிங்க மேடம் வில்லும் சுதர்த்தானம் விளக்கார லெய்த, வானந் தொழுந்தேசிகன்பார்வை செய்ய வருபுத்திரத்தாதி பனையாதி பன்றான், ஈனர் தராமல் நல்லோர்



கூடி நானு மிகர்பார்வை பெற்றாலு மியல்கல் லிருக்கு, தானஞ் சொல் நகீவாக நற்பார்வையுறினும் தலத்தே பிறந்தோர் தமக்குண்டு மகவே.

இ—ள்: ஜெனனஜாதகத்தில் மீனம் விருச்சிகம் சிங்கம் மேடம் தனு ஐந்தாம்வீடாக அதில்செவ்வாய் இருக்க வியாழன்பார்ப்பினும் அன்றி புத்திரஸ்தானாதிபதியாகிய ஐந்தாம்வீட்டுடையான் பகைநீசாஸ்தமயனமடையாமல் சுபாவசுபரோடுகூடியிருப்பினும், நல்லவர்பார்வைபெற்றாலும் நல்லவர்கள் முன்னிராசி பின்னிராசியிலிருக்கத் தாம் நடுவணாய் இருந்தாலும், இங்ஙனம் பொருந்தும்ஜாதகருக்குச் சற்புத்திரர்பிறக்கும்.

பேசுஞ் சுதத்தான முடையோ னவ்விடமே பெலமாக வுற்றாலு மலர்தோனி லெய்த, தேசொன்ற வருமோரை யிருபாவ ரிருகண்செல் லாமல்நிற் லாமல் விடினுஞ் செழும்பொன், ஏகின்றி யைந்தேழி லெய்திவிட வெய்யோ ரிகற்பார்வை யோரை கொள்ளாமற் பிறந்தான், தேசக் கரும்பால வைப்பெற்று வாழ செஞ்சுகனி கூருமொழி கொஞ்சுமொரு கிளியே.

இ—ள்: ஜெனனஜாதகத்தில் புத்திரஸ்தானமாகிய ஐந்தாம் ராசிக்காட்சியானகிரகம் ஐந்திலாட்சிபெறினும், அன்றி ஐந்துக்குடையான் ஏழாம்இடம்நிற்ப உதயம்ஐந்தாகிய இடங்களைப் பாவர் பாராமலும் இராமலும்விடினும், புத்திரகாரகனாகியவியாழன் ஐந்திலல்லது ஏழிலிருக்க,பாவர் வியாழனையல்லது உதயமைந்தைப் பாராமலும் இராமலும் விடினும் இங்ஙனமாகப்பிறந்தவர் அன்புடைய பிள்ளைப்பேற்றை யாசித்திருப்பர். (௧௦௫)

வைக்குஞ் சுதத்தான அதிபன் பெலத்தே மருவிச் சுபர்க்கு நடுமெய்க்க சுபத்தார், உய்க்கும் செழும்பார்வை வைத்தாலும் விற்றேழ் ஒண்மீனம் மறிசிங்கம் ஓரஞ்ச தாக, தொக்குந்த மன்னையினர் புருடோரை யம்சம் சொன்னார ராசிதனி லெய்தித் துலங்க, புக்குந்த வுலகிற் பிறந்தோ னெனிக்கும் புகழ்துன்ற வளர்கின்ற பலமைந்தர் தானே.

இ—ள்: ஜாதகத்தில் ஐந்தாம் வீட்டுக்குடையவன் உச்சம் நட்பு மூலத்திரிகோணம் முதலிய பெலம்பெற்று சுபாவசுபக்கிரகங்களுக்கு நடுவிலிருப்ப அவரைச்சுபக்கிரகங்கள் பார்ப்பினும் தனு விருச்சிகம் மீனம் மேடம் சிங்கம் இவற்றிலொன்று ஐந்தாந்தானமாக அவ்வைந்தாம் ராசிக்குடையவன் மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் என்ற புருஷ ராசியில் முதற் பதினைந்து பாகைக்குள்ளான சூரியசெலவில் நவாம்சத்திலும் மேற்படி புருஷராசி அம்சம்பெற உலகத்தில் பிறந்தவர் கீர்த்தியோங்க மென்மேலும் உயர்ச்சிபொருந்தும் பலஆண்மக்களைப்பெறுவர்

றுரைபி லதிப னெந்துக் குரியவ னுறவுற் றாலும்
சேர்தாரத் தம்பிற் றானே நிலையுற நோக்கி னாலும்
ஏர்கெழு மிராசி நாத னுடனைந்துக் கிறையுற் றாலும்
பார்வைசெய் திடி னும் செல்வப் பாலரைப் பயப்பர் தாமே.

இ—ள்: ஜாதகத்தில் உதய லக்கினத்துக்குடையவன் ஐந்தாம் ராசியாதிபதியுடன் கூடினாலும், ஒருவரையொருவர் பார்த்தாலும், அல்லாமல் சந்திரன் நின்ற ராசியாதிபதியும் ஐந்தாம் வீட்டுக்குடையவனும் கூடினாலும் ஒருவரையொருவர் பார்த்தாலும் சிறந்தமக்கட்பேற்றையடையுங்கதியுடையராவர். (௧௦௮)

மருவுபுத் திரத்தா னத்து மன்னவ னோரை மன்னி
இருவரும் நோக்கத் தோன்று மேன்மைக்கு மகவுண் டாகும்
அரியநட் பாட்சி யுச்சம் ராசியங் கிசமா யஞ்சிற்
குரியர்நின் றாலும் நல்ல மைந்தரை யுயிர்ப்பர் மாதோ.

இ—ள்: ஜாதகத்தில் ஐந்தாம்வீட்டுக்குடையவன் உதயத்திலிருந்து இலக்கினத்துக்குடையவனை அல்லது இலக்கினத்துக்குரியவனால் பார்க்கப்பட்டால் அங்ஙனமான ஜாதகருக்கு யோகமானமக்கள் சுகமாகப் பிறக்கும். அன்றியும் ஐந்தாம்இராசியதிபதி நட்பாட்சியுச்சமாய்நின்று அம்சத்திலும் நட்பாட்சியுச்ச ராசியில் நின்றாலும் செல்வமான சிறப்புடையமக்கட்பேறுனர். (௧௦௯)

சத்துரு நீச மான விராசியங் கிசங்க டன்னில்
ஒத்திடுஞ் சுதத்தா னத்துக் குரியவ னுற்று மேவ
இத்தலந் தோன்றி னன்றா னினும்புத் திரர்கள் பொல்லாக்
குத்திர முடையார் மித்திர குணமிலார் கொடியர் தாமே.

இ—ள்: ஜாதகத்தில் புத்திரஸ்தானமாகிய ஐந்தாம்வீட்டுக்குடையவன் பகைநீசராசிகளில் நின்று பகைநீச நவாம்சம்பெறப்பொருந்தும் ஜாதகர் பெற்றுக்கொள்ளும் பிள்ளைகள் பொல்லாத குரூரமும் தயவின்மையும் கொடியவர்களுமாய் வந்துபிறக்குங் கதியையுடையவர். (௧௧௦)

கன்னியாய்க் கோலே றெய்தப் புத்திரர் தான கன்னை
ஒன்னிய தலைவர் பெண்பா லாற்றிடு ராசி யம்சம்
கொள்ளவே புவியிற் றோன் றுங் குரிசில்பெண் மிகுதி யினும்
வள்ளிதட் சமலப் பூவை மருட்டிய வதனத் தாளே.

இ—ள்: ஜாதகத்தில் புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடம் கர்க்கடகமாய்த் துலாமாய் இடபமாய்வர, வருமைந்தாதிபதி பெலங்குறைந்து சந்திரனோரையிலும் ஸ்திரிராசிகளான இடபம் கடகம் கன்னி விருச்சி



கம் மகரம் மீனம் ஆகிய இவ்விராசியொன்றில் முப்பதின்கூறு பாகைக்குள்ளாக நின்றாலும் நவாம்சத்தே ஸ்திரியம்சமாய் நின்றாலும் பிறந்தவர் பெண்குழந்தையதிகமுடையர், ஆணிராசி பெண்ணிராசி குரியசெலவு சந்திரசெலவு ஆணிராசியம்சம் பெண்ணிராசியம்சம் கலப்பாகஇருப்பாரேயானால் பெண் ஆண் இருவித மகவும் பிறக்கும். (௧௧௧)

ஆதவன் வியாழன் செவ்வாய் அஞ்சினுக் குடைய னாதும்
எதமில் புருட ராசி யங்கிசம் பெற்றா னென்றால்
காதினை யளந்த காமக் கடல்களை கடந்த கண்ணாய்
ஓதுமான் புதல்வர் தன்னை உகப்புட னுயிர்க் கிற்பாரே.

இ—ள்: ஜாதகத்தில்- சூரியன் வியாழன் செவ்வாய் புத்திரஸ்தானத்துக்குரியவரெவரோ அவர், இந்நால்வரும் மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இவ்விராசிகளில் முப்பதின்கூறு பாகைக்குள்ளும் நின்று, நவாம்சத்திலும் இப்புருஷராசியம்சம் பெற்றிருப்பாரெனில், ஆண்மக்களையே பெற்றெடுக்கும் புண்ணியமுடையாராகும். (௧௧௨)

வெய்யவ ரைந்தாந் தானம் விழித்திடா விடவு மைந்திற்
றுய்யனத் துச்ச மேவிச் சுபர்புரு டாமி சத்தே
எய்திலு மிவரை நோக்க இத்தல முதித்து ளோர்க்கு
மையணி விழியி னாளே மைந்தர்கள் மிகுதி யாமே.

இ—ள்: ஜனனஜாதகத்தில் ஐந்தாம் ராசியைப்பாவர் பாராமலும் ஐந்தாம் வீட்டுடையான் அதியுச்சம்பெற்றும் அவர் சுபாவசுபரில் ஒருவராய் நவாம்சத்திலும் புருஷவிராசியம்சம்பெற ஏனையபுருஷக்கிரகமாகிய சுபரால் பார்க்கப்பட்டுமிருக்கப் பிறந்தவர்களுக்கு ஆண்மக்கள் சிறப்பாகும். (௧௧௩)

எட்டிலீ ராறி லாறில் ஐந்தினுக் கிறைவன் மேவ
மட்டிலா வலிமைசார்ந்த நல்லவர் நோக்கம் வைத்தால்
முட்டிலா வாட்கை மைந்த ருண்டென மொழிவர் கண்டாய்
பட்டினுற் புனைந்த சோதிப் பையர வல்கு லாளே.

இ—ள்: ஜாதகத்தில் புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்துக்குரியவன் எட்டிப்பன்னிரண்டாறென்னுந் துர்த்தானங்களிலிருப்பினும்மிகுதியும் வலிமைப்பாட்டையுடைய உச்சாட்சி நட்பு மூலத்திரிகோணமேலம்சமடைந்தசுபரால் பார்வைபெற்றுராயின் தோஷநிவாரணமாய்ப் புத்திரப்பேறுண்டாகும். (௧௧௪)

ஆடல்சே ரிராகு மைந்தில் ஐந்தினுக் கதிப னோடு
மேடட நல்லர் பார்வை யெய்துமிசை கூடி டாதேல்

பாடகப் பாதப் பாவாய் பன்னகத் தெய்வம் முன்னாள்
நாடியே நவின்ற சாப மொழியினாற் புதல்வர் நாசம்.

இ—ள்: ஜென்மஜாதகத்தில் ராகு வலிமைபெற்று ஐந்தாம்ராசியில் இருந்தாலும் ஐந்தாமதிபதியோடு கூடினாலும் அவ்விராகுவைச் சுபர்கள் நோக்கமாகிய நிர்மலமில்லாதொழியின் முன்னைப்பிறப்பில் நாகதேவசாபத்தினால் புத்திரரரிஷ்டமாகும். பெண்களுக்கு ஏழாமிடத்திலிருந்தாலிதுபலன். இதற்கு நாகப்பிரதிஷ்டை சர்ப்பதானஞ்செய்து புத்திரப்பேற்றைப்பெறுவது காட்சியாகவுள்ளன. (௧௧௫)

ஓரையிற் றிரிகோ ணத்தி லுயர் சனி யேக மன்றன்
ராசியில் குளிகன் சேரத் துய்யவர் பார்வை யின்றேல்
கூர்கொடிய குருதோ ஷத்தாற் புத்திரர் நாசம் சேரும்
கார் முகில் வெருப்ப நீண்டு கறுத்திடுங் கண்ணினாளே.

இ—ள்: ஜென்மஜாதகத்தில் உதயலக்கினத்திலல்லது ஐந்தில் அல்லது ஒன்பதில் சனியனல்லது புத்திரன் குளிகன் அல்லது இருவருமிருக்க இவர்களைநிர்மலராக்கும் சுபர்களது பார்வையில்லாதொழியின் முன்னைப்பிறப்பில் உண்மையான்குருவுக்கு வஞ்சனைசெய்தபாவதோஷத்தால் சந்தானம்சலிவடையும். இதற்குச்சயாசாதனைமுதலிய சிவதருமம் செய்து மக்கட்பேற்றையடையலாம். (௧௧௬)

வீறுடைச் செவ்வா யைந்தின் மேவிட வதனின் றாரின்
ஆறுடை யானைக் கூட வைந்திடை யனுக நல்லோர்
பேறுடைப் பாவர் நிற்பில் பிறந்தவன் றனக்குப் பாவாய்
மாறுடைப் பகைவர் செய்த வஞ்சத்தால் மைந்த ரின்றே.

இ—ள்: ஜென்மஜாதகத்தில் செவ்வாய் ஐந்தாமிடம் இருப்பினும் ஐந்தாம்வீட்டதிபன் ஆறாம்வீட்டுக்குரியவனோடு சேர்ந்தாலும் அல்லது ஆறாம்ராசியதிபதி ஐந்தாம்ராசியில்நின்றாலும் சுபலசுபரோடு கூடாமலும் பார்வையடையாமலும் இருந்தபாவரால் பார்க்கப்பெற்றாலும் முன்னைப்பிறப்பில் சத்துருக்களை ஜெயம்பெறச்செய்த பாவக்கிரியையாலும் அன்றி அவர்களிட்டசாபத்தாலும புத்திரதோஷம். இதற்குச் சத்தஷஷ்டிவிரதம் சுக்கிரவாரவிரதம் கார்த்திகைவிரத மனுஷ்டிப்பாராய்ப் புத்திரப்பேற்றைப் பெறுவாராயினர். (௧௧௭)

ஐந்துக் குடையா னஞ்சின றுகச் சுபர்நோக்கச்
சிந்தித் திரையாய் நின்றிடத் தீயோர் பார்வைசெய
இந்தப் புவியிசை யேவரு மைந்தர்க் கில்லைப் புதல்வர்
முந்தச் சுபர் அங்காளிடுஞ் சாபகன் முட்டிடவே.



இ—ள்: ஜென்மஜாதகத்தில் ஐந்தாம்வீட்டுக்குரியவர் நீத்திலாட்சிப்பெற்றிருக்க, அவரைச் சுபக்கிரகங்கள் பார்க்காமல் பாவர்பார்க்கவிருக்கில் முன்னைப்பிறப்பில் சம்பாதித்த தெய்வசாபம் வந்து சேர்தலினால் புத்திரதோஷம். இஃது நட்சத்திரதெய்வவழிபாட்டால் தீருமென்பதாம். (௧௧௮)

நாட்டுமொரு நாலிற் கொடியோர்நின் றிடவைந்தாம்
வீட்டுக்குடை யான் மந்த னுடன்கூடி விளங்க
காட்டுமிவன் டாலிற் கொடியோர்வந் துகலந்தா
லீட்டுங் கொடுஞ்சாபம் மாதா விடனால் மகவில்லை.

இ—ள்: ஜென்மஜாதகப்படி நாலாமிடத்தே சூரியன் செவ்வாய் இராகு கேது இருக்க, ஐந்தாம் இராசிக்குடையவன் சனியோடுகூடியிருக்க, அல்லது சனியால் பார்வைபெற இவர்களைப் பன்னிரெண்டாறெட்டுக்குரியவர்கள் கூடினாலும் பார்வைசெய்தாலும் முன்னைப்பிறப்பில் தாயால்வந்த சாபத்தால் புத்திரதோஷமென்பதாம். (௧௧௯)

ஒன்பானிடந் தீயோர்புக வைந்தாமிட முடையோன்
வன்பாகிய சனியோடுற வாய்க்குந்திரி கோணத்
தின்பாகிய குளிகன்புகுந் திருக்கப்பிறந் தார்க்கு
முன்பாம்பிதிர் சாபம்சுத ரின்றாம்பனி மொழியே.

இ—ள்: ஜென்மஜாதகத்தில் ஒன்பதாம்இராசியில் சுபாலபாவர் இருக்க, ஐந்தாம்இராசியதிபதி சனியோடுகூட, ஒன்றைந்தொன்பதான திரிகோணஇராசியில் தீயவராகிய குளிகன்இருக்கப் பிறந்த ஜாதகர்க்கு முன்னைப்பிறப்பில் பிதிர்த்தெய்வமிட்ட சாபத்தாலே புத்திரதோஷம். இதற்காகப் பிதிர்கடமைகளை நிறைவேற்றித்தீர்க. (௧௨௦)

சென்மலக் னத்தினுந் திங்களா ரிராசியானும்
நன்மையே யைந்தாம்ராசி நாதனல் லதுநா தன்றன்
உன்னிதப் பார்வை யானு முண்டாகுந் தாரம் மக்கள்
தன்னனுஞ் சம்பத் தோங்குந் தாமணி தனிலே தானே

இ—ள்: ஜென்மஜாதகத்தில் உதயலக்கினத்துக்குடையவனும், சந்திரன்நின்ற இராசிக்குடையவனும், ஏழாம்வீட்டுக்குடையவனையைந்தாம் வீட்டுக்குடையவனைப்பார்ப்பினும், அன்றியேழைந்தாம் வீட்டுக்குடையவர் உதயாதிபதியைச் சந்திரலக்கினாதிபதியைப் பார்ப்பினும் அவ்வித கிரகநிலையிற்பிறந்தவருக்குத்தாரம் புத்திரச்சிறப்பும் அவையால்சகல சம்பத்துகளுமுள்ளவையாயுமிருப்பர்.

"இவ்வி தமில்லாவிட்டாலெழிற்றாம்பிக்கீனில்லை—
இக்கணமையா திருப்பின்சற்றும்சற்புத்திரர் இன்றாம்"

மேலேகூறிய விதிகளுக்கியையத் தத்தம் ஜாதகக்கிரகசங்கியை சரியொத்து வருமாயின் அவ்வப்பலன் தவறாது சித்திக்கும். அன்றியும், புத்திரதோஷத்தை உண்டாக்கக் காரணமாயிருந்த கிரகங்களுக்குத் திசாபுத்தியந்தரங்கள்வந்து நடக்குங்காலம் கர்ப்பாரிஷ்டம்புத்திராரிஷ்டம் உளதாகுமெனவறிக. தோஷத்தை நிவாரணமாக்கும்விதிக்கியைய இருந்த சுபாவசுபருக்குத் திசைபுத்தியந்தரம் நடப்பதானகாலம் மக்கட்பேறு மக்கட்சிறப்பு அநுகூலமாகுமென்ப. இவையாவற்றிற்கும் கர்ப்பசம்பவ கர்ப்பாதான சுபகாலமே அதாவது பதிசதியின் யோக்கியமே சாக்ஷி.

62391

## முகூர்த்தசுபாசுபவிளக்கம்.

ஒரு சிறிது தோஷங்களானுலுங் கலவாதிருக்கும் காலிலக்கினத்தை நிர்ணயிப்பது பிரமனுக்குஞ் சாத்தியமன்று. ஆகலால், ஸ்வல்பதோஷங்களை ஸாகுணமென்னுஞ் சோதிஷசாஸ்திரத்தால் அளவைப்படுத்தி, எந்தகாலிலக்கினத்திற் தோஷங்களைக்காட்டிலும் குணங்களதிகமாயிருக்குமோ குணாதிகாள்கோலக்கினத்தைச் சுபகாரியவிஷயமாய்க் கிரகிக்கவேண்டியதேயன்றி அதிகதோஷங்களையுடைய காள்கோலக்கினத்தைக் கிரகிக்கக்கூடாது. அதிகதோஷமென்பது இருபத்தொருமகாதோஷம் இன்னின்னவென்பதை எவரும் இலகுவிலறியுமாறு குறிப்பாக விளக்கியும் இச்ஞானுமுப்பிற்கின்றியமையாதது இதிதிதென்பதையும் விரிவாகவுணர்த்துதலேயாம்.

1. பஞ்சாங்கசுத்திஹீனதோஷம்.
2. பாபசட்வர்க்கதோஷம்.
3. குணவாம்சதோஷம்.
4. அஷ்டமகுசதோஷம்.
5. பிருகுஷட்கமதோஷம்.
6. கர்த்தரியோகதோஷம்.
7. லக்னஷ்டமதோஷம்.
8. அஷ்டமசந்திரதோஷம்.
9. ஷட்டசந்திரதோஷம்.
10. சந்திரசங்கிரமதோஷம்.
11. சங்கிராந்தியகல்தோஷம்.
12. வாரஜனிதநுர்முகூர்த்த தோஷம்.
13. கார்ஜுரிஸ்தஸமாங்கிரிப தோஷம்.
14. கிரகணதோஷம்.
15. உத்பாததோஷம்.
16. குருரயுக்திஷ்ணியதோஷம்.
17. அசுபவித்ததோஷம்.
18. விஷயுதலக்கினதோஷம்
19. லக்கினஸ்ததோஷம்.
20. கண்டாந்ததோஷம்.
21. வியதிபாதவைதிருதிதோஷம்.

## 1-பஞ்சாங்கசுத்திஹீனதோஷமாவது.

அசுபகரமாய் குணதிதிவாரநக்ஷத்திர யோககரணநித்தியயோகாசமிருந்து யோகங்கள்கூடினால் அது பஞ்சாங்கசுத்திஹீனதோஷமென்றும்,



## 2. பாபஷட்வர்க்கதோஷம்.

மேடம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனு மகர கும்ப மீனம் இப்பன்னிரண்டும் இராசிகள் மேட விருச்சிகத்துக்குச் செவ்வாயும் இடபதுலாத்துக்கு வெள்ளியும் மிதுன கன்னிக்குப் புதனும் கர்க்கடகத்துக்கு மதியும் சிங்கத்துக்குச் சூரியனும் தனுமீனத்திற்கு வியாழனும் மகரகும்பத்துக்குச் சனியும் இம்முறையாக இராசியதிபதிகளென்றும் இவர்களே ஷட்வர்க்காதிபதிகளெனப்படையவேண்டுதலும்.

### ஷட்வர்க்கவிபாகக்கிரமமாவது.

1. கொள்ளும் லக்கினம் எதுவோ அது முப்பதுபாகைகளுடையன.

2. லக்கினராசியைப் பதினைந்து பதினைந்துபாகையாக்கிப் புருஷராசியாகிய மேடம் மிதுனம் சிங்கம் துலாம் தனு கும்பம் இவ்வாறிராசிகளிலும் முதற் பதினைந்துபாகைக்குள் சூரியஹோரையென்றும் பிற் பதினைந்துபாகைக்குள் சந்திரஹோரையென்றும் ஸ்திரிராசியாகிய இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இவ்வாறிராசியிலும் முதற் பதினைந்துபாகை சந்திரன் கூறென்றும் பிற்பதினைந்துபாகை சூரியஹோரையல்லது கூறென்றும் கணிப்பது ஹோரை.

3. லக்கினதிரிபாகம் திரேக்காணம் - இது மேலே நாற்பத்தெட்டாம் செய்யுளில் விளக்கப்பட்டிருக்கிறது அறிக.

4. லக்கினநவாம்சம்-கிரகித்தலக்கினத்துக்குரிய நட்சத்திரமிரண்டேகாலொன்பது பாதம். இவற்றில் முகூர்த்தநாழிகைவிநாடியில் எந்த நட்சத்திரபாதத்திலிலக்கினபாகமிருக்குமோ அந்நட்சத்திரபாதமென்னநவாம்சம்பெற்றதோ அதுவே லக்கினநவாம்சமென்றறியவேண்டியது.

5. லக்கினதுவாதசாம்சம்-லக்கினபாகை முப்பதைப் பன்னிருகூறாக்க, கூறொன்று இரண்டரைப்பாகையாகும். அநுசரித்த முகூர்த்த நாழிகை விநாடியில் எத்தனையாங்கூறாகுமென்பதையறிந்து லக்கினம் முதலெண்ணியுதித்த இராசியே லக்கினதுவாதசாம்சம்.

6. லக்னதிரிம்சாம்சம்-இது லக்னபாகைமுப்பதையும் ஐந்துவிபாகமாய்ச் செவ்வாய்ஐந்து சனியைந்து வியாழனெட்டு புதனேழு வெள்ளி ஐந்து என்ற இம்முறைப்படி ஓசை அதாவது புருஷராசி ஆறுக்குரியதாயும் உக்குமம் அதாவது ஏனைய பெண்ணிராசிஆறுக்கும் வெள்ளிஐந்து புதனேழு வியாழனெட்டு சனியைந்து செவ்வாய்ஐந்து என்ற இம்முறைப்படி அநுசரித்த முகூர்த்தநாழிகை விநாடியிலப்பிலக்கினபாகம் செவ்வாய்முதலைந்துபேரிலும் அல்லது வெள்ளிமுதலைந்துபேரிலும் எவ

ருடையபாகமெனக்காண்பதே திரிம்சாம்சம். ஆனால் குசுவழி ஆளப்படும். முகூர்த்தத்துக்குரிய லக்கினம் மேடமிதுனசிங்கதுலாதனுகும்பமானால் அவ்வவ்விராசிப்பிரமாண நாழிகை விநாடியை விநாடியாக்கி மூன்றுவிபாகப்படுத்தி முதற்பாகம் குறித்தலக்கினத்தில் செல்லும்வரை செவ்வாய் சனி திரிம்சாம்சம் என்றும் ஆனமையால் பத்துப்பாகைவரை புருஷராசியை முகூர்த்தத்துக்குவிலக்கியும் ஏனையபெண்ணிராசி இடபகடககன்னி விருச்சிகமகரமீன ராசிகள் ஆளப்படும் முகூர்த்தலக்னமாய்வரில் மேற்படி முவ்விபாகத்தில் மூன்றாம்பாகம் அதாவது 20 பாகைக்குமேல் 30 பாகைவரையும் சனிசெவ்வாயின் திரிம்சாம்சமென்று இலகுவிலறிந்து நீக்குக.

ஆதலாலாராய்ந்து நிர்ணயித்த லக்கின ஷட்வர்க்கமெல்குணமென்பது இவையேயாம். லக்னசுபகரமாய் லக்னாதிசுபகரமாய் ஹோரையாதிசுபகரமாய் திரேக்காணம் திரேக்காணாதிபதி சுபகரமாய் நவாம்சம் நவாம்சாதிபதி சுபகரமாய் துவாதசாம்சம் துவாதசாம்சாதிபதி சுபகரமாய் திரிம்சாம்சம் திரிம்சாம்சாதிபதி சுபகரமாய் கொள்ளுவதே லக்னஷட்வர்க்கசுத்தமெனவறிக. இவைகள் தத்தம்ஞானமாயிருப்பின் சுபக்கிரக ஷட்வர்க்கசுபப்பிரதத்தைக் கண்டடையலாமேயன்றிப் பரஞானத்தைக்கொண்டறிதல் எக்காலமும் எவராலும் எவருக்கும் முடியாது.

### 3. குணவாம்சதோஷமாவது:

முகூர்த்தநாழிகைவிநாடியில் நிகழும் நவாம்சலக்கின சுபாசுபமென்ப. அதாவது மேடம் கர்க்கடகம் சிங்கம் விருச்சிகம் மகரம் கும்பம் மீனம் இவை நவாம்சலக்னமாகவரின் சுபகரமல்லவென்றும் ஏனைய இடபம் மிதுனம் கன்னி துலாம் தனு முற்பாகம் இவைகள் மிக்கசுபகரமாமென்றுமறிக.

### 4. அஷ்டமகுசதோஷமாவது:

சுபகாரியலக்கினத்துக்குச் செவ்வாய் எட்டிலிருந்தால் குசாஷ்டமதோஷமாகும். இதனால் காரியமிருத்யுப்பிரதமாமென்று விலக்கவேண்டியது.

### 5. பிருகுஷட்கமதோஷம்.

சுபகருமலக்கினத்துக்கு ஆறில் வெள்ளியிருந்தால் பிருகுஷட்கமதோஷமென்பர். செவ்வாயட்டமதோஷத்திலும் அதிகதோஷமென்பதையுணர்ந்து விலக்கவேண்டியது.

### 6. கர்த்தரியோகதோஷம்.

இரண்டு பாபக்கிரகங்களில் ஒருவர் அநுசரித்தலக்கினத்துக்குப் பன்னிரண்டில் வக்கிரிக்காமலிருந்தும் மற்றொரு பாவர் முகூர்த்தலக்கி



னத்திற்கு 2ல் வக்கிரித்திருக்குமானால் இவ்விரண்டினிடையேயுள்ள லக்கினத்திற்குக் கர்த்தரிதோஷமென்று பெயர். இந்தத்தோஷம் மரணப்பிரதமென்று விலக்கவேண்டுமென்பர். லக்கினத்துக்கன்றிச் சந்திரன்நின்ற ராசிக்கும் இவ்விதம்நிற்பின் கர்த்தரிதோஷமென்றுசிலராபிப்பிராயம். பன்னிரண்டிலிருந்த இருபாவரும் வக்கிரித்திருப்பினும் வக்கிரவர்ஜிதமாயிருந்தாலும் லக்கினத்துக்குப் பன்னிரண்டில்நின்றவர் வக்கிரித்தும் இரண்டில்நின்றவர் வக்கிரிப்பின்றி இருப்பினும் இங்கேசொல்லப்பட்ட கர்த்தரிதோஷமில்லையாகும்.

### 7. லக்னாஷ்டமதோஷம்.

ஜன்மலக்கினத்திற்கும் ஜனனகாலசந்திராசிக்குமெட்டாவதுலக்கினம் மிருத்யுப்ரதமாவதனால் அந்தலக்கினம் குணமிகுதியிருப்பினும் நீக்கவேண்டியது. அஷ்டமலக்கினாதிசபருகம லக்கினத்திற் பொருந்தினால் தம்பதிகளுக்கு மிருத்யுப்ரதமென்றும் சந்திராசிக்கு எட்டாவது இராசியைப்பொருந்தியிருந்தால் தம்பதிகளுக்கு நித்தியதாரித்திரமென்றும், ஜன்மலக்கினத்துக்குப் பன்னிரண்டாம் இராசியையும் சந்திராசிக்குப் பன்னிரண்டாம் இராசியையும் சுபகர்ம இலக்கினமாகக் கொள்ளக்கூடாதென்றும் ஜென்மலக்கினம் ஜென்மராசியை முகூர்த்தலக்கினமாகக்கொள்ளின் அசுபகரமென்றும் அறியவேண்டியது.

### 8. அஷ்டமசந்திரதோஷம். 9. ஷஷ்டசந்திரதோஷம். 10. சந்திரசக்கிரமதோஷம்.

சந்திரன் சுபகர்மலக்கினத்திற்கு ஆறிலெட்டில் பன்னிரண்டில் நின்றால் கிப்பாஷ்டாரிக சந்திரகாமகதோஷம். அத்தோஷம் தம்பதிகளுக்கு மிருத்துகரமாம். அன்றி, சந்திரன்பாபரோடுகூடியிருப்பதும்பாவர் முன்பின்னிருக்க நடுநிற்றலும் லக்ராஹகாமகதோஷம். அது தம்பதிகளுக்குக் காரியநாசத்தையுண்டாக்குவதாம். ஆனால் சந்திரன் சுபர் பாவரோவரோடுஞ் சேராமலும் பார்வைபெறாமலும் நடுவே பொருந்தாமலும் உச்சாட்சேட்பிராசிகளில் சுபவீராசியில் நிற்கக்காணும் முகூர்த்தம் மகாவுத்தமமென்றறியவேண்டும்.

### 11. சங்கிராந்தியகஸ்தோஷம்.

சூரியன் நின்றராசியிலிருந்து அடுத்தராசிக்குப் பெயருவதாகிய மாதாந்தம் மாதமுதல் சங்கிராந்தியென்றுசொல்லப்படும். சுபகர்மங்களின் விஷயமாய்ச் சங்கிராந்திக்கு முன்னும் பின்னுமாய் 16 நாழிகை நீக்கவேண்டும். சூரியன் மேடகடகதுலாமகராசிகளில் பிரவேசிக்கையில் சங்கிராந்தி நிகழும்நாழிகை விநாடியிலிருந்து முன்னுக்கு முப்பதுநாழிகையும் சங்கிராந்திக்குப்பின் முப்பதுநாழிகையிலும் சுபகருமம்நீக்கவேண்

டியதாம். மாதாந்தம் மூன்றுநாளும் வருடாந்தமொருபத்தைந்தும் மாதமுடிவில் மூன்றுநாட்களும் வருஷமுடிவில் பதினைந்துநாட்களும் சுபகருமமுகூர்த்தசுத்தியல்லவென்பர்.

## வாரஜனித துர்முகூர்த்ததோஷம்.

ஒருபகல் முப்பதுநாழிகையைப் பதினைந்துகூறாக்கக்கூறொன்றுக்கு மினிற் 48 (2நாழிகை)யாகும். முதல்ருத்திரமுகூர்த்தமென்றும் 2வது உரகமுகூர்த்தமென்றும் 3வது மித்திரமென்றும் 4வது பித்திரியமென்றும் 5வது வசுவென்றும் 6வது வாரமென்றும் 7வது விசுவதேவமென்றும் 8வது விதியென்றும் 9வது பிரம்மாவென்றும் 10வது இந்திரமுகூர்த்தமென்றும் 11வது இந்திரசுதர்சனமென்றும் 12வது தைத்தியமென்றும் 13வது வருணமென்றும் 14வது அரியமமென்றும் 15வது பகமுகூர்த்தமென்றும் பெயராகும். சொல்லிய இப்பதினைந்து முகூர்த்தகாலங்களுள் பக இந்திர சுதாசன உரக ரௌத்திர தைத்திய பித்ரு முகூர்த்தகாலங்கள் 6ம் உக்கிர தேவதப்பமாவதால் சுபகரும விஷயமாய்க் கொள்ளக்கூடாதனவென்றும் ஏனையமுகூர்த்தங்கள் கூம் சுபப்பிரதங்களென்றும் கொள்ளத்தகுந்ததாகும்.

இரவு முப்பதுநாழிகைளைப் பதினைந்து கூறாக்கக் கூறொன்று 2 நாழிகை (48 மினிற்)றும். முதலில் ஈசுவரமுகூர்த்தம். 2-வது அஜசரணம். 3-வது அஹிர்புத்ரம். 4-வது பூஷா. 5.வது நாசத்தியம். 6-வது அந்தகம். 7-வது அக்கினி 8-வது தாதா. 9-வது சசி. 10-வது ஆதித்தியம். 11-வது சிவம். 12-வது அச்சுதம் 13-வது அர்க்கம். 14-வது த்வஷ்டா. 15-வது சமீகரண முகூர்த்தமென்று பெயர்பெறும். இப்பதினைந்து முகூர்த்தகாலங்களுள் ருத்திர அஜாங்கிரி யம அக்கினி என்ற நான்குமுகூர்த்தமும் சுபகர்மவிஷயமாய் உக்கிரங்களானபடியால் இக்காலங்களை முகூர்த்தகாலமாய்க்கொள்ளாது தள்ளவேண்டும். ஏனைய பதினொருமுகூர்த்தங்களும் கொள்ளற்பாலனவாகும். நீக்கும்முகூர்த்தம் ஒன்று மூன்று ஆறு ஏழு எனவறிக.

## 13. கார்ஜூரசக்கிரலக்ஷணமாவது.

கான்ஜூரையிலைபோலவொருபடமிட்டுப் பதின்மூன் றுகுறுக்குக்கிட்டால் இருபத்தேழுரேகாத்மகமாகும். அதற்குகார்ஜூரசக்கிரமென்று பெயர். அவ்விலைபடிக்காம்பின் அசுவினிநட்சத்திரத்தைதயும் விஷ்கம்பாமயோகத்தையுமெழுதி வலமாக இறங்கிக்கொண்டுவருகையில் சூரியசந்திரர்கள் ஒரு நக்ஷத்திரத்தின் முதலாம் நாலாம்பாதத்திலும் இரண்டாம் மூன்றாம் பாதத்திலும் இருந்தால் பரஸ்பரவீக்ஷணமுண்டாகுமாதலால்முகூர்த்தகாலசுபமல்லவாகும்.



## 14. கிரகணோத்பாததோஷம், 15. உற்பாததோஷமாவன.

உத்பாதங்களென்றால் பூகம்பனம் தூமகேது முதலானவை நிகழினும் சூரியசந்திரகிரகணங்கள் உண்டாகுமானால் அதன்பின் ஏழுநாட்கள்வரையில் நிஷேகம் விவாகம் முதலிய சுபகருமங்கள் செய்யக்கூடாது. எந்தநக்ஷத்திரத்தில் இங்கேசொல்லிய உத்பாதகிரகணங்களுண்டாகுமோ அந்தநக்ஷத்திரம் மிருத்யுப்ரதமாவதால் ஆறுமாசங்கள்வரையில் அந்தநக்ஷத்திரத்தில் பிறந்தவர்களும் அந்நக்ஷத்திரமும் சுபகர்மங்களுக்கு அயோக்கியமென்று தள்ளவேண்டியது. கிரஸ்தாஸ்தமய அர்த்தக்கிரகணமான பக்ஷத்தில் முற்பட்டு மூன்றுநாளும் பின்னே மூன்றுநாளும் சுபகர்மவிலக்கு. சாயங்காலத்தே கிரஸ்தாஸ்தமயகிரகணமானால் சர்வக்கிரஸ்த கிரகணத்தில் முன்னேழு பின்னேழுநாட்கள் சுபகர்மவிலக்கு. மேலும் கிரகணவிந்தநக்ஷத்திரம் பூரணகிரகணத்தில் ஆறுமாசமும் அர்த்தக்கிரகணத்தில் மூன்றுமாசமும் இந்தவகையாகச் சுபகர்மங்கள்விஷயமாய் யோக்கியமல்லவென்று காணவேண்டியது.

பற்றிப்பிடித்திடில்மூன் றுநாள்முன்புபற்றியுதித்தெழுங்கால்
உற்றபின்மூன் றுபற்றிடில்முன்மூன் றுபின்மூன் றுநாள்
முற்றவிழுங்கிடில்முன்னேழுபின்னேழெனமொழிந்தார்
பெற்றகிரகணமிரண்டுக்குந்தியநாட்பெய்வளையே.

## 16. குருபுத்திஷ்ணீயதோஷம்.

தியவர்தானின் றவிற்கொடிதென்பர்சிலைநுதலாய்
தியவர்நாளுஞ்சிறப்பிலவென்பரிருமருங்கும்
தியவர்தானின்றநாட்களுந்தீதென்பர்கல்வினைக்கு
தியவர்தாமிருத்தற்குடையோரையுந்தீதென்பரே.

போகநாள் காமியநாள் பிரியநாள்.

நற்கோள்விடுநாள்நில்லநாள்நடந்துபோய்ப்பற்றுமந்நாள்
விற்போல்நுதலாய்விளங்கியபோகநாள்மேதினிமேல்
பொற்போர்பொலியுநாள்போகங்குறிக்குநாளென்றுரைக்கலோர்
சொற்போலநன்குரைத்தார்சோமவாசிட்டசூரியரே.

இ—ள்: சுபாவசுபக்கிரகம் நின்று விலகிய நட்சத்திரம் போகிநாளென்று பெயர்பெறும். நிற்கும் நாள் நட்சத்திரம் பிரியநாளென்று பெயர்பெறும். மேல் நிற்கப்போகும்நட்சத்திரம் காமியநாளென்று பெயர்பெறும். இந்நட்சத்திரங்கள் மிகு சுபகுணநட்சத்திரம் சுபகருமசித்தி. பாபக்கிரகம் இருக்கும்நட்சத்திரம் ஜ்வலிதஸம்ஜ்ஞிகமென்றும் பாபக்கிரகமிருக்குநட்சத்திரத்துக்குப் பின்னேயுள்ள நட்சத்திரம் பஸ்மஸம்ஜ்ஞிகமென்றும் பாபக்கிரகமிருந்த நட்சத்திரத்துக்கு முன்னேயுள்ள நட்சத்திரம் தூமிதஸம்ஜ்ஞிகமென்றும் இந்த 3 நட்சத்திரங்களும் மிருத்தியுகுணமாவதால் விவாகாதிகர்ப்பாதானங்களுக்கு விலக்கவேண்டியதும் பாவக்கிரகமிருக்கும் ராசியும் ஜ்வலிதஸம்ஜ்ஞிகமேயாதலால் அவ்விராசிகளும் முகூர்த்தத்துக்கு விலக்கப்படும்.

## அசுபவிந்ததோஷமாவன:

| நட்சத்திரம். | வேதை. | நட்சத்திரம். | வேதை. |
|---|---|---|---|
| அச்சுவினி | பூரம் | சோதி | சதயம் |
| பரணி | அனுடம் | விசாகம் | கார்த்திகை |
| கார்த்திகை | விசாகம் | அனுடம் | பரணி |
| ரோகிணி | அபிசித் | கேட்டை | பூசம் |
| மிருகசீரிடம் | உத்தராடம் | மூலம் | புனர்பூசம் |
| திருவாதிரை | பூராடம் | பூராடம் | திருவாதிரை |
| புனர்பூசம் | மூலம் | உத்தராடம் | மிருகசீரிடம் |
| பூசம் | கேட்டை | திருவோணம் | மகம் |
| ஆயிலியம் | அவிட்டம் | அவிட்டம் | ஆயிலியம் |
| மகம் | திருவோணம் | சதயம் | சோதி |
| பூரம் | அச்சுவினி | பூரட்டாதி | சித்திரை |
| உத்தரம் | ரேவதி | உத்தரட்டாதி | அத்தம் |
| அத்தம் | உத்தரட்டாதி | ரேவதி | உத்தரம் |
| சித்திரை | பூரட்டாதி | | |

அச்சுவினிமுதற் குறித்தநட்சத்திரங்களிற் பாபக்கிரகங்களிருந்தால் வேதையென்று குறித்த நட்சத்திரங்கிற்குக் கிரகப்பெயருடன் வேதையாம். வேதைகள் சுபகருமங்களுக்கு விலக்கப்படவேண்டுமென்பது விதியாம்.

## 18. லக்கினஸ்ததோஷமாவது.

விவாகநிஷேக லக்கினத்தால் நவாம்சலக்கினத்தையும் நிர்ணயித்தபிறகு லக்கினம் அந்நவாம்சலக்கினாதிபதியாலாவது சுபக்கிரகங்களாலாவது அல்லது நவாம்சாதிபதியின்மித்திரர்கள் சுபர்பாபராயினுமவர்களாலாவது பார்க்கப்பெற்றாலும் அல்லது கூடியிருந்தாலும் தம்பதிகளுக்கு மிகுந்த சுபகரமாம். அல்லது எந்தலக்கினத்தில் எந்தஅம்சம் நவாம்சமாகுமோ நவாம்சலக்கினத்திற்கு ஏழாம் லக்கினத்தில் அந்தநவாம்சம் அஸ்தாம்சமாகும். அந்தஅஸ்தாம்சாதிபதி ஏழாதிபதியாவாவது அல்லது வேறு சுபக்கிரகங்களாலாவது நவாம்சலக்கினத்திற்கு ஏழாவதான இராசியைப் பார்க்கப்படவேண்டும். அதுவுந்தம்பதிகளுக்குச்சுபகரமாம். இந்த இரண்டு விதிக்குமமையாதிருந்தால் அந்தமுகூர்த்தம் நல்லதல்லவெனத்தெரிந்து கொள்ளவேண்டியது.

## 21. வியதீபாதவைதிருதிதோஷமாவன.

விஷ்கம்பம் வியதீபாதம் சூலம் பரிகம் கண்டம் அதிகண்டம் வச்சிரம் வியாகாதம் வைதிருதி இந்த ஒன்பது யோகங்களும் நிஷேகம் விவாகாதி சுபகருமங்களுக்குமரணப்பிரதமாம். இவ்வொன்பது யோகங்களோடுகூடி கார்ச்சூரசக்கரத்தின் ரேகையிற் சந்திப்பதால் அச்சுவினி திருவாதிரை மிருகசீரிடம் மகம் மூலம் அனுடம் பூசம் புனர்பூசம் சித்திரை இவ்வொன்பது நட்சத்திரங்களும் அதாவது விஷ்கம்பத்திற்கு அச்சுவினி, வியதீபாதத்திற்குத் திருவாதிரை, சூலத்திற்கு மிருகசீரிடம், பரிகத்திற்கு மகம், கண்டத்திற்கு மூலம், அதிகண்டத்திற்கு அனுடம், வச்சிரத்திற்கு பூசம், வியாகாதத்திற்குப் புனர்பூசம், வைதிருதிக்குச் சித்திரை இந்த யோகங்களோடு இங்கே சொல்லப்பட்ட நட்சத்திரங்கள் பஞ்சாங்கத்தில் கூடி நடக்கும் நாட்கள் நிந்திதமென்று தள்ளவேண்டும்.



இங்கேபஞ்சாங்க சுத்தியினதோஷம் முதல் வியதீபாத வைதிருதிதோஷம் ஈறாய்க்கூறப்பட்டுள்ள 21 தோஷங்களில் பஞ்சாங்கசுத்தியினதோஷமல்லாதமற்றை இருபதுதோஷ சம்பவங்களைச் சுருக்கமாய் வசனநடையில் மேற்கோளுரையை யெழுதி வெளியிட்டமையால் முதலாவதாகிய பஞ்சாங்கசுத்தியினதோஷமிஃதின்னதென்பதையும் அதற்கவாதமும் சொல்லுவான் தொடங்கினம்.

கூறுங்குணகுணமோர்ந்தற்றாலிற்குனதிகமாய்
ஏறும்வலியுமதிற்றிதையத்தனினிதவன்று
நாறுந்துழாய்முடிநாயகன்றன்கன்வணங்கினாளும்
பேறுன்றிடவிதிக்கும்விதியேபெருநன்மையதே.

ஒன்றாந்திதிகாணமிரண்டாம்வாரமெட்டொருநான்
கென்றாந்தினத்துக்கெழுபதுமுப்பதுமுகூர்த்தத்துக்கு
நின்றாருநித்தியயோகத்துமூன்றுநிரைத்துநயங்
குன்றாதபத்தாயிரமென்றுகூறுங்குணகுணமே.

இ—ள்: திதி ஒருபங்கு குணம். காணம் இரண்டுபங்கு குணம் கிழமை எட்டுப்பங்கு குணம். நட்சத்திரம் நான்குபங்கு குணம். தினயோகம் மூன்றுபங்கு குணம். முகூர்த்தம் நூறுபங்கு குணம் ஆகத் திதி வாரம் யோகம் காணம் நட்சத்திரம் தினயோகம் சுபலக்கினம் இவையெல்லாம் விதித்தனவாய்ப் பொருந்தியும், கிரகங்கள் சுபகரமாய்க்கவுங் கர்மாதிகாரிகளுக்கும் சுகுணமான நட்சத்திரம் லக்கினம் வந்து பொருந்தப்பெறின் அந்தமுகூர்த்தம் பதினாயிரம்பங்கு குணமுடையதென்றும் அதிற்செய்யப்படுஞ் சுபகருமங்களும் கர்த்தாவும் தேவாம்சமான சாத்விககுணம் பொருந்துமென்றுங் கூறுவது. மேலேகூறப்பட்டுள்ள யாவும் விதித்தனவல்லவாய் வந்துபொருந்தினால் பதினாயிரம்பங்கு குற்றமுடையதாய்ச் செய்யப்பட்டுள்ள கருமமுங் கர்மாதிகாரிகளும் இராக்ஷதாம்சமாய்த் தாமதகுணகலப்பிற்பொருந்தும் என அறிந்துகொள்க.

## வர்ஷசுபாசுபம்.

1. வருஷம் 60. பிரபவ விபவ சுக்கில பிரமோதூத பிரசோற்பத்தி ஆங்கீரச ஸ்ரீமுக பவ யுவ தாதுவ ஈசுர வெகுதானிய பிரமாதி

விக்கிரம விஷு சித்திரபானு சுபானு தாரண பார்த்திப விய சர்வசித்து சர்வதாரி விரோதி விகிர்தி கர நந்தன விஜய ஜய மன்மத துன்முகி ஹேவிளம்பி விளம்பி விகாரி சார்வரி பிலவ சுபகிருது சோபகிருது குரோதி விசுவாவசு பராபவ பிலவங்க கீலக சௌமிய சாதாரண விரோதிகிருது பரிதாபி பிரமாதீச ஆனந்த ராக்ஷத நள பிங்கள காலயுக்தி சித்தார்த்தி ரௌத்திரி துன்மதி துந்துபி ருதிரோத்காரி ரத்தாக்ஷி குரோதன அக்ஷய.

இந்த அறுபதுவருஷங்களுள் கர்ப்போற்பத்தி பிரசவித்தல் இறந்ததற்குப் பிரபவ பவ விஷு அக்ஷய இந்நான்கு வருஷமும் சுபமல்லவென்பதையறிக.

2. மாதம் 12. சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாசி பங்குனி.

இந்தப் பன்னிரண்டுமாதங்களுள் ஆடி புரட்டாசி மார்கழி மாசி என்ற இந்நான்குமாதங்களும்; தாம் தாம் ஜென்மமானமாதமும், பிறந்த மாதத்திற்கு எட்டாம்மாதமும், இரண்டமாவாசை உட்படச் சூரியசங்கிரமமுமுண்டானமாதமுஞ் சங்கற்பமாதம், அந்தமாதமும், இரண்டுசங்கிராந்திபான்காலங்களில் அமாவாசைகூடிவரின் அசங்கற்பதிமாதம், அந்தமாதமும் சூரியனது இரண்டுசங்கிராந்திக்கும் நடுவாக இரண்டுசந்திரோதயம் உண்டாகில், அதிகமாதம் அந்தமாதமுமாகச் சங்கற்பமாதம் அசங்கற்பமாதம் அதிகமாதமாகவருகின்ற மாதங்களுஞ்சுபகாரியவிலக்காம். என்னெனில் கற்பாதானந்துக்கும் இம்மாதங்களை யுகிந்து விலக்குவது உத்தமம்.

தலையா மூவாளியன் மேட்படச் சங்கிர மித்தலன்றேல்
தலையா மூவாளினிற் சங்கிர மித்தல் பிறைபிரண்டாங்
குறையா துதயம் பெறுதிங்க ளாகுன் வியகனிதக்
கலைவாண் மாதிக மாதமென் றேநிக் கணித்தனரே.

விற்குனிர் மீனின் மிகவொளி கூர்ந்து வியாழன்நிற்ப
நற்கதி சோறுக் தவகெதி காடி நயந்துநிற்பச்
சற்பமங் கற்ப மதிக மெனுந்திங்கட் சாலநன்றும்
பொற்புறு மேக நல்வினைப் புண்டரீகப் புனர்முலையே.

இ—ள்: தனு மீனம் கர்க்கடகத்தில் வியாழன் இருக்க, உத்தராயணகாலமாகிய தைமாதம் முதல் ஆனிமாதம் முடியும்வரை சங்கற்பமாதம் அசங்கற்பதிமாதம் அதிகமாதம் என்னுந் தோஷம் இல்லையாகும். தனு மீனகடகத்தில் வியாழன் இருந்தாலும் தக்ஷிணாயனமான ஆடிப்பிறப்பு



முதல் மார்கழிமுடியும்வரை சங்கற்ப அசங்கற்ப அதிகமாதம் என்ற தோஷம் பரிகரிக்கப்படாதென உணர்க.

வாரம் 7. ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி இவற்றுள் ஞாயிறு செவ்வாய் சனியென்ற மூன்று கிழமைகளும் பாவர் வாரம் என்றும் இம்மூன்றுள் ஞாயிற்றுக்கிழமை சுபவாரமென்றும் செவ்வாய் சனிக்கிழமையைச் சுபகருமத்துக்கு உபயோகிக்கக்கூடாதென்றும் வற்புறுத்தும். திங்கள் புதன் வியாழன் வெள்ளி இந்நான்கு கிழமையும் சுபவாரமென்றும், சுபகருமம் நிஷேகம் விவாகாதி முதலியன யாவுக்கும் உத்தமம். வாரமானது சித்தயோகம் அமிர்தயோகம் சித்தாமிர்தயோகம் அமிர்தசித்தயோகத்தோடுகூடி வந்தபொழுதே சுபர்வாரம் சுபவாரமெனப் பெயர்பெறும். மரணயோகம் நாசயோகங்களோடுவரின் சுபவாரமென்ற குணமும்நீங்கி மிகவும் பாவவாரமாகும். சித்தயோகம் அமிர்தயோகம் சித்தாமிர்தயோகம் அமிர்தசித்தயோகம் மரணயோகங்களைப் பஞ்சாங்கத்திலறியக்கூடும்.

## நாசயோகமாவது.

என்றுநீ டிருளைச் சிறு மிருதுவுச் காறு வெள்ளிச்
சொன்றிய நவமி மேனைதக் கிரண்டொளி யவற்குப் பன்னொன்று
பொன்றனக் கெட்டு நீலன் றூமனுக் கேழு பொல்லாக்
கன்றிடு நாசயோக மென்றறி கதிர்வேற் கண்ணாய்.

ஞாயிற்றுக்கிழமையில் சதுர்த்தசியும், திங்கட்கிழமையில் ஷஷ்டியும், செவ்வாய்க்கிழமை சனிக்கிழமையில் ஸப்தமியும், புதன்கிழமையில் துதியையும், வியாழக்கிழமையில் அஷ்டமியும் வெள்ளிக்கிழமையில் நவமியும்வரின்நாசயோகம் சொல்லப்பட்டதிதியோடு கூடிவரின் அவ்வாரமும் சுபகாரியவிஷயமாய் நீக்கப்படவேண்டும்.

## திதியமிர்தயோகம்.

1. ஞாயிற்றுக்கிழமையில் பிரதமையும் ஷஷ்டியும்
2. திங்கட்கிழமையில் துதியையும் ஸப்தமியும்
3. செவ்வாய்க்கிழமையில் சதுர்த்தசியும்
4. புதன்கிழமையில் அஷ்டமியும் திருதியை திரயோதசியும்
5. வியாழக்கிழமையில் நவமியும்
6. வெள்ளிக்கிழமையில் ஏகாதசியும்
7. சனிக்கிழமையில் சதுர்த்தசியும் வருவன.

செப்பிய குருவுக் கொன்பான் பன்னொன்று சன்னான்கு சேய்க்கு
வெப்புறு கதிருக் கொன்றே டாறுபன் னொன்று வெள்ளிக்

கொப்புடை மதிக்கு மின்னே யெழிரண் டுயர்ந்த புந்திக்
கப்பதின் மூன்று மெட்டு நல்லதா மமுத யோகம்.

## ஸாத்விகாதிமுக்குணவிளக்கம்.

ஈஸ்வரானுக்கிரகத்தால் அசுத்தமாயையின் காரியமாகிய சுத்மல ரூபமூலப்பிரக்ருதி ஸ்ருஷ்டிக்குமுதற்காரணமாகும். அதனாலேயே அந்தக்கரணங்களும் ஐம்பொறிகளும் பிராணாதிவாயுக்களும் கன்மேந்திரியங்களும் புவனங்களும் அனுபவங்களாகிய சுகதுக்கங்களும் தோன்றியன. பிரகிருதி (பிரசவிக்குந்தன்மை) பிரசவிக்குந்தன்மையான அப்பிரகிருதி ஜடத்துவம் தோன்றுதல் மாறுதல் விரிதல் ஒடுக்குதல் ஆத்மப்பொருளைத் தன் மலசொரூபமாக்குதல் தன்தொழில் பிறர்க்கிலையென்பதியா திருத்தலாகிய அம்சங்களோடுகூடி ஸாத்விகம் ராஜதம் தாமதம் என்றமுக்குணமயமாக ஆன்மாவைப்பந்திக்கின்றது.

### 1. ஸாத்விகமானது.

சுகசங்கத்தாலும் ஞானசங்கத்தாலும் பந்தனஞ்செய்கின்றது எனவே மலத்தில் அல்பத்வம் துக்கத்தில் அல்பத்வம் ஆத்மாவுக்கு மேலானபோதனைசெய்தல் கல்விகேள்விகளில் விருப்பத்தையூட்டல் தேகமானஸ சுகங்களில் விரும்புதல் நிவிர்த்தி பிரவிர்த்திக்கிரமங்களையறிந்தொழுகுதல் முதலிய உத்தமகுணம் பதினைந்து உடையனவாகஇருக்கும்

ஸாத்விகுணம் சுகத்திற்கூட்டிவைக்கிறதாகையால் நிர்மலமானது, அது சுகசங்கத்தினாலே ஞானத்தைப்பிறப்பிக்குங் குணமாகும்.

பாவுலாத் திகவே னோக்கே பளிங்கொளி நிறமு முள்ளான்
விரவுநல் லறிவு புத்தி விதான ஞான முள்ளான்
குரவர்மேற் பத்தி யுள்ளான் கொடுமைசேர் துன்ப மில்லான்
வரவுறு மின்ப மெல்லாம் வருமவன் றனக்குத் தானே.

என்று ஸாத்விகுணத்தில் பிறந்தவர் பலனெனச் சொல்லப்படுகிறது. ஸாத்விகுணவேளையில் தேகம்விட்டால் நிர்மலமானலோகத்தையடையுமென்று பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது.

2. ராசதகுணமானது கர்மசங்கத்தால் பந்திக்கின்றது. எனவே இந்திரியங்களை விஷயங்களிலேவுதலும் அவற்றைப் பொறுத்தற்கு தொழில்களோடு கூட்டுவித்தலும் இவற்றால் ஆத்மாவின் ஸாக்ஷித்துவத்தையும் ஸாந்தியையும் குன்றச்செய்தல் ராசதகுணம். ராசாத்துமாவான ஆசையிலே கூட்டிவைக்கும் அதனாலே கட்டுப்பட்டுத் தேகிகர்மசங்க



த்தவான் ராசதகுணத்தர் காமியகர்மபலராய் அந்தப்பலத்தினாலே போகங்களையனுபவித்தல் முதலிய எட்டுக்குணங்களுடையனவாய் இருக்கும்.

அன்பிரா சதமே னோக்கே செனித்தவ னறிவு முள்ளான்
இன்பத்தி லாசை பற்று மியலுநல் லுரைகற் பானவ்
பொன்புவி கலைகளிந்தப் புவிக்குப கார முள்ளான்
துன்பமற் றரசாய் நீதி செலுத்துவான் சுகமுள் ளானே.

என்று இராசதகுணத்திற் பிறந்தவர் பலனெனச்சொல்லப்படுகிறது.

3. தாமதகுணமாவது அஞ்ஞான சொரூபமாகப்பிறந்து மோகத்தைச்செய்கின்றதாகவும் ப்ரமாதம் சோம்பல் நித்திரையென்ற இவைகளால் பந்திக்கின்றது. எனவே அறிவின்மை மயக்கச்செய்தல் மறதி சோம்பல் தூக்கங்களாலதாவது விழிப்புற்சாகமில்லாமையால் ஆத்மாவின் ஸாக்ஷித்துவத்தையும் சாந்தியையுங் கெடுத்து ஆத்மாவுக்கு சம்சயத்தையும் விபரீதத்தையும் உண்டுபண்ணி மயக்கும்.

தமோகுணம் ஞானத்தைமூடி எதார்த்தவியானத் தெரியாமற்பண்ணி ஒருவஸ்துவைப் பின்னொருவஸ்துவாய்த் தெரிகிறதான அஞ்ஞானத்தையுண்டுபண்ணி பிரமாதத்தையுண்டாக்கும். பிரமாதம்-அவதானமில்லாமை. நினைவுகன்கழுவுதல் தவறுதல்.

கைவல்லியநவநீதம் 22ம்செய்யுள்முதலாக
தத்துவவிளக்கப்படலம்.

அதுதானெப் படியென்றக் காலகா தி யாஞ்சீவ மெல்லாம்
பொதுவான சுழுத்திபோலப் பொருந்துமவ் வியத்தந் தன்னில்
இதுகால தத்துவப்பே ரீசனுட் பார்வை யாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்தமாமே.

இ—ள்: அக்கற்பனுஸிருஷ்டி எப்படியுண்டாயிற்றெனின் அநாதியாயுள்ள சித்துருபமான சிவகோடிகள் யாவுஞ் சகலபேர்க்கும் சாதாரண அநுபவமான சுழுமுனாடிபோலச் சூனியமாயிருக்கும் மூலப்ரகிருதியாகிய மாயையின்கண்ணேயடையும், இம் மாயையானது காலதத்துவமென்னும்காமமுடைய ஈசுரனுடைய திருஷ்டியினாலே மாமூலமாய் முன்னிருந்தகாரணத்தன்மையை ஒழிந்து மூன்றுகுணங்களாக வெளிப்படும்,

உத்தம வெளுப்பு நீல முபயமாஞ் சிவப்பு மாகும்
சுத்தசத் துவந்த மத்தோ டசுத்தத் துவப்பேர் சொல்லும்

சத்துவ மழுக்கி ருட்டாய்ச் சாற்றுமுக் குணமு மூன்றாய்
ஒத்துள வெனினுந் தம்மு ளொருகுண மதிக மாமே.

இ—ள்: முதலாவதான வெண்ணிறமும், இரண்டாவதான செம்மைநிறமும், மூன்றாவதான கருமைநிறமும் ஆகாநின்ற தாய்தான சத்துவகுணமும், ராசதகுணமும், தாமதகுணமுமெனப் பெயர்பெறும். சத்துவமான சுத்தமும் அழுக்குமிருட்டுமெனச் சொல்லப்பட்ட இம் மூன்றுகுணங்களும் மூன்றாகி ஒத்திருப்பவைகளாயினும் அவைகளுளி ரண்டடங்கி ஒருகுணம் விசேடித்துநிற்கும்.

ஸாத்விகம் ராசத தாமதகுணங்களையவமதித்துநிற்கின்றது. அவ் விதமே தாமதம் ஸாத்விக ராசதகுணங்களை அவமதித்துநிற்கின்றது. முக்குணங்கள் ஒன்றோடொன்று இணங்காமலிருத்தல் அவற்றின்இயல்பு.

ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறாச் சொல்வார்
மருவுமவ் வியத்தந் தானே மகதத்துவ மாகு மென்றும்
அருண்மக தத்து வந்தா னகங்கார மாகு மென்றும்
அருவகங் கார மூன்றாய்க் காட்டிய குணமா மென்றும்.

இ—ள்: மேற்கூறியன ஒருமார்க்கமாம். இதையே மற்றொரு மார்க்கமாகச் சொல்லுவார்கள். அஃது எங்ஙனமெனின், பொருந்திய அவ்வியத்தமே மகதத்துவமாமெனவும் சொல்லிய மகதத்துவமே அகங் காரதத்துவமாமெனவும் கருவாகிய அகங்காரமே மூன்றாகத்தெரிவித்த குணங்களாம் எனவும் சொல்லப்படும்.

இ—ம்: சுத்தசைதன்னியமானதன்னை எதிரிட்டறிய உதய மானஅறிவுக்கு முன்புஉண்டானமறதியே அவ்வியத்தமான பிரகிருதி யெனவும் அவ்வறிவு பகிர்முக உன்முகமான இடமே மகதத்துவமென வும், அஃது தன்னிடத்துப்பிரதிபலனமான ஆரோபத்தைநான்என்பதே அகங்காரத்துவமெனவும், அதனிர்ச்சலமேசத்துவமெனவும் அதன்சலன மேராசதமெனவும் அதன்மக்கினமே தாமதமெனவும் உண்டானஉகபற்சி ருஷ்டியைத்தன தனுபவத்திற்காண்க.

இக்கு ணங்களில் விண்போன் றிருக்குஞ்சிற் சாயை தோன்றும்
முக்குணங் களினுச் சாய்தா முதற்குணம் மாயை யாகும்
அக்குணம் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
எக்குணங் களும்பற் றுதோ னிமித்தகா ரணமா மீசன்.



ரசனுக் கிதுசு ழுத்தி யிறுவேகா ரணச ரீரம்
கோசமா னந்த மாகுங் குணமிரா சதம வித்தைத்
தேசது மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவ கோடி
நாமமா முயிர்க்குப் போது காமமும் பிராஞ்ஞ னாமே.

இ—ள்: இம்மூன்றுகுணங்களுள் ஆகாயம்போல நிர்மலமாயிருக் கின்ற சிற்சாயை பிரதிபலிக்கும். இம்மூன்றுள் சுத்தமாகிய சாத்விகம் (மாயையாம்) அந்தச்சாத்விகத்திற் பிரதிபலித்த பிரமப்பிரதிபலனமே அந்தரியாமியாம். மாயாசம்பந்தமான எக்குணங்களும் பற்றாதவனே பஞ்சபூதபவுதிகமுதலிய சிருஷ்டிக்கு நிமித்தகாரணமாகிய ஈசனும்.

இ—ள்: இவ்வீஸ்வரனுக்கு இச்சாத்விகமாயையே சுழுத்தியவத் தையாம். இஃதே காரணசரீரமாம். இதுவே ஆனந்தமயகோசமாம். ராச தகுணம் அவித்தையாம். விளக்கமில்லாத அவித்தைகள்தோறும் பிரதிப லித்த ஞானப்பிரதிபலனமே சீவராசிகளாம். யாவையும் இறந்த சுழுத்தி யை யபிமானிக்கும் சீவர்களுக்கு அவ்வவசரத்தில் பெயர் பிராஞ்ஞன்.

ஏமமா யாவி கோத வீசனு மருளி னாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும்.

இ—ள்: மோகமாகிய மாயையை விளையாட்டாகவுடைய ஈசுவர னுடைய கிருபையினால் பொலிவுமிகுந்த சீவர்களனைவர்க்கும் அநுபோக சாதனம் உண்டாகும்பொருட்டுத் தமோகுணமானது பயங்கரமான ஆவர ணமெனவும், நானாவிதமாகும் விக்ஷேபமெனவும் இரண்டுசக்திகளாய்ப் பிரிந்து தோன்றும்.

இ—ம்: தமோகுணப்பிரதிபலமான சிற்சாயையின் அறிவின் மை ஆவரணம் அறிவு விக்ஷேபமும் என இரண்டுசத்திகளாயின என்பதாம்.

தோற்றமாஞ் சத்தி தன்னிற் சொல்லிய விண்ணும் விண்ணில்
காற்றதாங் காற்றிற் றீயாங் கனலினீர் நீரின் மண்ணும்
போற்றுமில் வைந்தும் பொய்ய பூதங்க ளென்று பேராம்
சாற்றுமற் றிவற்றிற் போக சாதன தனுவுண் டாகும்.

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில் வெண் குணத்தி லைந்து கூறுண்ர் கருவியாகும்
ஓதிய பின்னை யைந்து முளம்புந்தி யிரண்டா ஞான
சாதன மாயில் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே.

இராசத குணத்தில் வெறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவா யுக்க ளென்றும் பெருந்தொழிற் கன்ம மென்றும்
பாரவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுராசுரர் நரர்வி லங்காய்த் தோன்றிய வுயிர்கட் கெல்லாம்.

சூக்கும சகமிம் மட்டுஞ் சொல்லினோ மிப்பாற் றூலம்
ஆக்குமா றோபஞ் சாணு மடைவினின் மொழியக் கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத் தூல தனுவும்போ கமுமுண் டாகக்
காக்குமிவ் வீசன் பஞ்சீ கரணங்கள் செய்தான் முனே.

இ—ள்: சூக்குமஇயல்பாயிருக்கு இச்சீவர்களுக்குத் தூலதேகமும் அநுபோகமும் உண்டாகும்படி சீவர்களைப்பாதுகாக்கும் இவ்வீசுவரன் பஞ்சீகரித்தலைச்செய்தனன். கர்ப்பாசயக்குழியில் சுக்கிலச்சோணிதமீது கலந்துறும்பொழுது காலத்துவகுணங்கள் விபாகப்பட்டு அவற்றின் காரியங்களாகிய ஸகல ஸ்தூலசரீரங்களின் பிறப்புண்டாகின்றது.

கருதும்மூன் குணமூன்று மூன்றிலொன்று க்கித்தெழுந் தான் மற்றிரண்டுங் கரந்து நிற்கும், தருமமிகு சத்துவமே யான போத சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம்; மருவுமிரா சதமாகி லுலக தேக வாதனையாம் சாத்திரவா தனையு மாகும்; அருமகனே தாமதமே லான போதி லசுரசம் பத்துண்டா மறிந் து கொள்ளே.

இ—ள்: நினைக்கின்றமனதிற்கு இரிகுணமாகிய மூன்றுகுணமாம். அம்மூன்றுகுணங்களுள் ஒன்றுமிகுந்தெழும்போது மற்றையஇரண்டுகுணங்களும் மறைந்திருக்கும். சற்கருமத்துக்கேதுவாகிய உயர்ந்த சத்துவகுணமானது மிகுந்தபோது சன்மார்க்கமாகிய தெய்வசம்பத்தோடு தோன்றும். பொருந்திய ராசதகுணமிகுமாயின் லோகவாதனை தேகவாதனை சாஸ்திரவாதனையுமுண்டாகும். தாமதகுணமிகுந்தபோதில் அசுரச் செல்வமுண்டாம்.

அ—கை: சித்தம் சமானசத்துவஞ் சேடிக்கின் பனஞ்சித்தில் அசைவின்றி நிற்கும் எனல்.—

எனவே விபாகப்பட்டகுணங்கள் தந்தம் பிரபல்யத்தாலடங்காமல் தாம் பற்றிப்பிடித்த ஆத்மாவைத் தமக்கு அடிமைப்படுத்தியேவைக்கும். பரமேஸ்வரன்குணவிபாகதந்திரத்தால் ஜீவாத்மாக்களைக் குணபந்தனத்தினின்றும் விடுவிக்கின்றார். இது,

1. ஸாத்விகத்திற் ஸாத்விகம், ஸாத்விகத்தில் இராசதம், ஸாத்விகத்தில் தாமதம்.



2. இராசதத்திற் சாத்விகம், இராசதத்திராசதம், இராசதத்துத் தாமதம்.

3. தாமதத்துச் சாத்விகம், தாமத இராசதம், தாமதத்துத் தாமதம்.

இங்ஙனமொன்பதுவகையாகப் பிரித்து ஜீவாத்மகோத்திரம் குணனத்தில் அவரவர் கர்மத்துக்கேற்படி அவ்வொன்றிலமைத்துச் சீவியகாலங்களில் மெல்லமெல்ல உயர்ஞானநிலையேற்றிக் குணாதீதஞானத்தைப் பெறச்செய்வர்.

கைவல்லியம் 129ம்பக்கச்சந்தேகந்தெளிதற்படலம் 76ம்செய்யுள்.

மதுவி றைச்சிக ளுண்ணன்ற சுருதி மணந்துபா ரெனல் பாராய், மீதுண விச்சையும்புத்திரோற் பத்தியால் விரும்பென்ற விதிபாராய், இதையும் விட்டொழி யதிசுபிட் டிகவன்னிக் கிகழ்ச் சியற்ற தும்பாராய், அதைத் தெரிந்துகன் பங்களா சைகளொழித் தானந்த மடைவாயே.

இ—ள்: மதுமாமிசங்கள் புசியென்றவேதமானது பின்பு ஆக்கிராணஞ் செய்தாற்போதுமென்பதைப் பார். மனைவியோடு புணர்ச்சியின்பமும், மகப்பேறுண்டாம்பொருட்டு இச்சிப்பாயென்ற விதியைப்பார். இவ்விதியையும் விட்டொழிந்தசந்நியாசிக்கும் நைஷ்டிகப்பிரமசாரிக்கும் நிந்தையில்லாததும்பார். அக்கருத்தைபுணர்ந்துகன்மங்களின்மேல்வைத்த இச்சைகள்நீக்கி ஞானத்தினுற்பிரமானந்தத்தை அடைவாய் எ—று.

ப—ம்: இல்லறதருமம்செய்யாமையால் அறவிக்கும் பிரமசாரிக்கும் இழிவின்மையாமென்பர் அதிசயிட்டிக வன்னிக்கிகழ்ச்சியற்றதும்பாராய் எனக்கூறினர்.

மீதுணவிச்சையும் புத்திரோத்பத்தியால் விரும்பென்றவிதிபாராய் என்றமையால் சேரிட்டவர்களைப்புணரில் இம்மையிற் பாவமும் பழியும் மறுமைக்கண் நரகதுக்கமுமுண்டாகுமாதலால் ஒருத்தியைமணஞ்செய்து அவளைப் புணர்தலேயுசிதம் பின்னை விதியாதலின்றேற் கூடில் துர்ப்புத்திரனுண்டாய் அதனால் இம்மையிற் பாவமும் பழியும் மறுமையில் நரகதுக்கமும் வருமாதலால் சற்புத்திரனுண்டாய் உனக்கும் உன்

குலத்துக்கும் இம்மையிற்புகழும் மறுமையிற் சுவர்க்கமுமுண்டாதற்பொருட்டு விதித்ததினத்தில் அவனைப்புணர்தி என்றசொல்லும் விதியையும் நீ பார்ப்பாய் என்பதாயிற்று.

இ—ள்: வேதம் கன்மகாண்டத்தில் கூறும் வருணாச்சிரமகன் மக்கள் அதனாலுண்டாகும் போகவின்பங்கள் அனைத்தும் பின்புதுன்பங்களாக வருத்துதலைக்கண்டு அவற்றைவிடுத்துப் பரமசுகத்தைத் தேடவேண்டுமென்பது அதனபிப்பிராயம் ஆதலால் தங்களுக்குத் தங்கள் வழித்தோன்றல்களுக்கும் இடுக்கணைய்தற் கேதுவானதும் இன்பமெய்தற்கேதுவானதும் விதியாத விதித்த காலயோக்கியமாமென்பதை உணர்தலே போதமாமென்பது தெளிவாகின்றது.

## முக்குண வேளை.

| மணி மினிற். | ஞாயிறு புத சனி பகல். | திங்கள் வியாழ பகல். | வெள்ளி செவ்வா பகல். | மணி மினிற். | ஞாயிறு புத சனி இரவு. | திங்கள் வியாழ இரவு. | செவ்வா வெள்ளி இரவு. |
|---|---|---|---|---|---|---|---|
| 7-30 | தாமதம் | சாத்விக | இராசத | 7-30 | இராசத | தாமதம் | சாத்விக |
| 9-30 | சாத்விக | இராசத | தாமதம் | 9-00 | தாமதம் | சாத்விக | இராசத |
| 10-30 | இராசத | தாமதம் | சாத்விக | 10-30 | சாத்விக | இராசத | தாமதம் |
| 12-00 | தாமதம் | சாத்விக | இராசத | 12-00 | இராசத | தாமதம் | சாத்விக |
| 1-30 | சாத்விக | இராசத | தாமதம் | 1-30 | தாமதம் | சாத்விக | இராசத |
| 3-00 | இராசத | தாமதம் | சாத்விக | 3-00 | சாத்விக | இராசத | தாமதம் |
| 4-30 | தாமதம் | சாத்விக | இராசத | 4-30 | இராசத | தாமதம் | சாத்விக |
| 6-00 | சாத்விக | இராசத | தாமதம் | 6-00 | தாமதம் | சாத்விக | இராசத |

இங்கேகுறித்த மணி மினிற் சூரியோதயம் ஆறுமணியென்பதுபற்றியேயாம். அவ்வத்தேசங்களுக்கு அவ்வத்திசுகியிற் சூரியோதயம் 6மணிக்குமேலுதிக்குமாயின் அதிகமானமினிற்றை குறித்த மணி மினிற்றுடன் கூட்டிய மணி மினிற்றும் சூரியோதயம் 6 மணிக்குள்ளாகுமாயின் ஆறுமணிவரைக்குமுள்ள மினிற்றை குறித்த மணி மினிற்றில் கழித்துக் கண்ட மணி மினிற்வரை அவ்வவ்வாரங்களில் கிரமமாய் அவ்வக்குணகாலமாகும்.



## நவகுண வேளை.

பகல்.

| வாரம். | ம. மி. 6-30 | ம. மி. 7-00 | ம. மி. 7-30 | ம. மி. 8-00 | ம. மி. 8-30 | ம. மி. 9-00 | ம. மி. 9-30 | ம. மி. 10-00 | ம. மி. 10-30 | ம. மி. 11-00 | ம. மி. 11-30 | ம. மி. 12-00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு செவ்வாய் சனி. | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்து சாத்து | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் |
| திங்கள் வியாழன் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் |
| செவ்வாய் வெள்ளி | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | காத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் |

| | ம. மி. 12-30 | ம. மி. 1-00 | ம. மி. 1-30 | ம. மி. 2-00 | ம. மி. 2-30 | ம. மி. 3-00 | ம. மி. 3-30 | ம. மி. 4-00 | ம. மி. 4-30 | ம. மி. 5-00 | ம. மி. 5-30 | ம. மி. 6-00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு செவ்வாய் சனி | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் |
| திங்கள் வியாழன் | இராசத சாத்து | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் |
| செவ்வாய் வெள்ளி | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் |

## நவகுணவேலை.
### இரவு.

| வாரம். | ம. மி. 6-30 | ம. மி. 7-00 | ம. மி. 7.30 | ம. மி. 8-00 | ம. மி. 8-30 | ம. மி. 9-00 | ம. மி. 9-30 | ம. மி. 10-00 | ம. மி. 10-30 | ம. மி. 11-00 | ம. மி. 11-30 | ம. மி. 12-00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு செவ்வாய் சனி | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக இராசத | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் |
| திங்கள் வியாழன் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத இராசத | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் |
| செவ்வாய் வெள்ளி | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் |
| | ம. மி. 12-30 | ம. மி. 1-00 | ம. மி. 1-30 | ம. மி. 2-00 | ம. மி. 2-30 | ம. மி. 3-00 | ம. மி. 3-30 | ம. மி. 4-00 | ம. மி. 4-30 | ம. மி. 5-00 | ம. மி. 5-30 | ம. மி. 6-30 |
| ஞாயிறு செவ்வாய் சனி | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் |
| திங்கள் வியாழன் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் |
| செவ்வாய் வெள்ளி | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் | தாமத சாத்விக | தாமத இராசத | தாமத தாமதம் | சாத்விக சாத்விக | சாத்விக இராசத | சாத்விக தாமதம் | இராசத சாத்விக | இராசத இராசத | இராசத தாமதம் |

[illegible] குறிப்பிட்டபடி [illegible] மினிட் வித்தியாச மிருப்பதை இதற்கும் செய்து கொள்க.



## திதிவிளக்கம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பிரதமை | 7. | ஸப்தமி | 13. | திரயோதசி |
| 2. | துதியை | 8. | அஷ்டமி | 14. | சதுர்த்தசி |
| 3. | திருதியை | 9. | நவமி | 15. | பௌர்ணமி |
| 4. | சதுர்த்தி | 10. | தசமி | | அல்லது |
| 5. | பஞ்சமி | 11. | ஏகாதசி | | அமாவாசியை |
| 6. | ஷஷ்டி | 12. | துவாதசி | | ஆகத்திதி 15. |

இவை சுக்கிலபக்ஷப்பிரதமைமுதல் ஐந்தாம் ஐந்தாம் ஐந்தாந்திதிகள் நந்தை பத்திரை சயை இரித்தை பூரணை என்னுஞ் சம்ஞ்ஞையுடையன.

நந்தைபத் திரையினோடு காட்டிய சயைஇரித்தை மூந்தபூரணை யாம்பக்கம் முதற்றெட்டு மூன்றுவட்டம். இதில் நந்தைத்திதிகளான பிரதமை ஷஷ்டி ஏகாதசி.

இவைகளின் ஆரம்பத்தில் இரண்டுநாழிகை கண்டார்த்தம். பூரணைத் திதிகளான பஞ்சமி தசமி பூரணை அமாவாசை இவைகளினந்தத்தில் இரண்டுநாழிகை கண்டார்த்தம். கண்டாந்தகாலம் கடியது. பத்திரைத்திதிகளாவன: துதியை ஸப்தமி துவாதசி. சயைத்திதிகளாவன: திருதியை அஷ்டமி திரயோதசி இரித்தைத்திதிகளாவன: சதுர்த்தி நவமிசதுர்த்தசி.

இத்திதி பதினைந்தில்,

தையலே முதலாந் திதியினிற் கூடில் கண்பருஞ் சட்டியில் விரோதம், பொய்யிலட் டமிசோய் நவமியிற் றுக்கம் பொருந்துமே காதசி பாவம், மையறு துவாத சிதனில் மருவிடிற் பூமகன் மருவாள், மெய்யினோர் புகழும் சதுர்த்தசி யதனில் மேவிடில் நோயென விதிப்பர்.

திங்களிற் றிங்கள் நாளும் சென்மநாள் மூன்று நாளும்
மங்கையர் பூத்த நாளும் வளர்பிறை நிறைந்த நாளும்
துங்கமா வாசை நாளுந் தோகையைப் புணர்வி ராகில்
அங்கமும் வேறு பட்டு அலைகுவர் திண்ணந் தானே.

இவ்விதிப்படி பிரதமை ஷஷ்டி அஷ்டமி ஏகாதசி துவாதசி பூரணை அமாவாசையாகச் சொல்லப்பட்ட எட்டுத்திதிகளும் சுபகருமானதன்றென நீக்குக. சுபகாமெனச் சொல்லப்பட்ட துதியை திருதியை சதுர்த்தி பஞ்சமி ஸப்தமி தசமி திரயோதசியாகச் சொல்லப்பட்டவைகளில் பஞ்சமிதசமியந்தத்தில் இரண்டுநாழிகை நீக்க.

அபரபக்கப் பிரதமையை நன்றென விதிப்பாருமுளர்.

## தித்திரயம்.

தினமொன்றில் மூன்றுதிதி வருநாளைத் தேவர்கடம்
மனமொன்றித் திடுந்திருநாட்க ளதனிலு மிசைக்கெதாரில்லில்
வினவுங் கரும மியான்றொரு நாளில் விதிக்கவிதி
புனமயிற் சாயல்கள் ளாய்புக லாதெனப் போற்றினரே.

ஒருதிதிநின்று வருதிதிகூடி வருதிதிமுடிந்து மறுதிதியும் ஒருநாளிற் கூடுமெனில் திதித்திரயமென அந்நாள் சுபகருமங்களுக்கு விலக்கெனவறிக.

மேலும் தாம் வசிக்கின்ற கிராமஆலயங்களில் உற்சவாதி சிறப்புகள் நடக்கும்பட்சமும் ஒருவீட்டில் இரண்டு சுபகர்மம் ஒருநாளிற் செய்தற்கும் விதியாமையாமென்பதை உணர்தல்.

வெள்ளிவெண் மழைகுரு வளிபூமி கிண்ணதிர்தல்
கொள்ளி யெரிவிழல் கோட்பரி வேடித்த லோரிமிடல்
வள்ளிய தாரு விளமெரி மாதிரத் தூற்ற லுண்டல்
ஒள்ளிய காரிய மேழ்தினத் தாக்கு ளரைப்பிலரே.

இ—ள்: கார்வானமன்றி வெண்மழைபெய்தாலும் மழையின்றி இடியிடித்தாலும் குருவளிக்காற்று அடித்தாலும் பூமிநடுங்கினும் எரிகொள்ளிவிழினும் கிரகங்களைப்பரிவேடமிடினும் பகலிடத்திலேநரிகுளறினும் காரணமின்றிப்பழையமரங்கள் விழுந்தாலும் திக்குகளெரிந்து புகையெழும்பினும் உற்பாதமென்று சொல்லுவர். இவைகளுழின் ஏழுதினம் நிஷேகம் விவாகம் முதலிய சுபகர்மங்கள் செய்யாது விலக்கவேண்டியதாம்.

மன்னரமைச்சர் புரோகிதர் வண்மையர் வான்கணிதர்
பன்னெறி நூலோர் பிடகர்நல் வேள்விப் பயன்முடிப்போர்
தன்னக ராதிபர் தத்துவ ஞானிகள் நான்மரித்தால்
பொன்னனை யேழ்தினம் நல்வினை செய்யப் புகன்றிலரே.

இவைகழினும் ஏழுதினம் சுபகருமவிலக்கு என்பதாம்.

இருதுவா மாதப் பிறப்பினில் மகத்தி லெழுஞாயி றதனிற்றாசி, சார்தருநாளி லாதிரை யெனுங்காட் சந்திரன் பிறந்தராசிகளுக்கு, ஓரையா மெட்டிற் புகுதுநாள் வியாதி பாதநாள் விரதநாள் குருவர்த்தி, போதரு பிதுருக் கூட்டுநாட் புணரின் வயதரும் வறுமைநோய் பிடிக்கும்.

இ—ள்: இருதுப்பிறப்பு மாதப்பிறப்பாகிய சங்கிராந்திகளிலும் மகத்திருவாதிரையிற் சூரியன் நடக்குங்காலமும் தாம் தாம் பிறந்த சென்மராசி யதாவது சந்திரலக்கினத்துக்கு எட்டாமிராசியில் சந்திரன் நடப்பதானகாலமும் சென்மநட்சத்திரத்துக்கு இருபத்தேழாம் நட்சத்திரநாளும் விரததினமும் பிதிர்த்திதிசெய்ததினமும் பெண்ணோடுகூடினால் பிணி தரித்திரம் விருத்தமாரகம் இவைதோன்றும்.



## யோகநாமங்களாவன.

| | | |
|---|---|---|
| 1. விஷ்கம்பம் | 10. கண்டம் | 19. பரிகம் |
| 2. பிரீதி | 11. விருத்தி | 20. சிவம் |
| 3. ஆயுஷ்மான் | 12. துருவம் | 21. சித்தம் |
| 4. சௌபாக்கியம் | 13. வியாகாதம் | 22. சாத்தியம் |
| 5. சோபனம் | 14. அர்ஷணம் | 23. சுபம் |
| 6. அதிகண்டம் | 15. வச்சிரம் | 24. சுப்பிரம் |
| 7. சுகர்மம் | 16. சித்தி | 25. பிராமம் |
| 8. திருதி | 17. வியதிபாதம் | 26. ஐந்திரம் |
| 9. சூலம் | 18. வரியான் | 27. வைதிருதி. |

இச்சொல்லப்பட்ட இருபத்தேழு யோகங்களுள் விஷ்கம்பம் அதிகண்டம் சூலம் கண்டம் வியாகாதம் வியதிபாதம் வச்சிரம் பரிகம் வைதிருதி என்ற ஒன்பதும் சுபகரமல்லாத யோகமென்றும், ஏனைய பிரீதி ஆயுஷ்மான் சௌபாக்கியம் சோபனம் சுகர்மம் திருதி விருத்தி துருவம் அரிஷணம் சித்தி வரியான் சிவம் சித்தம் சாத்தியம் சுபம் சுப்பிரம் பிராமம் ஐந்திருதியாகச் சொல்லப்பட்ட பதினெட்டும் சுபகரமான யோகமென்பதையுமறிக.

## கரணசுபாசுபம்.

| | | | |
|---|---|---|---|
| 1. பவம் | சிங்கம். | 7. பத்திரை | கோழி. |
| 2. பாலவம் | புலி. | 8. சகுனம் | காக்கை. |
| 3. கௌலவம் | பன்றி. | 9. சதுஷ்பாதம் | நாய். |
| 4. தைதிலம் | கழுதை. | 10. நாகவம் | பாம்பு. |
| 5. கரசம் | யானை. | 11. கிம்ஸ்துக்கினம் | புழு. |
| 6. வணிசம் | எருது. | கரணம் பதினொன்றாம். | |

இவை ஒருதிதிக்கும் முழுநாழிகையின் முற்பாதி ஒருகரணமாயும் பிற்பாதி ஒருகரணமாயும் பூர்வபக்ஷம் அபரபக்ஷமிரண்டினும் விகற்பமாய் ஒரேதன்மையின்றி வரும்.

## பூர்வபக்ஷத்து.

| | திதி. | திதி. | கரணம். | கரணம். |
|---|---|---|---|---|
| 1. | பிரதமை | | கிம்ஸ்துக்கினம் | பவம் |
| 2: | துதியை | நவமி | பாலவம் | கௌலவம் |
| 3. | திருதியை | தசமி | தைதிலம் | கரசம் |
| 4. | சதுர்த்தி | ஏகாதசி | வணிசம் | பத்திரை |
| 5. | பஞ்சமி | துவாதசி | பவம் | பாலவம் |
| 6. | ஷஷ்டி | திரயோதசி | கௌலவம் | தைதிலம் |
| 7. | ஸப்தமி | சதுர்த்தசி | கரசம் | வணிசம் |
| 8. | அஷ்டமி | பௌர்ணிமை | பத்திரை | பவம் |

## அபரபக்ஷத்து.

| | | | |
|---|---|---|---|
| பிரதமை | அஷ்டமி | பாலவம் | கௌளவம் |
| துதியை | நவமி | தைதிலம் | கரசம் |
| திருதியை | தசமி | வணிசம் | பத்திரை |
| சதுர்த்தி | ஏகாதசி | பவம் | பாலவம். |
| பஞ்சமி | துவாதசி | கௌளவம் | தைதிலம் |
| ஷஷ்டி | திரயோதசி | கரசம் | வணிசம் |
| ஸப்தமி | சதுர்த்தசி | பத்திரை | சகுனம் |
| | அமாவாசை | சதுஷ்பாதம் | நாகவம் |

கர்ப்பாதானத்துக்குக் கூடாதென விலக்கிய திதியை ஒட்டிவருங் கரணங்களும் சுபகரமல்லவென்பதாம். ஆகையால் அந்தத்திதிகளை விலக்கி ஏனைய திதியும் திதியோடு சம்பந்தமான கரணங்களும் சுபகரமான தெனவறிக.

## சுபநாள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்திரை | 6-ந் திகதி. | ஆவணி | 2-9-28ந் திகதி. | மார்கழி | 6-9-11 |
| வைகாசி | 7-16-17 ,, | புரட்டாதி | 16-29 ,, | தை | 1-2-3-11-17 |
| ஆனி | 1-6 ,, | ஐப்பசி | 6 ,, | மாசி | 15-16-17 |
| ஆடி | 2-10-20 ,, | கார்த்திகை | 1-10-17ம் | பங்குனி | 6-15-19. |
| | | | முதற்சாமமாம். | | { வருஷமொன்றின் சுபநாள் 31. |

இந்நாட்களில் சுபகாரியம் செய்தல் தகாது.

## நட்சத்திரசுபாசுபம்.

| | | |
|---|---|---|
| 1. அச்சுவினி | 10. மகம் | 19. மூலம் |
| 2. பரணி | 11. பூரம் | 20. பூராடம் |
| 3. கார்த்திகை | 12. உத்தரம் | 21. உத்தராடம் |
| 4. ரோகிணி | 13. அத்தம் | 22. திருவோணம் |
| 5. மிருகசீரிடம் | 14. சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. சோதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. விசாகம் | 25. பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுஷம் | 26. உத்தரட்டாதி |
| 9. ஆயிலியம் | 18. கேட்டை | 27. ரேவதி. |

ஒருநட்சத்திரம் நான்குபாதம் இருபத்தேழுநட்சத்திரமும் 108 பாதமல்லது கால்களாகும். அச்சுவினி முதலாங்கால்முதல் ஒன்பதொன்பதுகால்கள் மேடம்முதல்மீனமீறாக வரமாய் ரேவதிமுடிவப் பன்னிரண்டு ராசிக்குமடைந்த நட்சத்திரமும் பாதங்களுமாம். இந்தவிபாகவேறுபாட்டினத்தில் எந்நட்சத்திரமெத்தனையாம் பாதமென்றதைப் பஞ்சாங்கமூலமாயறிந்து சந்திரன் நிற்கும் இராசியைக் குறிப்பிடவேண்டியது.



இந்த இருபத்தேழுநக்ஷத்திரங்களிலுங் கர்ப்பாதானத்துக்கு:-

| | | |
|---|---|---|
| 1. அச்சுவினி | 6. உத்தரம் | 11. திருவோணம் |
| 2. ரோகிணி | 7. அத்தம் | 12. அவிட்டம் |
| 3. மிருகசீரிடம் | 8. அனுடம் | 13. சதயம் |
| 4. புனர்பூசம் | 9. மூலம் | 14. உத்தரட்டாதி |
| 5. பூசம். | 10. உத்தராடம் | 15. ரேவதி. |

ஆகச்சொல்லப்பட்ட பதினைந்து நட்சத்திரங்களும் விசேஷ சுபநட்சத்திரங்களெனவும், சித்திரை சோதியையும் விசேஷ சுபமெனச் சில கிரந்தகர்த்தாக்களாலங்கீகரிக்கப்பட்டிருப்பதும், சித்திரை சோதி நட்சத்திரங்கள் விவாகமுகூர்த்த சுபமானவாய்க்கொள்ளப்பட்டிருப்பதால் கர்ப்பாதானத்துக்கு விதித்த நட்சத்திரம் பதினேழென்பதாம்.

மேலே சொல்லப்படாத பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம் பூராடம், பூரட்டாதி, விசாகம்,கேட்டை இந்தப்பத்து நட்சத்திரங்களும் அசுபநட்சத்திரமென்று விலக்கற்பாலன. அன்றி,

காலற்றன உடலற்றன தலையற்றன நாட்கள்
மாலைக்குறி மடவார்தமைக் கூடின் மடவார்
மாலுக்கொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஞாலத்தினில் வழிபோகினும் நலமெய்திடா ரவமே.

| | |
|---|---|
| காலற்ற நட்சத்திரங்கள் | கார்த்திகை, உத்தரம், உத்தராடம் |
| உடலற்ற நாட்கள் | மிருகசீரிடம், சித்திரை அவிட்டம் |
| தலையற்றநட்சத்திரங்கள் | புனர்பூசம் விசாகம் பூரட்டாதி. |

அதாவது: காலற்ற நாளென்பது கார்த்திகை, உத்தரம், உத்தராடங்கள். முதற்பாதத்தை மேடசிங்கதனுவுக்கும், பின்முப்பாதத்தை இடபகன்னிமகரத்துக்குரியதாகையாலும், உடலற்ற நாளென்பது. மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் முதலிருபாதங்களை இடபம் கன்னி மகரத்துக்கும் பின்னிருபாதங்களை மிதுன துலாகும்பவிராசிக்குரியதாகையாலும், தலையற்ற நாளென்பது. புனர்பூசம் விசாகம் பூரட்டாதிமுன்மூன்று பாதத்தை மிதுன துலா கும்பத்துக்கும் பின்நான்காம்பாதத்தை கர்க்கடக விருச்சிக மீனத்துக்குரியதாய் சேர்த்தமையாலேயாம்.

இங்ஙனமாவதால் கார்த்திகை உத்தரம் உத்தராடத்து முதற்பாதமும் மிருகசீரிடம் சித்திரை அவிட்டத்துப் பின்னிருபாதமும் புனர்பூசம் விசாகம் பூரட்டாதியில் நான்காம்பாதமும் நீக்கின் மேற்கூறிய தோஷம் நிவாரணமாகுவதாம்.

இ—ம்: நட்சத்திரகண்டாந்தகாலம் விஷகடிகாகாலம் இவைகளையும் மேற்கூறியபடி அறிந்தறியவேண்டியது.

ஆடியும் பிரதமை தானு மனிமூஞ் சிறந்த வைக்தும்
பாடுமோ கிணியும் பத்தும் பன்னிரண் டத்த நாளும்
நீடுமுத் திரம்பன் மூன்றும் நிகழ்கடைப் பூர மெட்டும்
நாடிய கஞ்ச யோகம் நாகமே யெனினுந் தீதே.

| | |
|---|---|
| உத்தாரட்டமும் | பிரதமையும் |
| சோதியும் | பஞ்சமியும் |
| ரோகிணியுந் | தசமியும் |
| அத்தமும் | துவாதசியும் |
| உத்தரமும் | திரயோதசியும் |
| பூரட்டாதியும் | அட்டமியும் சேர்ந்துவரின் கஞ்ச |

யோகம் ஈது சுபகர்மவிலக்காகும்.

| நட்சத்திரங்கள். | கண்டாந்த பாதம். | விஷகடிகை ஆரம்பமுடிவு. நாழி. நாழி. | கண்டாந்த நாழிகை. | கண்டாந்த மத்தியம். |
|---|---|---|---|---|
| அச்சுவினி | 1-ம் பாதம் | 50-54 | ஆரம்பம் 4 | மத். நாழி. 8 |
| பரணி | | 24-28 | | |
| கார்த்திகை | | 30-34 | | |
| ரோகிணி | | 40-44 | | |
| மிருகசீரிடம் | | 14-18 | | |
| திருவாதிரை | | 21-25 | | மத். நாழி. 8 |
| புனர்பூசம் | | 30-34 | | |
| பூசம் | | 20-24 | | |
| ஆயிலியம் | 4-ம் பாதம் | 32-36 | ஈற்றில் 4 | |
| மகம் | 1-ம் பாதம் | 30-34 | ஆரம்பம் 4 | மத். நாழி. 8 |
| பூரம் | | 20-24 | | |
| உத்தரம் | | 18-22 | | |
| அத்தம் | | 21-25 | | |
| சித்திரை | | 20-24 | | |
| சோதி | | 14-18 | | |
| விசாகம் | | 14-18 | | |
| அனுடம் | | 10-14 | | |
| கேட்டை | 4-ம் பாதம் | 14-18 | ஈற்றில் 4 | மத். நாழி. 8 |
| மூலம் | 1-ம் பாதம் | 56-60 | ஆரம்பம் 4 | மத். நாழி. 8 |
| பூராடம் | | 24-28 | | |
| உத்தராடம் | | 20-24 | | |
| திருவோணம் | | 10-14 | | |
| அவிட்டம் | | 10-14 | | |
| சதயம் | | 18-22 | | |
| பூரட்டாதி | | 16-20 | | |
| உத்தரட்டாதி | | 24-28 | | |
| ரேவதி | 4-ம் பாதம் | 30-34 | ஈற்றில் 4 | மத். நாழி. 8 |



இங்ஙே கண்டாந்தம் விஷகடிகாகாலம் சுபகரும விலக்காகும். அச்சுவினி திருவாதிரை மகம் கேட்டை மூலம் ரேவதி இவ்வாறுநட்சத்திரங்கள் மத்தியகாலத்தில் எட்டெட்டுநாழிகை கண்டாந்தமாகும். சொல்லப்பட்ட நட்சத்திரஆரம்பநாழிகை முதல் முடிவுபெறுநாழிகைவரையுங் கண்டபரமநாழிகையை இருகூறாக்கி முற்கூற்றிற் பின் நாலுநாழிகை பிற்கூற்றில் முன் நாலுநாழிகை எட்டுநாழிகையெனக் கண்டுகொள்க.

## நாசயோகம்.

| வாரம். | திதி. | நட்சத்திரம். |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | பஞ்சமியும் | கார்த்திகையும் |
| திங்கட்கிழமையில் | துதியையும் | சித்திரையும் |
| செவ்வாய்க்கிழமையில் | பூரணையும் | ரோகிணியும் |
| புதன்கிழமையில் | ஸப்தமியும் | பரணியும் |
| வியாழக்கிழமையில் | திரயோதசியும் | அனுடமும் |
| வெள்ளிக்கிழமையில் | ஷஷ்டியும் | திருவோணமும் |
| சனிக்கிழமையில் | அட்டமியும் | ரேவதியும் |

மேற்கூறியபிரகாரம் வாரந் திதி நட்சத்திரம் சேர்ந்துவரின் நாசயோகம். இந்நாட்கள் சுபகருமவிலக்கு.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையும் | விசாகநட்சத்திரமும் |
| திங்கட்கிழமையும் | சதயநட்சத்திரமும் |
| செவ்வாய்க்கிழமையும் | அவிட்டமும் |
| புதன்கிழமையும் | ரேவதியும் |
| வியாழக்கிழமையும் | ரோகிணியும் |
| வெள்ளிகிழமையும் | பூசமும் |
| சனிக்கிழமையும் | உத்தரமும் வரின் |

நாசயோகம் சுபகருமவிலக்கு.

## கிழமைபிறந்த நட்சத்திரம்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையும் | பரணியும் |
| திங்கட்கிழமையும் | சித்திரையும் |
| செவ்வாய்க்கிழமையும் | உத்தராடமும் |
| புதன்கிழமையும் | அவிட்டமும் |
| வியாழக்கிழமையும் | கேட்டையும் |
| வெள்ளிக்கிழமையும் | பூராடமும் |
| சனிக்கிழமையும் | ரேவதியும் வருவன. |

இவ்விதம் வாரநட்சத்திரம் பொருந்தியவரின் அந்நாளும் சுபகருமவிலக்கு. அவ்வக்கிரமையிற் சொல்லப்பட்ட நட்சத்திரம்நின்று முடிந்து மற்றைய நட்சத்திரங்கூடின் அதன்மேற் சுபகருமம் செய்யப்பொருந்தினால் செய்யலாம்.

## மாததினம்.

கார்த்திகைக் கார்த்திகை யாதி யிரண்டுங் கருத்தடைவே
பார்த்திடில் மாத தினம்புரட் டாதி பகர்நூலசால்
சேர்த்திடு மூன்று தினமிவற் றிற்செழு மங்கலங்கள்
நீத்தன பூரண மாமதி தானும் நிகழ்த்தினரே.

| | |
|---|---|
| கார்த்திகைமாதத்தில் | கார்த்திகை, ரோகிணி |
| மார்கழிமாதத்தில் | மிருகசீரிடம், திருவாதிரை |
| தைமாதத்தில் | புனர்பூசம், பூசம் |
| மாசிமாதத்தில் | ஆயில்யம், மகம், பூரம் |
| பங்குனிமாதத்தில் | உத்தரம், அத்தம் |
| சித்திரைமாதத்தில் | சித்திரை, சோதி |
| வைகாசிமாதத்தில் | விசாகம், அனுடம் |
| ஆனிமாதத்தில் | கேட்டை, மூலம் |
| ஆடிமாதத்தில் | பூராடம், உத்தராடம் |
| ஆவணிமாதத்தில் | திருவோணம், அவிட்டம் |
| புரட்டாதிமாதத்தில் | சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி |
| ஐப்பசிமாதத்தில் | ரேவதி, அச்சுவினி, பரணி வருவன |

மாததினமெனப்படும்.

கார்த்திகைமுதல் ஐப்பசியீறான பன்னிரண்டு மாதங்களில் அவ்வம்மாதங்களுக்குச் சொல்லப்பட்ட நட்சத்திரங்களைச் சுபகாரியவிஷயமாய் அந்தந்தமாதங்களில் கொள்ளக்கூடாதென்பதாம்.

வருநாளினந்தத்திற்கன்னவிரண்டுவருந்திதிக்குத்
தருநாழிகைமூன்றுசாவணநட்சத்திரசௌரக்
குருசாந்திரமென்னுமானமதிகூறுமவற்றிரட்டி
யொருநாளிரண்டுமூன்றிரண்டாறுமுறுதென்பரே.

இ—ள்: நட்சத்திரஆரம்பத்திலும் முடிவிலும் இரண்டுநாழிகை சுபகர்மவிலக்கு திதியாரம்பமுடிவில் மூன்றுநாழிகை சுபகர்மவிலக்கு. சாயன ஆண்டின்முடிவில் ஒருநாட் சுபகர்மவிலக்கு. சாந்திரஆண்டுமுடிவில் ஆறுநாட் சுபகர்மவிலக்குச் சௌரமான ஆண்டுமுடிவில் 12 நாட் சுபகர்மவிலக்கென்பதாம்.



கோழந்தமத்தினில்மூன்றுதிங்கட்கு குற்றமுண்டாம்
வாளொத்தகண்ணாய்வலித்துசெருச்செய்யாவக்கிரனான்
ஆளப்படுமாறுதிங்களிவற்றிற்புகர்வரினும்
மீளப்புகருடன்வெண்டிங்கள்சேரின்மிகவுநன்றே.

இ—ள்: கிரகங்களஸ்தமயனமாய் நிற்கும் நட்சத்திரம் மூன்றுமாதத்துக்குச் சுபகர்மவிஷயமாய் விலக்கப்படவேண்டும். கிரகங்கள் வக்கிரித்தநட்சத்திரம் 6மாதத்துக்குச் சுபகர்மத்துக்குநீக்கவேண்டியது. மேலேகூறிய நட்சத்திரங்கள் சந்திரன் வெள்ளி இடபதுலாத்தில் இருக்குங்கால் தோஷநீக்கம், சுபகர்மம் செய்யலாமென்பதாம்.

குருவும்புகருங்கதிருடனத்தமங்கூடியநாட்
கருதுங்கடியணம்நூல்விளைசெனனகங்கலவியுடன்
மருவும்விரதநல்வேள்வியேயாத்திரைவாத்துவிடல்
சுரர்தம்பிரதிட்டைகுடிபுகலாகாதெனத்தாய்நகையே.

உத்தராயண பூர்வபக்ஷம் உத்தமம்.
தக்ஷிணாயன அபரபக்ஷம் மத்திமம்.

## கர்ப்பாதானத்துக்கு நாள்.

திருவோணமத்தம்பனைதொழுச்சோதிசெக்குத்திரங்க
ளருண்மூலமுத்தமஞ்சித்திரைமான்றலையாழவிட்டங்
குருநாட்களைமத்திமங்குற்றமற்றதிதிருளிர்யாழ்
கருமீனதுலைவிடைவில்லரிபெண்ணிற்கருப்பெய்கவே.

இ—ள்: திருவோணமத்தம் அனுடம் ரேவதி சோதி சதயம் உத்தரமுத்தராடமுத்தரட்டாதி ரோகிணி மூலம் இவையுத்தமம். சித்திரை மிருகசீரிடம் அச்சுவினி அவிட்டம் புனர்பூசம் பூசம் இவைமத்திமம். பக்கச்சித்திரையொழிந்த திதிகளுத்தமம். கர்க்கடகம் மிதுனம் மீனம் துலாம் இடபம் தனு சிங்கம் கன்னி இவைபுதயமுகூர்த்தமாகக் கர்ப்பாதானம் பண்ணலாம்.

அல்லாதவோரைபனைத்தும்பகலுந்தவிரப்படும்
சொல்லாருதயத்துமெட்டினுங்கோணிற்பிற்றேனைகளல்லாய்
பொல்லாதவாரமுமுவாவும்புகன்றிலாதானத்திற்
செல்லாவிதானமுமித்தாரணியிலிசைத்தவரே.

இ—ள்: மேற்கூறியவிராசிகளல்லாத வீனைய இராசிகளும் பகலுச் தவிரப்படும். உதயமுமெட்டாமிடமும் சுத்தம். ஞாயிற்றுக்கிழமை செவ்வாய்க்கிழமை சனிக்கிழமைஇரவு தவிரப்படும். அமாவாசை பூரணையொழிந்தநாட்களிற் கர்ப்பாதானம்பண்ணப்படும்.

அச்சுவினிமுதல் ரேவதியீறான இருபத்தேழு நட்சத்திரங்களுள் தனித்தனி ஜென்மநட்சத்திரத்துக்குந் தோஷநட்சத்திரமென விலக்கப்பட்ட நட்சத்திரங்களையும் சுபகரமெனக்கொள்ளப்பட்ட நட்சத்திரங்களையும் எவருமிலகுவிலறியுமாறிதன்பின்னுங்கூறுதும்.

62398

மயிர்வினைகல்விமணவினைபோக்குமருந்தருந்தல்
உயர்வுறுநூல்வினையுண்டிசீமந்தம்சிராத்தமிவை
இயல்புறத்தீதென்பர்சென்மக்கனிசியம்பாதனையும்
நியதியுங்கன்றெனவோதினர்கித்திலகீணகையே.

மூன்றைந்தேழ்நாள்முதலொன்பதிற்றீதாகிநான்குமூன்று
மேன்றவிக்காலிடையொன்பதிற்றீதின்பமென்பதல்லா
தான்றமதியட்டமத்திலெண்பத்தெட்டாயகாலில்
தோன்றியவைநாசிகஞ்சுழிக்கார்சுபநாளென்பரே.

வைழுந்தமூன்றுடன்சென்மங்களெட்டாயவோரையிற்குந்
தாளுந்தினங்கள்செனனமூன்றுள்தகாவைநாசிகமும்
சூழ்கின்றபன்னிரண்டேழ்சுபமல்லமுன்னைஞ்சொல்லி
ஆன்கின்றகால்கீத்தமத்திபம்உத்தமமல்லவையே.

இ—ள்: எந்நட்சத்திரத்தில் பிறந்தவருக்கும் அந்நட்சத்திரம் ஜென்மநட்சத்திரமென்றும் பத்தாம்நட்சத்திரம் கர்மநட்சத்திரமென்றும் பத்தொன்பதாம் நட்சத்திரம் சாங்காதிகமென்றும் பன்னிரண்டு பதினான்காம் நட்சத்திரம் சாமுதாயகமென்றும் செனனநட்சத்திரபாதத்துக்கு எண்பத்தெட்டாயபாதத்தைக்கொண்ட இருபத்திரண்டல்லது இருபத்துமூன்றும் நட்சத்திரம் வைநாசிகம் என்றும் மூன்றைந்தேழொன்பதாம் நட்சத்திரம் வைதனமென்றும் பதினாறும் நட்சத்திரம் 4ம் பாதம் கலைஞானபாதமென்றும் இருபத்தைந்தாம் நட்சத்திரம் மானசமென்றும் சாதகசந்திரலக்கினத்துக்கு எட்டாம் இராசிக்குரிய நட்சத்திரமிரண்டேகாலும் அட்டமஇராசிகாலென்றும் ஜென்மநட்சத்திரத்துக்கு 27ம் நட்சத்திரம் பாதகாலென்றும் இந்தசமிஞ்ஞைகளுடைய நட்சத்திரங்கள் நிஷேகம்முதலிய எவ்விதசுபகருமங்களுக்கும் விலக்கப்படுவனவாகும்.



செனனநட்சத்திரத்துக்கு மூன்றாநட்சத்திரத்தின் முதற்பாதமும், ஐந்தாம்நட்சத்திரத்து நான்காம்பாதமும், ஏழாம்நட்சத்திரத்தின் மூன்றாம்பாதமும், பதினாறாம்நட்சத்திரத்தின் நான்காம்பாதமும் நீக்கி, மற்றையபாதங்களில் சுபநட்சத்திரமாயதுவது ஆதானத்துக்குரியவையாய்வரும் நட்சத்திரங்களை அவசியபக்ஷத்துசரிக்கலாமெனக் கூறும்.

கற்பநாள்மூன்றிலெண்ணைகடிமணஞ்சிரத்தடம்போக்கு
வற்புறுபிணிமருந்துமயிர்வினைமருவலார
இற்புகவுமுனிதைக்கஇனிதுண்ணஅறக்ன்செய்ய
பொற்பணிமகுடமாடைபுனையலாம்புவின்மாதே.

என்றபடி செய்யாதொழிவனவும் செய்வனவுமாகும்.

மூன்றைந்துமேழும்முதற்சென்மநந்திஇவைநல்லகோ
ளூன்றிமெழுமதிகறக்கிமேன்மிடிஅந்தமமாம்
தோன்றியவோரைபம்பத்தாயவோரையும்தூயநட்பேல்
சான்றவர்வைநாசிகங்களியாதெனச்சாற்றினரே.

இ—ள்: செனனநட்சத்திரம் மூன்றாம்நட்சத்திர மைந்தாம்நட்சத்திரம் ஏழாம்நட்சத்திரமாக விதிக்கப்பாநட்சத்திரங்கள் வந்தபொழுதும் சந்திரன் பூரணசந்திரனாய் சுபாவசுரோடுகூடி யல்லது பார்வைபெற்று உச்சாட்சியோனை சுபாம்சனாய் நிற்கின் இத்தோஷம் நிவாரணம். மூன்றைந்தேழாம் நட்சத்திரமும் சுபகருமத்துக்கு விதித்தனவாகும். அன்றி எண்பத்தெட்டாம் பாதமான வைநாசிகம்இடந்தவிராசி பத்தாமிராசியாய் ஜென்மராசிக்குடைய கிரகம் பத்தாம்வீட்டுக்கிரகமும் சுபாவமித்திரராயிருப்பின் வைநாசிகதோஷநிவாரணம். இவற்றைப் பார்த்தறிக.

ஒத்தஉதயத்துக்கட்டமாசியுடையவர்கள்
மித்திராகில்மிகவுட்கன்றும்வென்மதிக்கிவ்விதம்
மித்திரமாகுமிசைந்தவாறெட்டுக்குமிவ்வகையே
வைத்துவசைசெய்தனர்வண்டார்கருங்குழல்வாணகையே.

இ—ள்: எவரேனும் ஜென்மமாகஇலக்கினத்துக்கு எட்டாம் ஆறும் வீட்டுக்குரிய கிரகமும் இலக்கினத்துக்குடையவனும் சுபாவமித்திரராய் அல்லது சாதகமித்திரராய் இருப்பினும் அன்றி சந்திரவிராசிக்கு ஆறெட்டாம் இராசிக்குடையவனும் சந்திரலக்கினத்துக்குரிய கிரகமும் சுபாவமித்திரராய் சாதகமித்திரராயிருப்பினும் அட்டமசட்டமதோஷபரிகாரமாகும். அந்த நட்சத்திரங்களும் விதித்தனவாம்.

## கிரகநட்பு சமம் பகை.

| | நட்பு. | சமம். | பகை. |
|---|---|---|---|
| சூரியன் | சந்-செவ்-வியா | புதன் | வெள்-சனி |
| சந்திரன் | சூரிய-புதன் | செவ்-வியா-வெ-சனி | |
| செவ்வாய் | சூரி-சந்-வியா | வெள்-சனி | புதன் |
| புதன் | சூரி-வெள்ளி | செவ்-வியா-சனி | சந்திரன் |
| வியாழன் | சூரி-சந்-செவ் | சனி | புதன்-வெ |
| வெள்ளி | புதன்-சனி | செவ்-வியா | சூரி-சந் |
| சனி | புதன்-வெள்ளி | வியாழன் | சூரி-சந்-செ |

ஓதியசித்தம்சுபாமுதம்வாமமுக்தமமாங்
கேதில்கல்யோகம்வரின்முன்புகூறியகுற்றமெல்லாம்
தீதில்பெரும்புகட்டெண்கடிவைப்பதிசென்றடைந்து
எதிலர்கல்குரவாமெனக்கிங்குமென்றெனத்திமைமே.

வளருமதியுமநற்பக்கமுமவாரத்தால்லவையுங்
களவில்கரணமுமாநல்நட்சத்திரநல்லகாலு
முளநல்லயோகமுமொன்றியபஞ்சாங்கமொன்னிமையாய்
அளவின்றிநன்மைமிக்காயிரங்குற்றமகற்றிடுமே.

### 1. அச்சுவினி நட்சத்திரஜெனனம்.

அச்சுவினி மகம் மூலம் கற்பாள். மூன்றும்நாட் கார்த்திகை, ஐந்தாம்நாள் மிருகசீரிடம். எழாம்நாள் புனர்பூசம். அச்சுவினி முதற்பாதத்திற்பிறந்தால் வைகாசிகம். திருவோணம் 2ம் 3ம் 4ம் காலிற்பிறந்தால் வைகாசிநட்சத்திரமவிட்டம். பன்னிரண்டாம்நாள் உத்தரம். பதினைந்தாம் நாள் சித்திரை. பதினாறும் நாள் விசாகம். அட்டமஇராசிநாள் விசாகம் அனுடம் கேட்டை. 21ம் நாள் உத்தராடம். 23ம் நாள் அவிட்டம். 25ம் நாள் பூரட்டாதி. பாதநாள் ரேவதி. சொல்லப்பட்ட 16 நட்சத்திரமும் சுபகாமல்லவெனவிலக்கி மிருகசீரிடத்துப் பின்னரையையும் புனர்பூசத்து மூன்றும்பாதத்தையும் விலக்கி ரோகிணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் அத்தம் சோதி சதயம் உத்தரட்டாதி இந்நட்சத்திரங்களுமாதான அநாவது கர்ப்பாதான சுபநட்சத்திரமாகும். அன்றியே இனைய சுபகருமங்களுக்கும் சிறந்ததென்ப. மேற்கூறிய அபவாதங்களுக்கினையின் நிஷேகத்துக்குக்கூறிய வினையநட்சத்திரங்களையும் யோசித்துக்கொள்ளலாம்.

### 2. பரணி நட்சத்திரஜெனனம்.

பரணி பூரம் பூராடங் கற்பநாள். 3ம் நாள் ரோகிணி. 5ம் நாள் திருவாதிரை. 7ம் நாள் பூசம். 12ம் நாள் அத்தம். 14ம் நாட் சோதி. 16ம் நாள் அனுடம். 21ம் நாள் திருவோணம். பரணி முதலாம்பாதத்திற்பிறந்தால் வைகாசிகம் அவிட்டம் 2ம் 3ம் 4ம் பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் சதயம். 25ம் நாள் உத்தரட்டாதி. அட்டமராசிநாள் விசாகத்துக்காலும் அனுடமும் கேட்டையும். 27ம்நாள் அச்சுவினி. ஆகச்சொல்லப்பட்ட 16நட்சத்திரமும் விலக்காம். இனைய மிருகசீரிடம் புனர்பூசம் உத்தரம் சித்திரை மூலம் உத்தராடம் அவிட்டமன்றிச் சதயம் ரேவதி ஆக எட்டுநட்சத்திரமுங் கொள்ளற்பாலனவாகும்.

### 3. கார்த்திகை நட்சத்திர ஜெனனம்.

கார்த்திகை உத்தரமுத்தாராடம்கற்பநாள்.

3ம்நாள் மிருகசீரிடம். 5ம்நாள் புனர்பூசம். 7ம்நாள் ஆயிலியம். 12ம்நாள் சித்திரை. 14ம்நாள் விசாகம். 16ம்நாள் கேட்டை. 21ம்நாள் அவிட்டம். கார்த்திகைமுதற்பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் சதயம். 2ம் 3ம் 4ம் பாதத்திற்பிறந்தால் வைகாசிகம் பூரட்டாதி. முதலாம்பாதத்தில் பிறப்பின் அட்டமராசிநாள் விசாகத்துக்காலும் அனுடமும் கேட்டையும். 2ம் 3ம் 4ம் பாதமெனில் அட்டமராசிநாள் மூலமும் பூராடமும் உத்தராடத்துக்காலும். 27ம்நாள் பரணி. 25ம்நாள் ரேவதி. ஆகச்சொல்லப்பட்ட 16நட்சத்திரங்களும் விலக்காகும். இனைய ரோகிணி பூசம் அத்தம் சோதி அனுடம் (மூலம் உத்தராடமுதற்பாதமில்லை) ஜென்மநட்சத்திரபாதத்தைத்தள்ளிக்கொள்ளுக. திருவோணம் அவிட்டம் உத்தரட்டாதி என்ற நட்சத்திரங்கள் சுபகாமானவையாமெனக் காண்க.

### 4. ரோகிணி நட்சத்திர ஜெனனம்.

ரோகிணி அத்தம் திருவோணம்கற்பநாள்.

3ம்நாள் திருவாதிரை. 5ம்நாள் பூசம். 7ம்நாள் மகம். 12ம்நாள் சோதி. 14ம்நாள் அனுடம். 16ம்நாள் மூலம். 21ம்நாள் சதயம். ரோகிணிமுதற்பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் பூரட்டாதி. 2ம் 3ம் 4ம் பாதத்தில் ஜெனனமெனின் வைகாசிகம் உத்தரட்டாதி. 25ம் நாள் அச்சுவினி. 27ம்நாள் கார்த்திகை. அட்டமராசிநாள் மூலம் பூராடம் உத்தராடத்துக்கால் ஆகச்சொல்லப்பட்ட பதினாறுநட்சத்திரமும் விலக்காகும். இனைய மிருகசீரிடம் புனர்பூசம் உத்தரம் சித்திரை ரேவதி என்ற நட்சத்திரங்கள் சுபகரமாம். நிஷேகத்துக்குச்சொல்லப்பட்ட வினையநட்சத்திரங்களை மேற்கூறியபடியபவாதமுண்டாயிற் கொள்ளலாம்.

## 5. மிருகசீரிடநட்சத்திர ஜெனனம்.

மிருகசீரிடம் சித்திரை அவிட்டம்கற்பநாள்.

3ம்நாள் புனர்பூசம். 5ம்நாள் ஆயிலியம். 7ம்நாள் பூரம். 12ம்நாள் விசாகம். 14ம்நாள் கேட்டை. 16ம்நாள் பூராடம். 21ம் நாள் பூரட்டாதி. மிருகசீரிடம் முதற்பாதத்தில் ஜெனனமெனின் வைகாசிகம் உத்தரட்டாதி. 2ம் 3ம் 4ம் பாதத்திற்பிறந்தால் வைகாசிகம் ரேவதி. 25ம்நாள் பரணி. 27ம்நாள் ரோகிணி. அட்டமராசிநாள் மிருகசீரிடம் முன்னரையிற் ஜெனனம் மூலம் பூராடம் உத்தராடத்துக்கால். மிருகசீரிடத்துப் பின்னரையெனில் உத்தராடத்து முக்காலும் திருவோணமும் அவிட்டத்து முன்னரையும் அட்டமஇராசிநாளாகும். ஆகச்சொல்லப்பட்ட (16) நட்சத்திரமும் விலக்காம். ஏனைய பூசம் உத்தரம் அனுடம் சதயம் அச்சுவினி ரோகிணி சுபகரமான நட்சத்திரங்களாகும். அன்றி மூலம் உத்தராடம் திருவோணம் மூன்றையும் அட்டமராசியையபறிந்து கொள்ளத்தள்ளத்தக்கதேயாம்.

## 6. திருவாதிரை நக்ஷத்திரஜெனனம்.

திருவாதிரை ரோகி சதயம் கற்பநாள்.

3ம் நாள் பூசம். 5ம் நாள் மகம். 7ம் நாள் உத்தரம். 12ம் நாள் அனுடம். 14ம் நாள் மூலம். 16ம் நாள் உத்தராடம். 21ம் நாள் உத்தரட்டாதி. திருவாதிரை முதற்பாதமெனின் வைகாசிகம் ரேவதி. 2ம் 3ம் 4ம் பாதமெனில் அச்சுவினி. 25ம் நாள் கார்த்திகை. 27ம் நாள் மிருகசீரிடம் 8ம் ராசிநாள் உத்தராடத்து முக்காலும் திருவோணமும் அவிட்டத்து முன்னரையுமாகச் சொல்லப்பட்ட பதினறுநட்சத்திரமும் விலக்காகும். ஏனைய புனர்பூசம் அத்தம் சித்திரை என்றஇவைகளும் ரேவதி அச்சுவினியில் பாதநிச்சயத்தால் காணுமொன்றையும் சுபநட்சத்திரமாகக் கொள்க. அன்றி முன்னரேகூறியபடி விஷேகத்துக்குரியதான நட்சத்திரங்களை அபவாதமுண்டாயிற் கொள்க.

## 7. புனர்பூசநட்சத்திரஜெனனம்.

புனர்பூசம் விசாகம் பூரட்டாதி கற்பநாள்.

3ம் நாள் ஆயிலியம். 5ம் நாள் பூரம். 7ம் நாள் அத்தம். 12ம் நாள் கேட்டை. 14ம் நாள் பூராடம். 16ம் நாள் திருவோணம். 21ம் நாள் ரேவதி. புனர்பூசமுதற்பாதஜெனனமெனின் வைகாசிகம் அச்சுவினி. 2ம் 3ம் 4ம் பாதமெனின் பரணி. 25ம் நாள் ரோகிணி. 27ம் நாள் திருவாதிரை. புனர்பூசம் முன்மூன்றுபாதத்துள் அட்டமராசிநாள் உத்தராடத்துப்பின்முக்கால் திருவோணம், அவிட்டத்துப்பின்னரை. நாலாம்பாதத்திற் பிறந்தால் அவிட்டத்துப்பின்னரை சதயம் பூரட்டாதிமுக்காலும் ஆகிய 16 நட்சத்திரமும் விதித்ததல்லனவாம். ஏனைய பூசம் உத்தரம் சித்திரை சோதி அனுடம் மூலம் உத்தராடம்முதற்கால் உத்தரட்டாதி என்றஇவையும் பாதநிச்சயத்தால் உத்தராடப்பின்முக்கால் திருவோணம் அவிட்டம் சதயம் வைகாசிகம் அச்சுவினி இவைகளையுமறிந்து தள்ளக் கொள்ளத்தக்கதேயாம்.



## 8. பூசநட்சத்திரஜெனனம்.

பூசம் அனுடம் உத்தரட்டாதி கற்பநாள்.

3ம் நாள் மகம். 5ம் நாள் உத்தரம். 7ம் நாள் சித்திரை. 12ம் நாள் மூலம். 14ம் நாள் உத்தராடம். 16ம் நாள் அவிட்டம். 21ம் நாள் அச்சுவினி. பூசம்முதற்பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் பரணி. 2ம் 3ம் 4ம் பாதமெனின் கார்த்திகை. 25ம் நாள் மிருகசீரிடம். 27ம் நாள் புனர்பூசம். அவிட்டம் சதயம் பூரட்டாதி அட்டமராசிநாள் ஆகிய 16 நட்சத்திரங்களும் விதியாதனவாம். ஏனைய அத்தம் சோதி திருவோணம் ரேவதி ரோகிணி என்ற இவைகள் விதித்த சுபகரநட்சத்திரமாகும்.

## 9. ஆயிலியநட்சத்திரஜெனனம்.

ஆயிலியம் கேட்டை ரேவதி கற்பநாள்.

3ம் நாள் பூரம். 5ம் நாள் அத்தம். 7ம் நாள் சோதி. 12ம் நாள் பூராடம். 14ம் நாள் திருவோணம். 16ம் நாள் சதயம். 21ம் நாள் பரணி. ஆயிலியம் முதற்பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் கார்த்திகை. 2ம் 3ம் 4ம் பாதமெனின் ரோகிணி. 25ம் நாள் திருவாதிரை. 27ம் நாள் பூசம். அவிட்டத்துப் பின்னரை சதயம் பூரட்டாதி அட்டமராசிநாள் ஆகிய பதினறு நட்சத்திரங்களும் ஜென்மநட்சத்திரதோஷமென விலக்கியும் ஏனைய உத்தரம் சித்திரை அனுடம் மூலம் உத்தராடம் அவிட்டத்து முன்னரை உத்தரட்டாதி அச்சுவினி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் என்ற இவைகள் விஷேகசுபகரமாமெனவும் பாதநிச்சயத்தால் ரோகிணியைத் தள்ளக்கொள்ளத்தக்கதாம்.

## 10. மகநட்சத்திரஜெனனம்.

மகம் மூலம் அச்சுவினி கற்பநாள்.

3ம் நாள் உத்தரம். 5ம் நாள் சித்திரை. 7ம் நாள் விசாகம் 12ம் நாள் உத்தராடம். 14ம் நாள் அவிட்டம். 16ம் நாள் பூரட்

டாதி. 21ம் நாள் கார்த்திகை. மகம் முதற்பாகத்தில் ஜெனனம் வைகாசிகம் ரோகிணி. 2ம் 3ம் 4ம் பாதத்துக்கு வைகாசிகம் மிருகசிரிடம். 25ம் நாள் புனர்பூசம். 27ம் நாள் ஆயிலியம். பூரட்டாதி நாலாம்பாதமும் உத்தரட்டாதி ரேவதியும் அட்டமராசிநாள். ஆக 16 நட்சத்திரங்கள் விலக்காகும். அபவாதமிருப்பின் கொள்ளவிதியாகு மிவையல்லாமலேனைய அத்தம் சோதி அனுடம் திருவோணம் சதயம் பூசம் இந்நட்சத்திரங்கள் விதித்திருப்பன பாதநிச்சயத்தால் ரோகிணி மிருகசிரிடமிரண்டில் வருவனவொன்றைச் சேர்த்துக்கொள்ளவும்.

## 11. பூரநட்சத்திரஜெனனம்.

பூரம் பூராடம் பரணி கற்பநாள்.

3ம் நாள் அத்தம். 5ம் நாள் சோதி. 7ம் நாள் அனுடம். 12ம் நாள் திருவோணம். 14ம் நாள் சதயம். 16ம் நாள் உத்தரட்டாதி. 21ம் நாள் ரோகிணி. பூரம் முதற்பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் மிருகசிரிடம். 2ம் 3ம் 4ம் பாதத்தில் பிறந்தால் திருவாதிரை. 25ம் நாள் பூசம். 27ம் நாள் மகம். பூரட்டாதி நாலாம்பாதமும் உத்தரட்டாதியும் ரேவதியும் அட்டமராசிநாளாக 16 நட்சத்திரமும் விதியாதனவாமபவாதமுண்டாயிற் கொள்க. ஏனைய உத்தரம் சித்திரை உத்தராடம் அவிட்டம் அச்சுவினி புனர்பூசம் என்ற இவை சுபகரமாம். ஜென்ம நட்சத்திர பாதநிச்சயத்தில் மிருகசிரிடம் கொள்ளத்தள்ளவும் அத்தம் சோதி அனுடம் உத்தரட்டாதிக்கு குறித்த பாதங்களொழிக்கி அவசிய பக்ஷத்தில் கொள்ளலாம்.

## 12. உத்தரநட்சத்திரஜெனனம்.

உத்தர முத்தராடங்கார்த்திகை கற்பநாள்.

3ம் நாள் சித்திரை. 5ம் நாள் விசாகம். 7ம் நாள் கேட்டை. 12ம் நாள் அவிட்டம். 14ம் நாள் பூரட்டாதி. 16ம் நாள் ரேவதி. 21ம் நாள் மிருகசிரிடம். உத்தரம் முதற்பாதத்திற் பிறந்தால், வைகாசிகம் திருவாதிரை. 2ம் 3ம் 4ம் பாதத்தில் பிறப்பின் வைகாசிகம் புனர்பூசம். 25ம் நாள் ஆயிலியம். 27ம் நாள் பூரம். உத்தரம் முதற்பாதஜெனனிக்குப் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதியும், 2ம் 3ம் 4ம் பாதமுடையவர்க்கு அச்சுவினி பரணி கார்த்திகைக்கால் அட்டமராசிநக்ஷத்திரமும் ஆகப் 16 நட்சத்திரமும் விலக்கவும். அபவாதமுண்டாயிற் கொள்ளவும் விதிப்பன. ஏனைய அத்தம் சோதி அனுடம் மூலம் திருவோணம் சதயம் ரோகிணி பூசம் என்ற இவையும், வைகாசிகஅட்டமதோஷத்தில் பாதநிச்சயத்தால் புனர்பூசம் உத்தரட்டாதி ரேவதி அச்சுவினி நட்சத்திரங்களைத் தெரிந்துகொள்ளவுந் தள்ளவுங் கடப்பாடாம். ஏனைய அபவாதங்களையுங் கவனிக்கற்பாலன.

## 13. அத்தநட்சத்திரஜெனனம்.

அத்தம் திருவோணம் ரோகிணி கற்பநாள்.

3ம் நாள் சோதி. 5ம் நாள் அனுடம். 7ம் நாள் மூலம். 12ம் நாள் சதயம். 14ம் நாள் உத்தரட்டாதி. 16ம் நாள் அச்சுவினி. 21ம் நாள் திருவாதிரை. அத்தம்முதற்காலில் ஜெனனம். வைகாசிகநாள் புனர்பூசம். 2ம் 3ம் 4ம்பாதத்தில் பிறந்தால் வைகாசிகநாள் பூசம். 25ம் நாள் மகம். 27ம் நாள் உத்தரம். அச்சுவினி பரணி கார்த்திகைக்கால் அட்டமராசி நட்சத்திரமாகப் 16 நட்சத்திரங்களும் விதியாதனவாகும். முன்னரேகூறிய அபவாதங்களுக்கியைபின் ஆராய்ந்துகொள்க. அன்றி ஏனைய சித்திரை உத்தராடம் அவிட்டம் ரேவதி ரோகிணி மிருகசிரிடம் முன்னரை உத்தராட பின்முக்கால் என்ற இவை அத்தநட்சத்திர ஜெனனிக்குச் சுபகரமாகும். பாதநிச்சயத்தால் புனர்பூசம் பூசம் இவை இரண்டிலொன்று சுபகரனாய்த்தோன்றுவதைக் காண்க.

## 14. சித்திரைநட்சத்திரஜெனனம்.

சித்திரை அவிட்டம் மிருகசிரிடம் கற்பநாள்.

3ம் நாள் விசாகம். 5ம் நாள் கேட்டை. 7ம் நாள் பூராடம். 12ம் நாள் பூரட்டாதி. 14ம் நாள் ரேவதி. 16ம் நாள் பரணி. 21ம் நாள் புனர்பூசம். சித்திரை முதற்பாதத்திற்பிறந்தால் வைகாசிகநாள் பூசம். 2ம் 3ம் 4ம் பாதத்திற் பிறந்தால் வைகாசிகம் ஆயிலியம். 25ம் நாள் பூரம். 27ம் நாள் அத்தம். சித்திரை முன்னிருபாதங்களுக்கும் அட்டமராசிநாள் அச்சுவினி பரணி கார்த்திகையும், பின்னிருபாதங்களுக்குக் கார்த்திகைப் பின்முக்கால் ரோகிணி மிருகசிரிட முன்னரையும், ஆகப் 16 நட்சத்திரமும் விதியாதனவாகும். முன்னரேகூறியபடி அபவாதங்கட்கியைபின் ஆராய்ந்துகொள்க. சுபநட்சத்திரமென விதித்த சோதி அனுடம் மூலம் உத்தராடம் திருவோணம் சதயம் உத்தரட்டாதி ரேவதி என்ற இவை விதித்தனவாகும். வைகாசிக அட்டமராசிநாளாகிய பூசம் அச்சுவினி ரோகிணி மிருகசிரிடமான இவைகளைச் சித்திரைநாட் பாதநிச்சயத்திற் கொள்ளத் தள்ளத்தக்கனவாம்.

## 15. சோதி நட்சத்திரஜெனனம்.

சோதி சதயந் திருவாதிரை கற்பநாள்.

3ம் நாள் அனுடம். 5ம் நாள் மூலம். 7ம் நாள் உத்தராடம். 12ம் நாள் உத்தரட்டாதி. 14ம் நாள் அச்சுவினி. 16ம் நாள் கார்த்திகை. 21ம் நாள் பூசம். சோதி முதற்பாதத்திற்பிறந்தால் வைநாசிகம் ஆயிலியம். 2ம் 3ம் 4ம் பாதமெனில் வைநாசிகம் மகம். 25ம் நாள் உத்தரம். 27ம் நாள் சித்திரை-கார்த்திகைப்பின்முக்கால் ரோகிணி மிருகசீரிடத்து முன்னரை அட்டமராசி நட்சத்திரம் ஆகப்பதினாறும் விலக்காகும். அபவாதமுண்டாவிற் கொள்ளவிதியாகும். ஏனைய திருவோணம் அவிட்டம் ரேவதி புனர்பூசம் அத்தம் என்ற இவைகள் சுபநட்சத்திரமாகும். மூன்றைந்தேழாம் நாளான அனுடம் மூலம் உத்தராடத்துக்கு முதனாம் நாலாம் மூன்றும் பாதம் நீக்கி அவசியபட்சமாய்க்கொள்ளலாமென்பதும் கருதிரீதியாம்.

## 16. விசாகநட்சத்திர ஜெனனம்.

விசாகம் பூரட்டாதி புனர்பூசம் கற்பநாள்.

3ம் நாள் கேட்டை. 5ம் நாள் பூராடம். 7ம் நாள் திருவோணம். 12ம் நாள் ரேவதி. 14ம் நாள் பரணி. 16ம் நாள் ரோகிணி. 21ம் நாள் ஆயிலியம். விசாகம் முதற்பாதத்தில் பிறந்தால் வைநாசிக நாள் மகம். 2ம் 3ம் 4ம் பாதமெனில் வைநாசிகநாள் பூரம். 25ம் நாள் அத்தம். 27ம் நாள் சோதி. விசாகம் முன்மூன்று பாதத்தாருக்கட்டம இராசிநாள் கார்த்திகைப்பின்முக்கால் ரோகிணி மிருகசீரிடத்து முன்னரையும் விசாகம் நாலாம்பாதத்தினர்க்கு அட்டம இராசிநாள் மிருகசீரிடத்துப்பின்னரை திருவாதிரை புனர்பூசத்துமுன்முக்காலாக 16நட்சத்திரங்களும் தோஷநாள். ஏனைய அனுடம் மூலம் உத்தராடம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி அச்சுவினி பூசம் உத்தரம் சித்திரை என்ற இவைகள் சுபநட்சத்திரமாகும்.

## 17. அனுட நட்சத்திர ஜெனனம்.

அனுடம் உத்தரட்டாதி பூரம் கற்பநாள்.

3ம் நாள் மூலம். 5ம் நாள் உத்தராடம். 7ம் நாள் அவிட்டம். 12ம் நாள் அச்சுவினி. 14ம் நாள் கார்த்திகை. 16ம் நாள் மிருகசீரிடம். 21ம் நாள் பூரம். அனுடம் முதற்பாதத்தில் பிறந்தால் வைநாசிக நாள் பூரம். 2ம் 3ம் 4ம் பாதமெனில் வைநாசிகமுத்தரமாகும்.

25ம் நாள் சித்திரை, 27ம் நாள் விசாகம். மிருகசீரிடத்துப் பின்னரையுந் திருவாதிரையும் புனர்பூசத்து முன்முக்காலும் சந்திராட்டமராசிநாளாக 16 நட்சத்திரங்களுந் தோஷநாள். ஏனைய திருவோணம் சதயம் ரேவதி ரோகிணி பூசம் அத்தம் சோதியென்ற இவைகள் விதிக்கப்பட்டநாளாம். அன்றி மூன்றைந்தேழாம் நட்சத்திரமான மூலம் உத்தராடமவிட்டம் மிருகசீரிட முன்னரை இவைகளை நிந்திதபாதங்களை நீக்கிக் கொள்ளக்கடவன. வைநாசிகம் உத்தரத்தையாராய்ந்து கொள்க.



## 18. கேட்டை நட்சத்திரஜெனனம்.

கேட்டை ரேவதியாயிலியம் கற்பநாள்.

3ம் நாள் பூராடம். 5ம் நாள் திருவோணம். 7ம் நாள் சதயம். 12ம் நாள் பரணி. 14ம் நாள் ரோகிணி. 16ம் நாள் திருவாதிரை. 21ம் நாள் பூரம். கேட்டை முதற்பாதமெனின் வைநாசிக முத்தரம். 2ம் 3ம் 4ம் பாதத்தில் பிறந்தால் வைநாசிக நாளத்தம். 25ம் நாள் சோதி. 27ம் நாள் அனுடம். மிருகசீரிடத்துப்பின்னரையும் திருவாதிரையும் புனர்பூசத்து முன்முக்காலுஞ் சந்திராட்டமராசி நாளாக (16ம்) விலக்கு. ஏனைய மூலம்உத்தராடம் அவிட்டம் உத்தரட்டாதி ரேவதி அச்சுவினி மிருகசீரிடம் முன்னரை பூசம் சித்திரை அனுடமென்ற இவைகள் சுபகரமானவை. அன்றி, பாதநிச்சயத்தால் வைநாசிகமெனக்கொண்ட உத்தரமத்தநாளை யூகித்தறிக. ஐந்தேழாகிய திருவோணம் சதயத்தின் தோஷபாதங்களைநீக்கி அவசியபக்ஷத்தில் மத்திமமாய்க் கொள்ளலாம்.

## 19. மூலநட்சத்திர ஜெனனம்.

மூலம் அச்சுவினி மகம் கற்பநாள்.

3ம்நாள் உத்தராடம். 5ம்நாள் அவிட்டம். 7ம்நாள் பூரட்டாதி. 12ம்நாள் கார்த்திகை. 14ம்நாள் மிருகசீரிடம். 16ம் நாள் புனர்பூசம். 21ம் நாள் உத்தரம். மூலம் முதற்பாதத்தில் பிறந்தால் வைநாசிகநாள் அத்தம். 2ம் 3ம் 4ம் பாதமெனின் வைநாசிகநாள் சித்திரை. புனர்பூசம் நாலாங்காலும் பூசமும் ஆயிலிய முற்கொண்டது சந்திராட்டமராசிநாள். 25ம் நாள் விசாகம். 27ம் நாள் கேட்டை. ஆக (16) நட்சத்திரங்களும் விதியாதனவாம். ஏனைய திருவோணம் சதயம் உத்தரட்டாதி ரேவதி ரோகிணி உத்தரம் அத்தம் சித்திரை சோதி அனுடம் என்ற இவைகள் சுபம். அத்தம் சித்திரையில் வைநாசிகம் கிடந்த எண்பத்தெட்டாம்பாதம் நீக்கியும் மூன்றைந்தாம் நாளான உத்தராடமவிட்டத்தில் நியையே முதலாம் நாலாம் பாதமல்லாதமற்றையபாதங்களையும் அவசிய பக்ஷத்தில் மத்திமமெனக்கொள்க.

## 20. பூராட நட்சத்திர ஜெனனம்.

பூராடம் பரணி பூரம் கற்பநாள்.

3ம்நாள் திருவோணம். 5ம்நாள் சதயம். 7ம்நாள் உத்தரட்டாதி. 12ம்நாள் ரோகிணி. 14ம்நாள் திருவாதிரை. 16ம் நாள் பூசம். 21ம்நாள் அத்தம். பூராடம் முதற்பாதத்தில் பிறந்தால் வைநாசிகநாள் சித்திரை. 2ம் 3ம் 4ம் பாதமெனின் வைநாசிகம் சோதி. புனர்பூசம் நாலாங்காலும் பூசமுமாயிலியமும் அட்டமராசிநாள். 25ம்நாள் அனுடம். 27ம்நாள் மூலம் ஆக (16) நட்சத்திரக்களும் தோஷமென விலக்கப்பட்டன. மேலேகூறிய படி யபவாத விதிக்கிணையாயிற் கொள்ளலாமன்றியேனைய உத்தராடம் அவிட்டம் ரேவதி அச்சுவினி மிருகசிரிடம் புனர்பூசம் உத்தரம் மூலம் என்றஇவைகள் சுபநட்சத்திரம். பாதநிச்சயத்தால் வைநாசிகமாகச்சொல்லிய சித்திரை சோதியைஆராய்ந்துகொள்க. இருபத்தேழாம் நட்சத்திரமான மூலமொரோராசிக்குரியதாகை யால் கொள்ளத்தக்கதாம்.

## 21. உத்தராட நட்சத்திரஜெனனம்.

உத்தராடம் கார்த்திகை உத்தரம் கற்பநாள்.

3ம்நாள் அவிட்டம். 5ம்நாள் பூரட்டாதி. 7ம்நாள் ரேவதி. 12ம்நாள் மிருகசிரிடம். 14ம்நாள் புனர்பூசம். 16ம் நாள் ஆயிலியம். 21ம்நாள் சித்திரை. உத்தராடம் முதலாங் காலிற்பிறந்தால், வைநாசிகம் சோதி. 2ம் 3ம் 4ம் காலிற்பிறந்தால், வைநாசிகம் விசாகம். உத்தராட முதற்பாதத்தினர்க்குப் புனர்பூசத்துக்கால் பூசம் ஆயிலியம் சந்திர அட்டமராசிநாள்.பின் இரண்டாம் மூன்றும் நாலாம்பாதத்தினர்க்கு மகம் பூரம் உத்தரத் துக்கால் அட்டமராசிநாள். 25ம்நாள் கேட்டை. 27ம்நாள் பூராடம். ஆகப் பதினாறும் ஜென்மதோஷமென விலக்கப்பட்டன. ஏனைய திருவோணம் சதயம் உத்தரட்டாதி அச்சுவினி ரோகிணி அத்தம் அனுடம் மூலம் என்ற இவைகள் விதிக்கப்பட்ட சுபநாளாம். ஏனையவைகளை அபவாதவிதிபொருந்தில் கொள்ளற்பாலன. எனினும் மத்திமமாம்.

## 22. திருவோண நட்சத்திரஜெனனம்.

திருவோணம் ரோகிணி அத்தம் கற்பநாள்

3ம்நாள் சதயம். 5ம்நாள் உத்தரட்டாதி. 7ம்நாள் அச்சுவினி. 12ம்நாள் திருவாதிரை. 14ம்நாள் பூசம். 16ம்நாள் மகம். 21ம்நாள் சோதி. திருவோணம் முதற்காலிற் பிறந்தால் வைநாசிகம் விசாகம். 2ம் 3ம் 4ம் காலிற்பிறந்தால் வைநாசிகமனுடம்.



மகமும் பூரமும் உத்தரத்து முதற்காலும் சந்திராட்டமராசிநாள். 25ம்நாள் மூலம். 27ம்நாள் உத்தராடம். ஆகப்பதினாறு நட்சத்திரக்களும் திருவோணத்துக்குப் பகைநாட்களென விலக்கியும் ஏனைய அவிட்டம் ரேவதி மிருகசீரிடம் புனர்பூசம் உத்தரத்துப் பின்மூப்பாதமும் அத்தம் சித்திரை உத்தராடத்துப் பின்மூன்றுபாதம் சுபகரமானவை; ஏனையவைகளையபவாதவிதியின் கொள்ளத்தக்கன.

## 23. அவிட்ட நட்சத்திரஜெனனம்.

அவிட்டம் மிருகசீரிடம் சித்திரை கற்பநாள்.

3ம்நாள் பூரட்டாதி. 5ம்நாள் ரேவதி. 7ம்நாள் பரணி. 12ம் நாள் புனர்பூசம். 14ம்நாள் ஆயிலியம். 16ம்நாள் பூரம். 21ம்நாள் விசாகம். அவிட்டம் முதற்பாதத்திற் பிறந்தால் வைநாசிகநாள் அனுடம். 2ம் 3ம் 4ம் பாதத்திற்பிறந்தால் வைநாசிகநாள் கேட்டை. அவிட்டம் முதலாம் இரண்டாம் பாதத்தினர்க்கு மகம் பூரம் உத்தரம் முதற்கால் அட்டமராசிநாள். 3ம் 4ம் பாதத்தினர்க்கு உத்தரத்துப் பின்மூக்காலும் அத்தமும் சித்திரைமுன்னரையும் அட்டமராசிநாளாகும். 25ம்நாள் பூராடம். 27ம்நாள் திருவோணம். ஆகப்பதினாறும் விலக்கியேனைய சதயம் உத்தரட்டாதி அச்சுவினி ரோகிணி பூசம் சோதி அனுடம் மூலம் உத்தராடம் இவைசுபகரமாகும். அவிட்டம் முன்னரையிற்ஜென்மமானவர்க்குத் திருவோணம் சுபம். ஏனையவைகளை அபவாதமுறையில் கொள்ளத்தக்கனற்பான.

## 24. சதய நட்சத்திரஜெனனம்.

சதயம் திருவாதிரை சோதி கற்பநாள்.

3ம்நாள் உத்தரட்டாதி. 5ம்நாள் அச்சுவினி. 7ம்நாள் கார்த்திகை. 12ம்நாள் பூசம். 14ம்நாள் மகம். 16ம்நாள் உத்தரம். 21ம்நாள் அனுடம். சதயம் முதற்பாதத்தில் ஜெனனமானவர்க்கு வைநாசிகநாள் கேட்டை 2ம் 3ம் 4ம் பாதத்தினர்க்கு வைநாசிகம் மூலமாகவும், உத்தரத் துப் பின்மூக்காலத்தம் சித்திரைமுன்னரை சந்திராட்டமராசிநாள். 25ம் நாள் உத்தராடம். 27ம்நாள் அவிட்டம். ஆகப்பதினாறும் சதயத்திற்பிறந்தவர்க்குத் தோஷநாளெனவிதிப்பது ஆவசியத்து அபவாதவிதியையநுசரித்துப் பொருந்திற் கொள்வது; ஏனைய ரேவதி மிருகசீரிடம் புனர்பூசம் சோதி மூலம் திருவோணம் என்ற இவை விதித்த நட்சத்திரங்கள்.

## 25. பூரட்டாதி நட்சத்திரஜெனனம்.

### பூரட்டாதி புனர்பூசம் விசாகம் கர்ப்பநாள்.

3ம் நாள் ரேவதி. 5ம் நாள் பரணி. 7ம் நாள் ரோகிணி. 12ம்நாள் ஆயிலியம். 14ம் நாள் பூரம். 16ம் நாள் அத்தம். 21ம் நாள் கேட்டை. 25ம் நாள் திருவோணம். 27ம் நாள் சதயம். பூரட்டாதி முதலாம்பாதத்தில் பிறந்தால் வைகாசிகம் மூலம். 2ம் 3ம் 4ம் பாதத்தார்க்கு வைநாசிகம் பூராடம். பூரட்டாதி முன்மூன்று பாதத்தினர்க்கட்டமராசிநாள் உத்தரப்பின்முக்கால் அத்தம் சித்திரை முன்னரையும் நான்காம் பாதத்தினர்க்கு சித்திரைப் பின்னரையும் சோதியும் விசாகத்து முன்முக்காலும் எட்டாமிராசிநாளாகப் பதினாறும் விதியாதனவாம். ஏனைய உத்தரட்டாதி அச்சுவினி மிருகசீரிடம் பூசம் உத்தரம் முதற்பாதம் அனுடம் மூலம் என்ற இவை சுபகரமானவையாய் விதித்தனவாகும். பூரட்டாதி முன்முக்காலினர்க்குச் சதயம் சுபகரம். பாதநிச்சயத்தால் மூலத்தைப் பரிசோதித்துக் கொள்க. ஏனையவையபவாதமிருப்பின் அங்கீகரிப்பது.

## 26. உத்தரட்டாதி நட்சத்திர ஜெனனம்.

### உத்தரட்டாதி பூசம் அனுடம் கர்ப்பநாள்.

3ம் நாள் அச்சுவினி. 5ம் நாள் கார்த்திகை. 7ம் நாள் மிருகசீரிடம். 12ம் நாள் மகம். 14ம் நாள் உத்தரம். 16ம்நாள் சித்திரை. 21ம் நாள் மூலம். 25ம் நாள் அவிட்டம். 27ம் நாள் பூரட்டாதி. உத்தரட்டாதிமுதற்பாதத்தினர்க்கு வைநாசிகநாள் பூராடம். 2ம் 3ம் 4ம் பாதத்தார்க்கு வைநாசிகம் உத்தராடம். சித்திரையிற் பின்னரை சோதி விசாகத்து முன்முக்கால் சந்திராட்டமராசிநாளாக 16 நட்சத்திரங்களும் இவருக்குச் சுபகருமவிலக்காகும். ஏனைய ரேவதி ரோகிணி புனர்பூசம் அத்தம் திருவோணம் சதயம் என்ற இவை சுபகரம். பாதநிச்சயத்தால் உத்தராடத்தைப் பரிசோதித்துக்கொள்ளவும். மூன்றேழாம் நட்சத்திரம் அச்சுவினி மிருகசீரிடத்தையவசியநிமித்தம் பாதகாணஞ்செய்துமங்கீகரிக்கத்தக்கதுமன்றி மற்ற நாட்களுக்கும் முன்னரேசொல்லிய அபவாதம் பொருந்தில் நன்று.

## 27. ரேவதி நட்சத்திரத்தில் ஜெனனம்.

### ரேவதி ஆயிலியம் கேட்டை கர்ப்பநாள்.

3ம்நாள் பரணி. 5ம்நாள் ரோகிணி. 7ம் நாள் திருவாதிரை. 12ம் நாள் பூரம். 14ம் நாள் அத்தம். 16ம் நாள் சோதி. 21ம் நாள் பூராடம். 25மநாள் சதயம். 27ம் நாள் உத்தரட்டாதி. ரேவதி முதற்பாதத்தினர்க்கு வைநாசிகம் உத்தராடம். 2ம் 3ம் 4ம் பாதத்தினர்க்கு வைநாசிகம் திருவோணம். சித்திரைப் பின்னரை சோதி விசாகத்துமுக்காலும்



சந்திராட்டமராசி நாளாகக் கூறியபதினாறும் தோஷநாளெனவும் ஏனைய அச்சுவினி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் உத்தரம் அனுடம் மூலம் உத்தரட்டாதி என்ற இவைகள் சுபகரநட்சத்திரங்களெனவிதிக்கப்பட்டன. ரேவதியின் பாதநிச்சயத்தால் வைநாசிகமெனவிலக்கப்பட்ட உத்தராடம் திருவோணத்தை ஆராய்ந்துகொள்க.

## தம்பதிகளுக்கன்யோன்யமான நட்சத்திரங்கள்.

ரேவதிமுதலாக ஆறுநட்சத்திரங்களில் நிஷேகம்செய்தால் பெண் தன் கணவனுக்குப்பிரீதியுடையவளாயிருப்பாளென்றும் திருவாதிரைமுதலாகப் பன்னிரண்டு நட்சத்திரங்களில் நிஷேகம் செய்தால் தம்பதிகளுக்கன்யோன்யப்பிரீதியுண்டாகுமென்றும் கேட்டைமுதலாக ஒன்பது நட்சத்திரங்களில் நிஷேகம் செய்தால் ஸ்திரிக்குப் புருஷன் அத்தியந்தப்பிரீதியுடையவனாவானென்றும் கூறப்படுவது. ஆனால் இஃது இருபத்தேழு நட்சத்திரங்களையும் முக்கூறாக்கிப்பொதுவான சுபாசுபம் சொல்லப்பட்டது எனினும் விதித்த நட்சத்திரங்களுக்கே இவ்விதியையுமொட்டிக் கொள்க.

## கர்ப்பாதானத்திற்கு அத்தியாவசியகம் பொதுவிதியாக நீக்கவேண்டியன.

பார்யாபர்த்தாக்களின் ஜென்மராசிக்கு எட்டாம்வீட்டிற் சந்திரனிருக்கையிலும் சுபாவபாவராகிய சூரியன் செவ்வாய் சனி ராகு கேது இருந்த நட்சத்திரங்களிலும் பரணிமுதலாக மேலேவிலக்கப்பட்ட நட்சத்திரங்களிலும்பார்யாபர்த்தாக்களின்ஜென்மநட்சத்திரத்திற்கு3-5-7-10-12 14-16-19-21-25-27 ம் நட்சத்திரங்களிலும் வைநாசிகமெனச் சொல்லப்படும் நட்சத்திரமும், பிரதமை சதுர்த்தி ஷஷ்டி அட்டமி நவமி சதுர்த்தசி பூர்ணை அமாவாசை என்றதிதிகளிலும் பரிகாநாமயோகம் வைதிருதியோகம் வியதிபாதயோகம் மகாபாதவிஷ்டி நாமயோககாலங்களிலும் பகலிலும் சூரியோதய அஸ்தமனகாலங்களிலும் விரததினங்களிலும் சிராத்ததினங்களிலும் மிருத்துமூகூர்த்தம் முதலிய முகூர்த்ததோஷங்களிலும் கர்ப்பாதானஞ் செய்யக்கூடாது.

நிரம்பவேயுண்டபோதும்பினைவறப்பசித்தபோதும்
வரம்பறநடந்தபோதும்மனத்துயர்கொண்டபோதும்
சிரந்தனிலெண்ணெய்வைத்துத்நீர்க்கொடும்போதும்
அரம்பையர்மகளிர்தம்மைப்பிணைந்திடலவன்மாவான்.

## நிஷேககபலக்கினமாதியன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மேடம் பிரமாணவிநாடி | 259 | 7. | துலாம் பிரமாணவிநாடி | 297 |
| 2. | இடபம் ,, | 284 | 8. | விருச்சிகம் ,, | 314 |
| 3. | மிதனம் ,, | 317 | 9. | தனு ,, | 329 |
| 4. | கர்க்கடகம் ,, | 329 | 10. | மகரம் ,, | 317 |
| 5. | சிங்கம் ,, | 314 | 11. | கும்பம் ,, | 284 |
| 6. | கன்னி ,, | 297 | 12. | மீனம் ,, | 259 |

ஈரொன்றுக்கு 3600.

தேசாந்தர சம்ஸ்காரவிதியால் விதேசங்களுக்கு ராசிமானசங்கியை மேற்கூறியபிரமாணத்துக்கு கூடியுங் குறைந்தும் வருவனவற்றைத்திருத்திக்கொள்க.

| | ம.வி.செ. | | ம.வி.செ. |
|---|---|---|---|
| 1. மேடம் ............ | 1-43-36 | 7. துலாம் ............ | 1-58-48 |
| 2. இடபம் ............ | 1-53-36 | 8. விருச்சிகம் ......... | 2- 5-36 |
| 3. மிதுனம் ............ | 2- 6-48 | 9. தனு ............ | 2-11-36 |
| 4. கர்க்கடகம் ......... | 2-11-36 | 10. மகரம் ............ | 2- 6-48 |
| 5. சிங்கம் ............ | 2- 5-36 | 11. கும்பம் ............ | 1-53-36 |
| 6. கன்னி ............ | 1-58-48 | 12. மீனம் ............ | 1-43-36 |
| | | ஆக மணி | 24-0-0. |

| | | | |
|---|---|---|---|
| மேடமாதம் | சித்திரை. | துலாமாதம் | ஐப்பசி. |
| இடபமாதம் | வைகாசி. | விருச்சிகமாதம் | கார்த்திகை. |
| மிதுனமாதம் | ஆனி. | தனுமாதம் | மார்கழி. |
| கர்க்கடகமாதம் | ஆடி. | மகரமாதம் | தை. |
| சிங்கமாதம் | ஆவணி. | கும்பமாதம் | மாசி. |
| கன்னிமாதம் | புரட்டாதி. | மீனமாதம். | பங்குனி. |

அதாவது: சித்திரைமாதம் முதற்றேதி மேடத்திற் சூரியோதயம். மேடம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனு மகரம் கும்பம் மீனம் என்ற முறையே அவ்வவ்விராசிகளுக்கு ஏற்பட்ட மணி மினிற் செக்கன்வரையும் அந்தந்தஇராசிகாலமாமாகவே அவ்வத்தேசத்துக்குச் செய்யப்பட்ட சூரியோதய மணிமினிற்றேடு ஒவ்வொருராசிக்குரிய மணி மினிற் செக்கனைக் கூட்டவரும் மணி மினிற் செக்கன்வரையும் அந்தராசிலக்கினமாமெனை இலகுவில் காழிகை விநாடித்தப்பரைக்கணக்கறியாதார் கடிகாரத்திலேயே பார்த்தறிய விதியாம். ஆனல், உதிக்குமிராசிப்பிரமாண மணி மினிற் செக்கனை முதல் இரண்டு மூன்று என்றபடி திகதியதாவது நாளை செல்லச்செல்லச் சூரியோதயத்துக்கு முன்னும் பின்னுமாக ஏனைடவே அத்தமாதச் சங்கிராந்திவரையுஞ் செல்லவேண்டியன. அவற்றை உதயாற்பூர்வம் உதயாற்பரம் என்று கூறப்படும். அவை வருமாறு.

| | 1௳ ம.வி.செ. | 2௳ ம.வி.செ. | 3௳ ம.வி.செ. | 4௳ ம.வி.செ. | 5௳ ம.வி.செ. | 6௳ ம.வி.செ. | 7௳ ம.வி.செ. | 8௳ ம.வி.செ. | 9௳ ம.வி.செ. | 10௳ ம.வி.செ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேடம் சித்திரை ... | 1-43-36<br>3-27 | 1-40- 8 | 1-36-40 | 1-33-12 | 1-29-44 | 1-26-16 | 1-22-48 | 1-19-20 | 1-15-52 | 1-12-24 |
| இடபம் வைகாசி ... | 1-53-36<br>3-48 | 1-49-48 | 1-46-00 | 1-42-12 | 1-38-24 | 1-34-36 | 1-30-48 | 1-27-00 | 1-23-12 | 1-19-24 |
| மிதுனம் ஆனி ... | 2- 6-48<br>4-13 | 2- 2-35 | 1-58-22 | 1-54- 9 | 1-49-56 | 1-45-43 | 1 41-30 | 1-37-17 | 1-33- 4 | 1-28-51 |
| கர்க்கடகம் ஆடி ... | 2-11-36<br>4-23 | 2- 7-13 | 2- 2-50 | 1-58-27 | 1-54- 4 | 1-49-41 | 1.45-18 | 1.40-55 | 1-36-32 | 1-32- 9 |
| சிங்கம் ஆவணி ... | 2- 5-36<br>4-11 | 2- 1-25 | 1-57-14 | 1-53- 3 | 1-48-52 | 1-44-41 | 1-40-30 | 1-36-19 | 1-32- 8 | 1-27-57 |
| கன்னி புரட்டாதி ... | 1-58-48<br>3-58 | 1-54-50 | 1-50-52 | 1-46-54 | 1-42-56 | 1-38-58 | 1-35-00 | 1-31- 2 | 1-27- 4 | 1-23- 6 |
| துலாம் ஐப்பசி ... | 1-53-48<br>3-58 | 1-54-50 | 1-50-52 | 1-46-54 | 1-42-56 | 1-38-58 | 1-35-00 | 1-31- 2 | 1-27- 4 | 1-23- 6 |
| விருச்சிகம் கார்த்திகை | 2- 5-36<br>4-11 | 2- 1-25 | 1-57-14 | 1-53- 3 | 1-48-52 | 1-44-41 | 1-40-30 | 1-36-19 | 1-32- 8 | 1-27-57 |
| தனு மார்கழி ... | 2-11-36<br>4-23 | 2- 7-13 | 2- 2-50 | 1-58-27 | 1-54- 4 | 1-49-41 | 1-45-18 | 1-40-55 | 1-36-32 | 1-32- 9 |
| மகரம் தை ... | 2- 6-48<br>4-13 | 2- 2-35 | 1-58-22 | 1-54- 9 | 1-49-56 | 1-45-43 | 1-41-30 | 1-37-17 | 1-33- 4 | 1-28-51 |
| கும்பம் மாசி ... | 1-53-36<br>3-47 | 1-49-48 | 1-46-00 | 1-42-12 | 1-38-24 | 1-34-36 | 1-30-48 | 1-27-00 | 1-23-12 | 1-19-24 |
| மீனம் பங்குனி ... | 1-43-36<br>3-27 | 1-40- 8 | 1-36-40 | 1-33-12 | 1-29-44 | 1-26-46 | 1-22-48 | 1-19-20 | 1-15-52 | 1-12-24 |

எனையதிகதிகளுக்கும் அத்தந்த மாதவிராசிப்பிரமாண மணிமணித் தெக்கனில் திகதியொன்றுக்கு கழிபடவேண்டிய மினிற் செக்கனைக் கழித்துவரும் மணி மினிற் செக்கன் சூரியோதயம்முதல் உதயாற் பரம் ஆதலால் சூரியன் உதிக்கின்ற அவ்வவ்விராசிகாலமும் அப்பால் அடுத்தநிரைநிரையான இராசிகாலங்களுமாமெண அறிந்துகொள்ளலாம். கழிக்கப்படும் மணி மினிற் செக்கன்றுகள் சூரிய உதயத்துக்குமுன்னரே செல்லப்படுவன உதயாற்பூருவமென்றவழக்கும்.

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>பங்குனி<br><br>சூரியன்<br>30-20-21 | மேடம்<br>சித்திரை<br>சூரியன்<br>பா. க. வி.<br>30-55-00 | இடபம்<br>வைகாசி<br><br>சூரியன்<br>31-24-12 | மிதுனம்<br>ஆனி<br><br>சூரியன்<br>31-36-38 |
| கும்பம்<br>மாசி<br><br>சூரியன்<br>29-48-24 | ஒவ்வொருமாதர்தமும் மாதவராசம்பமுமாகும் சங்கிராந்தி நாழிகை விநாடியில் அவ்வம் மாத விராசியில் சூரியன் உதயமாமென்பதும் சூரியோதயம் முதல் லவமாக அவ்வவ்விராசிக்குரிய காலம்வரையும் அவ் விராசிமுகூர்த்தம். | | கர்க்கடகம்<br>ஆடி<br><br>சூரியன்<br>31-28-12 |
| மகரம்<br>தை<br><br>சூரியன்<br>29-27-15 | | | சிங்கம்<br>ஆவணி<br><br>சூரியன்<br>31-20-00 |
| தனு<br>மார்கழி<br><br>சூரியன்<br>29-20-56 | விருச்சிகம்<br>கார்த்திகை<br><br>சூரியன்<br>29-30-24 | துலாம்<br>ஐப்பசி<br><br>சூரியன்<br>29-54-7 | கன்னி<br>புரட்டாதி<br><br>சூரியன்<br>31-27-22 |

## கர்ப்பாதானசுபராசிகள்.

| | |
|---|---|
| மேடவிருச்சிகம் | செவ்வாய் ஆட்சிவீடும் |
| இடபதுலாம் | வெள்ளி ஆட்சிவீடும் |
| மிதுனகன்னி | புதன் ஆட்சிவீடும் |
| கர்க்கடகம் | சந்திரன் ஆட்சிவீடும் |



| | |
|---|---|
| சிங்கம் | சூரியன் ஆட்சிவீடும் |
| தனு மீனம் | வியாழன் ஆட்சிவீடும் |
| மகர கும்பம் | சனி ஆட்சிவீடுமாகும். |

இவற்றுள் மேடம் விருச்சிகம் சிங்கம் மகரம் கும்பம்என்ற இவ் விராசிகள் பாவராசியெனநீக்கி எனைய

1. இடபம். 2. மிதுனம். 3. கர்க்கடகம். 4. கன்னி. 5. துலாம். 6. தனு. 7. மீனம் என்ற இராசிகள் சுபராசி சுபகர்ப்பமுகூர்த்தத்துக்கு யோக்கியதையுடையனவாகவும் கூறப்பட்டுள்ளன. விலக்கப்பட்டனவாகிய மேடம் சிங்கம் விருச்சிகம் மகரம்கும்பமென்ற இவ் விராசியில் கும்பராசியைக் கொள்ளலாமென்று காலாமிர்தத்திற் சொல்லப்பட்டிருப்பதால்,

## கர்ப்பாதானத்துக்கு.

1. இடபம் 2. மிதுனம் 3. கர்க்கடகம் 4. கன்னி 5. துலாம் 6. தனு 7. கும்பம் 8. மீனம் ஆன இராசிகள் சுபகரமாமெனக் கொள்க. என்னினும் சூரியன் செவ்வாய் சனி ராகு கேது நிற்கும் இராசிகளும் சுபகரமல்லவென்பதாம். ஆனால் இப்பாவிகள் அயனபஞ்சுபராய் சுட்பாட்சியுச்சமாய் நிற்பின் பாவவிமோசனமாகுமெனச் சிலநூல் விதித்திருக்கின்றன.

## சுபமுகூர்த்த கிரகநிலை.

நல்லகோள்பன்னொன்றிரண்டைந்தொடொன்பதுநாற்கண்டத்து
செல்லுறின்நன்மைசிறப்புடைத்தாம்மூர்த்தந்தீயகோள்கள்
புல்லுறுமாறிற்பதினொன்றில்மூன்றினில்நன்றுபகர்
கொல்லிதட்கூர்மொழியாய்குற்றமேழெனக்கூறினரே.

இ—ள்: நல்லகோள் பன்னொன்றிரண்டைந் தொடொன்பது நாற்கண்டத்து செல்லுறின்—சுபாவசுபராகிய சந்திரன் புதன் வியாழன் வெள்ளி கொண்டலக்கினத்திற்கு 11-2-5-9-1-4-7-10 ல்நிற்க, பாவராகிய சூரியன் செவ்வாய் சனி ராகு கேது 6-11-3ல் நின்றால், நன்மை சிறப்புடைத்தாம் மூர்த்தம்—நன்மையைப் மிகுதியுங் கொடுக்கும். சிறப்புடைய முகூர்த்தமாகுமென்று விதிக்கும். வெள்ளி எழாமிடம் பொல்லான் முகூர்த்தலக்கினத்துக்கு 7ல் வெள்ளி நிற்கலாகாது.

மதிமக னெட்டியி லேற்றுமாறு குற்றத்தை வாட்டும்புக
ழதிபெறு மெட்டி யில்லையா யிரங்குற்ற மகற்றுவிக்கும்

பதிபெறு மந்திரி தன்னெட்சி யிற்பத்துநூ றாயிரமாம்
விதிபெறு கண்டங்கள் கட்பாட்சி யுச்ச மிகதல்லரே.

இ—ள்: புதன் உதயத்து நின்றாலிலஞ்நூறு குற்றத்தைப்போக்கும். வெள்ளியுதயத்துநின்றால் ஐயாயிரங் குற்றத்தை நீக்கும். வியாழன் உதயத்துநின்றால் பத்துலெக்ஷம் குற்றங்கள் நீங்கும். செவ்வாய் சனி ராகு கேது பகைநீசம்பெற்ற சூரியசந்திரர் உதயத்தேநின்றால் மேலேகூறியகணக்கின்படி குற்றத்தை உண்டாக்குவர். மேலேகூறிய சுபர்கள் கேந்திரங்களில் நின்றாலும் தோஷத்தைநீக்கிச் சுபத்தைக்கொடுப்பார்கள்.

நல்லவுச்சத் துற்கோ ளுடனெட்சியுநாளின்கற்கால்
புல்லுநாதிரிகேட்பொன்புகர் நோக்கினும்கேந்திரத்து
நல்லவர்நிற்பி னுங்கட் புச்சியாயி னுமாட்சியாகிற்
சொல்லியகுற்றமெல்லாஞ்சுபமாமெனச்சொல்லுவரே.

இ—ள்: சந்திரன் உச்சமாய்நின்று சோக்கினும் சுபக்கிரகங்களோடு கூடினும் இலக்கினத்துநிக்கினும் அன்றி சுபாங்கிசகேதனனுனி சந்திரனை வியாழன் வெள்ளி பார்த்தாலும் சந்திரனுக்குக் கேந்திரங்களில் சுபக்கிரகங்கள் நிற்பினும் சூரியன் மத்தியானத்து எட்டாம்முகூர்த்தமாகிய அபிசித்து முகூர்த்தமாயினும் மேலேகூறப்பட்டுள்ள குற்றங்கள் யாவுந்தீர்ந்துகுணமாகும்.

இரவி தனுச்சத்து மாட்சியி னிற்ப வெளில் மதியம்
மருவும் வளிபெறின் வைதிருதி பாதம் மாயில் நன்றும்
பரமொன்று மியவர் கால்கள்மூன் றுறுபன் னென்றதனில்
திரமொன்றி நிறங்கன்கள் ளுமென்று சான்றவர் செப்பினரே.

இ—ள்: சூரியன் உச்சாட்சியில்நிற்ப, சந்திரன் பெல்முடையராய் சுபாம்சத்து நிற்பின் வைதிருதி வியதீபாததோஷம் நீங்கிவிடும் அல்லாமல் சந்திரன் சுபாம்சமின்றி சூரியன் செவ்வாய் சனி யம்சமடைந்து நிற்பின் அவ்வம்சாதிபதி சூரியன் செவ்வாய் சனியிலேனுமோ அவர் முகூர்த்தலக்கினத்துக்கு மூன்றாறு பதினொன்றுனடபசெயபெலம் பெறின் சந்திரன்பெற்ற பாபாம்சதோஷம் நிவாரணமாகும்.

## புட்கரபாதம்.

வள்ளல் மனுக்கள் சினவர் மாமுனி யென்றபர்கை
தெள்ளிய மேட மரிசிலை யாதிநாள் கோளையினின்



றுன்னிய புட்கர பாகைக ளென்றுரைத் தார்கள் பின்னும்
வெள்ளம் பணியைந்து தண்டைந்து தேட்சனல் வெண்டிங்களே.

இ—ள்: வள்ளல் இருபத்தொன்று. மனுக்கள் பதினான்கு. சினவர்இருபத்தான்கு மாமுனி ஏழு. மேடசிங்கதனுவில் இருபத்தோராம் பாகையும் இடபகன்னியாமகரத்தில் பதினாலாம்பாகையும் மிதுனதுலாகும்பத்திலிருபத்துநான்காம்பாகையும் கர்க்கடக விருச்சிகமீனத்தில் ஏழாம்பாகையும் புட்கரபாதமெனப்படும். இப்பாகைகளையடைந்த இலக்கினமுகூர்த்தத்தில் செய்யப்படும் சுபகர்மம் மிகுதியும் சுபகரபலனுடையதாகும்.

அஃதன்றி, வெள்ளமணியைந்தென்ற நான்காம்வரிக்கியைய மேட சிங்க தனுவுக்கு இருபத்தோராம்பாகையோடு ஏழாம் ஒன்பதாம்பாகையையும், இடப கன்னியா மகரத்துக்குப் பதினாலாம்பாகையுடன் ஐந்து மூன்றும் பாகையையும், மிதுன துலா கும்பத்துக்கு இருபத்துநாலாம்பாகையுடன் ஐந்து எட்டாம்பாகையையும், கர்க்கடகவிருச்சிகமீனத்திற்கு ஏழாம்பாகையோடு மூன்றாம்பாகையையும், புட்கரபாதமாகக் கூறி அங்கீகரிப்பதும் உள்வழக்கு.

வளரு மதியும்கட் பெய்திகற் காலின் மகிழ்ந்துநிற்ப
வளனினில் வாரத் திறைவலி யின்றி யமைந்துசாலத்
தளர்வொன்றி நின்றிடிற் சாற்றிய ராசயோ கத்திலக்கான்
வளமுண்டு நல்வினைக் கென்றுநன் மந்திரி வைத்தனனே.

இ—ள்: சந்திரன் பூரணனாய் ஏட்பாட்சியுச்சத்துச் சுபாம்சத்து நிற்ப, வாராதிபதிவலியின்றியே பகைநீசத்தில் நிற்பிற் சொல்லப்பட்ட ராசயோகங்களெல்லாம் மிக்கசுபயோகமாமென்று பிரகஸ்பதிசொல்லினன்.

ஓதிய சித்தஞ் சுபமமிர் தம்வர உத்தமமாங்
கோதில்கல் யோசம் வரில்முன்பு கூறிய குற்றமெல்லாம்
தீதில் பெரும்புகட் டென்கடு வைப்பதி சென்றடைந்த
வேதியர் கல்குரா வாமென நீங்குமென் வேல்விழியே.

இ—ள்: சித்தயோகம் அமிர்தயோகம் சித்தாமிர்தயோகம் அமிர்தசித்தயோகம் என்னும் யோகாலங்கள் அனேககுற்றங்களைப் போக்கி மிகு சுகத்தைக்கொடுக்குமென்பதாம்.

திருந்திய யோகத்து நல்வினை செய்திடிற் றென்கடுவைப்
பொருந்திய வேளாண் டலைவரைப் போலப் புகழுடனே
விருந்துட னுண்டனு மெய்யுஞ் சிறப்பு மிகவினங்கி
யிரந்தாஞ் செல்வத்து நீடூழி வாழ்வரிந் நீணிலத்தே.

இ—ள்: விதிக்கப்பட்ட திதிவாராதி சேர்ந்து வரும்சுபயோகத்திலே கர்ப்பாதானம் முதலாகச் சொல்லப்படும் சுபகர்மங்களை மக்களாராய்ந்துசெய்யின் கடுவைக்கிறைவனைச்சேர்ந்தன்னாரைப்போல தனதானியபூர்த்தியுண்டாய் சகலமங்கலங்களோடுகூடிச் சற்கீர்த்தியும் பூரணாயுளும் பொருந்திக் கிருகத்தராய் வாழ்வார்.

## மிருத்துமுகூர்த்தம்.

மந்தனைந்தில் புகரேழில் மால்பத்திற் சேயொன்பதில்
அந்தண னிரெட்டி லாதித்த னிராகுவி ராறதனில்
சந்திர னிரெட்டில் சாரும் முகூர்த்தம்சா முகூர்த்தமென்று
மந்திரி நூன்முறை வல்லவ ரோதினர் வாணுதலே.

இ—ள்: முகூர்த்தமாகக் கொள்ளப்படும் இலக்கினத்திற்கு ஐந்தில் சனிநின்றாலும் ஏழில் வெள்ளிநின்றாலும் பத்தில் புதன்நின்றாலும் ஒன்பதிற் செவ்வாய் நின்றாலும் ஆறெட்டில் வியாழன்நின்றாலும் பன்னிரண்டிற் சூரியன் இராகு நின்றாலும் ஆறு எட்டில் சந்திரன் நின்றாலும் மிருத்துமுகூர்த்தமென உணர்ந்து மேற்படி தானங்களில் நின்று மிருத்துக்குணத்தைக் கொடுக்கின்ற கிரகங்கள் மாறிநிற்கப் பொருந்தும் முகூர்த்தத்தை நிச்சயிக்கவேண்டியதே.

உதயத்து நாலிரண் டேழொன்ப தைந்தெட் டீராறு பத்திற்
சிதைவிப்பர் நன்மையைத் தீயவர் மூன்றாறு பன்னொன்றிலே
வதிவுற் றிடில்நல் முகூர்த்தம தாகும் மதியெட்சியும்
புதையப் படுங்கதி ரும்பொருந் தாதென்பர் பொற்றொடியே.

இ—ள்: இலக்கினம் நாலு இரண்டு ஏழு ஒன்பது ஐந்து எட்டுப் பன்னிரண்டு பத்து என்ற ஸ்தானங்களிற் சூரியன் செவ்வாய் சனி ராகு கேது இருந்தால் முகூர்த்த நன்மை குன்றும். சொல்லப்பட்ட இத்தீயவர் மூன்று ஆறுபதினொன்றில் நிற்க சுபர் உதயம் இரண்டு நாலு ஐந்து ஏழு ஒன்பது பத்துப் பதினொன்றில் நின்றால் சுபமுகூர்த்தமென்னுஞ் சிறப்புமாம்.



ஆழ்கின்ற மெய்யுயிர்க் காறுடன் மூன்றுபன் னொன்றிற்றீயோர், ஏழைந்து நான்கிரண் டொன்பது பத்தி னிசையினல்லோர், வாழ்வொன் றிடுங்கர்ப்பம் வாணுத லாய்சொல்லின் வல்லவெல்லாஞ், சூழ்கின்ற கோள்வலி மெய்யுயி ரின்வலி கொண்டு சொல்லே.

இ—ள்: கர்ப்பாதான இலக்கினத்துக்கும் சந்திரலக்கினத்துக்கும் ஆறு மூன்று பதினொன்று இவ்விடங்களிற் பாபக்கிரகங்களிற்பினும் ஏழு ஐந்து நாலு இரண்டொன்பதுபத்து இவ்விடங்களிற்சுபக்கிரகங்களிற்பினும் கர்ப்பம் நன்றாகவளர்ந்து யாதொருதோஷங்களுமின்றியே பிறக்கும். இப்படி உதயம் இராசியென்ற ஈரிடத்துக்கும் கிரகங்களின் பெலமறிந்து சொல்லுவது.

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

அறம்பொரு ளின்பம்வீ
டடைதல் நூற்பயனே.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புங் கனகமுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பும் நமக்குமுன் னேவந்து தோன்றிடினே.

சந்தான மணி
முற்றிற்று.

---

சுபம்.

62391
135016